கல்கி

KALKI 2-12-79

90 காசு



அலை ஓசை கருத்தரங்கு

வானதி பரிசான ரூ 1000/= பெறும் கட்டுரை

எழுதியவர்:

திருமதி மங்கையர்க்கரசி மயில் வாகனன், எம். ஏ.
துணைப் பேராசிரியை தமிழ்த் துறை.
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி

அமரர் கல்கி எழுதிய அனைத்து நாவல்களுமே தமிழ்த் தாயின் மணிமுடியில் சுடர் விடும் நல்முத்துக்கள். அம்முத்துக்களுள் மிகச் சிறந்த முத்தாக அலைஓசை விளங்குவதன் காரணம் என்னவென்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஏறக்குறைய 800 பக்கங்களை உடைய நாவல் வாசகர்களுக்கு அலுப்பூட்டாமலிருப்பதே கல்கியின் வெற்றி. அநாவசியமான வர்ணனைகளைத் தவிர்த்து, பிரசாரங்களை மிகச் சாமர்த்தியமாகப் புகுத்தி, சம்பவங்களை விரைவாக நகர்த்திக் கொண்டு போயிருப்பதும் இவ்வெற்றிக்கு அடிப்படைக் காரணங்கள் எனலாம். பரபரப்பான நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து வருவதைக் காணும்போது இதை ஒரு **நிகழ்ச்சி நாவல்** என்ற எண்ணத் தோன்றுகிறது. கதைப் போக்கோடு தொடர்பு கொண்ட நிகழ்ச்சிகள், முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகள்,' அக்கால மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் முதலியன நிறைந்து விளங்குகிறது.

ஆனால் அலைஓசை நாவலின் பின்னணியை நோக்கும்போது இது ஒரு **அரசியல் நாவ**லாகிறது. 1930–1948 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம்தான் அலைஓசையின் பின்னணி. 1930ம் ஆண்டு தொடங்கி இந்திய விடுதலை கிடைக்கும் வரையுள்ள காலப் பகுதி, தற்கால இந்திய வரலாற்றிலும், விடுதலை இயக்க வரலாற்றிலும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த காலப் பகுதி. அரசியல், பொருளாதாரம், சமூகம், இலக்கியம் முதலிய எல்லாத் துறைகளிலும் காந்தியடிகளின் செல்வாக்கு மிகுந்திருந்த காலப் பகுதி இது. இந்திய சமுதாயத்தில் வேகமான மாறுதல்கள் நிகழ்ந்த இக்காலத்தைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாவலில் அக்காலத்து நிகழ்ச்சிகள், நாட்டிலே ஏற்பட்ட கிளர்ச்சிகள் படம் பிடித்தாற்போல் கூறப்பட்டுள்ளன.

கராச்சி காங்கிரஸ், ஹரிபுரா காங்கிரஸ், 1942 ஆகஸ்ட் போராட்டம், பம்பாயில் நடந்த உப்பு சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், நேதாஜி மலாயாவில் சுதந்திர அரசாங்கம் அமைத்தது, தீவிரவாதிகளின் செயல், ஈ. வெ. ரா.வின் நாத்திகப் பேச்சு, வேவல் துரையின் திட்டம், இந்திய விடுதலை, இந்து முஸ்லிம் கலவரங்கள் காந்தியடிகளின் படுகொலை — இன்னும் எவ்வளவோ விஷயங்களை மிகத் தெளிவாகச் சொல்கிறார் ஆசிரியர். இங்ஙனம் கூறும்போது சம்பவங்களை மிகைப்படுத்தியோ, கற்பனை கலந்தோ அவர் கூறவில்லை. பாத்திரத்தின் வாயிலாகவும், ஆசிரியர் கூற்றாகவும் நடந்த நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன.

ஒரு நீண்ட பதினெட்டு ஆண்டுக் காலத்தைத் தம் கதை நடக்கும் காலமாக அமைத்துக்கொண்டு கல்கி, கதை நடக்கும் இடமாகவும் பரந்துபட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். கராச்சி, ஹரிபுரா, லாகூர், டில்லி, கல்கத்தா, பானிபட், பம்பாய், ஆக்ரா பீஹார், எனக் கதையின் நிகழ்ச்சிகள் இந்நாட்டின் எல்லாப் பாகங்களிலும் நடைபெறுகின்றன. ராணு சாங்காவிலிருந்து பானிபட் வரை, வங்கம, பஞ்சாப், இவற்றின் இயற்கை வளங்கள், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் முதலியவை பற்றிய வர்ண





கார்த்திகை விளக்கு

மண் இருளு டன் மன இருளும் நீக்கும் கார்த் திகை விளக்கை மேலட்டையில் ஏற்றுபவர் குமாரி உஷா

வண்ணப்படம் எடுத்தவர் : உத்ரா

ளைகள் நம்மை இந்தியா முழுவதையும் சுற்றி வரச் செய்கின்றன. இதனால் முகலாய சரித்திரம், இராஜபுத்திர சரித்திரம் தொடர்பான நிகழ்ச்சிகள் நாவலில் இடம் பெறுகின்றன; வங்க மக்கள், பஞ்சாபியர், தமிழர் இயல்புகளைக் கூறும் பண்பாட்டுக் களஞ்சியமாக இந்நாவல் விளங்குகிறது. இவற்றையெல்லாம் கொண்டு நோக்கினால் தமிழில் **அரசியல் வரலாற்று நாவல்** என்ற வரிசையில் இதற்கு ஓர் உயரிய இடம் என்றும் உண்டு என்பது தெளிவாகிறது. காலமும் இடமுமாகப் பரந்துள்ள இந்தக் களமே அலைஓசைக்கு ஒரு தேசிய முக்கியத்துவத்தைத் தந்துவிட்டது. எனவே வருங்காலத் தலைமுறைக்கு இது ஒரு **சரித்திர நாவலாகிவிடும்.** ஆம். சமகால நிகழ்ச்சி என்ற உணர்வு போன பிறகு இந்நாவலுக்குச் சுவை உயர்ந்துவிடும்.

நிகழ்ச்சி நாவலாக, அரசியல் வரலாற்று நாவலாக மட்டுமல்ல; சிறந்த சமூக நாவலாகவும் விளங்கும் பெருமை உடையது அலை ஓசை. அலைஓசையின் கரு இந்நாவலை ஒரு **சமூக நாவலாக்குகிறது.**

நாசகார சக்திகளுக்கும், ஆத்ம சக்திக்கும் இடையே நடைபெறும் சமூகப் போராட்டமும், அதன் இடையில் நிகழும் தனி மனிதப் போராட்டமும் இந்நாவலின் கரு. சமூகத்தி லுள்ள குறைபாடுகளான சமயப் பூசல், ஜாதிப் பூசல், சகோதரப் பூசல், அதிகார வர்க்கத்தின் ஆணவம், ஆண்களின் மன ஊசலாட்டம் இவற்றால் சமூக வாழ்வு பிற்போக்கடைவதைக் காட்டி, இத்தகைய சமூக வாழ்வினால் தனிமனிதன் பாதிக்கப்படுவதையும், அவனுடைய சிந்தனையில் ஆத்ம சக்தி வியாபித்திருந்த நிலையையும் ஆசிரியர் காட்டிச் சென்றுள்ளார். நாவல் முழுவதிலும் காந்தியின் ஆத்ம சக்தி தோன்றாத் துணையாக நிற்கிறது எனலாம். மத்திய வர்க்க பிராமண சமூகத்தை எடுத்துக் கொண்டு, அச் சமூகத்தில் ஊடுருவி நிற்கும் பிரச்னைகள், அர்த்த மற்ற — அர்த்தமுள்ள பழக்க வழக்கங்கள், அவர்களது குடும்ப வாழ்க்கை, சூழ்நிலைகள், நாட்டில் உள்ள கட்சிகள், தேர்தல் கலவரங்கள், மஞ்சள் பத்திரிகை, விவாகத்தில் வீண் செலவு என்று பரவலாக சமுதாயத்தின் எல்லா முறைகேடுகளையும் ஆசிரியர் காட்டிச் செல்வதை நோக்குகையில் இதை ஓர் உயர்ந்த சமூக நாவலாகவே எண்ணத் தோன்றுகிறது.

இன்றைய திறனாய்வாளர்கள் ஆய்வின்படி ஒரு நாவல் உத்தி முறைகளால் சிறந்திருந்தால்தான் இலக்கியத் தரமுடையது என ஏற்றுக்கொள்ள முடியும். **உத்தி முறையிலும் உயர்ந்து நிற்கிறது அலை ஓசை.**

Flash back நிகழ்ச்சிகள், முக்கிய திருப்பங்களுக்குக் கடிதங்களைப் பயன்படுத்தும் உத்தி, Dramatic Irony (திருமணம் பற்றிய செய்தி அறிந்து ஆனந்த நந்தவனத்தில் சீதா சஞ்சரித்த போது தூரத்தில் எங்கேயோ கடல் பொங்கி மலை போல் அலைகள் கிளம்பி மோதி வீழ்ந்த சப்தம் கேட்டாள் எனல்), காவடிச்சிந்து, வர்ண மெட்டு, பாரதியின் பாடல்கள் இவற்றை இசை நயத்துடன் நடுவில் அமைத்துள்ளமை, ஆர்வ நிலையூட்டும் பல மர்மங்களை அமைத்தல், (தாரிணியின் பிறப்பு மர்மம் என்ன? ரஜனிப்பூர் பைத்தியம் யார்? சீதா — தாரிணி தோற்றத்தின் ஒற்றுமைக்குக் காரணம் என்ன? மௌல்வி சாயபு யார்? சீதாவின் தந்தை எங்கேபோனார்? போன்ற மர்மங்கள் கதையின் ஆர்வ நிலையைத் தூண்டுபவை) காதலின் சிறப்பை (விளக்க லைலா-மஜ்னு, பிருத்வி ராஜ்-சம்யுக்தை, நள-தமயந்தி, ஸலீம்-அனார்கலி, ஷாஜஹான் - மும்தாஜ், நூர் ஜஹான் - ஜஹாங்கீர்) சில உப கதைகளால் விளக்கல் முதலிய உத்திகளால் இந்நாவலின் பெருமை மேலும் உயர்கிறது.

அடுத்த சிறப்பு இந்நாவலுக்கு ஆசிரியர் இட்டிருக்கும் தலைப்பு. 'அலை ஓசை' எனும் **தலைப்பு குறியீடு முறையில்** அமைந்து நாவலின் தரத்தை மேலும் உயரச் செய்கிறது. சீதாவும், சீதாவின் தாய் ராஜம்மாளும் கேட்கும் இந்த அலை ஓசை வரப் போகும் துன்பத்தை முன்னரே தெரிவிக்கும் குறிப்புப் பொருளாகக் கதையில் வருகிறது. உளவியல் முறையை யொட்டி இதனை ஆராய்ந்தால் 'அலை ஓசை'யை ஆசிரியர் படிமக் காட்சியாக அமைத்திருப்பது புலனாகும். அலை ஓசையின் உண்மையான குறியீடு — இந்திய மக்களின் உள்ளத்தே தோன்றிய சுதந்திர வெள்ளத்தின் ஓசையே.

கல்கிக்கு **நகைச்சுவை** கைவந்த கலையாகும். இந்நாவலிலும் அதற்குப் பஞ்சமில்லை. பிரசங்க சாகர உபந்நியாச பிருந்தாவனாச்சாரியாருக்கு சர்வக்ஞ சங்கத்தார் பத்மாபுரத்தில் விழா எடுத்த வைபவம், (ஏழாம் அத்தியாயம்) பங்காரு நாயுடு—பாலகிருஷ்ணன் உரையாடல் முதலியவை நகைச்சுவை காட்டும் நிகழ்ச்சிகள். நாவலில் இடம் பெறும் **வர்ணனை**களில் கல்கியின் தனித்துவம் வெளிப்படுகிறது.

'பாலகோபாலன் அன்னை யசோதையிடம் வெண்ணெய் கேட்பதற்காகத் தவழ்ந்து செல்லும்போது அவன் அரையில் கட்டியிருந்த கிண்கிணிகள் ஒலிப்பது போல் ஒலித்தது' என்று தாரிணியின் குரலை வர்ணிக்கும் போதும், 1946ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 16ம் தேதி கல்கத்தா நகரின் கலவரச் சூழ்நிலையை வர்ணிக்கும்போதும், டில்லியின்

வெள்ளி வீதியை, ஹொஷங்காபாத்தை வர்ணிக்கும்போதும் கல்கியின் எழுத்தாற்றல் புலப்பட்டு நம்மை வியப்படையச் செய்கிறது.

கதைச் சுவை அமைய வேண்டுமென்றால், வாசகர்களைத் தன்பால் ஈர்க்க வேண்டுமென்றால் ஒரு நாவலுக்கு நல்ல **பாத்திரப் படைப்பு** மிக அவசியம். அலை ஓசையின் பாத்திரப் படைப்பின் சிறப்பைப் பற்றிக் கூற வேண்டுமென்றால் அதுவே ஒரு தனிக் கட்டுரையாக அமைந்துவிடும். காந்தியம் கவைக்கு உதவாது என்று எண்ணும் — ஆசைக்கு முதவிடம் கொடுக்கும்—சபல புத்தியுள்ள சராசரி ஆண்மகன் சௌந்தரராகவன் — அவனின்று முற்றிலும் மாறுபட்ட — கல்கியின் லட்சியப் படைப்பான சூர்யா — சேவை மனப்பான்மை கொண்ட தியாகச் சுடர் தாரிணி— சராசரி இந்தியப் பெண்ணாக முதலில் தோன்றி ஒரு குணச்சித்திரப் படைப்பாகும் சீதா — தேசிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட பட்டாபிராமன் — அவன் மனைவியும், சீதாவின் தோழியும், சூர்யாவின் தங்கையுமான லலிதா என்று அறுசுவை மிக்க பாத்திரங்கள் இந்நாவலில் நடமாடுகின்றனர். இவர்கள் தவிர நாவலில் வரும் தபால்கார பாலகிருஷ்ணனிலிருந்து பத்மலோசன சாஸ்திரியார், காமாட்சி அம்மாள் வரை நாம் இவ்வுலகில் சந்திப்பவர்களே கதை மாந்தர் பலர் என்றாலும் ஒருவர்கூடத் தேவையற்றவரல்லர்.

கல்கி அவர்கள் தாமறிந்த கருத்துக்கள், தமக்குத் தெரிந்த கதைகள், தாமுணர்ந்த உணர்ச்சிகள் இவற்றைப் பாத்திரங்கள் வாயிலாக வெளியிட்டுள்ளமை இந்நாவலை வாசகர் நெஞ்சில் நிலைத்து நிற்கச் செய்கிறது. சூர்யாவுக்கும் — ராகவனுக்கும் இடையில் நடக்கும் விவாதங்களின் மூலம் உலக அரசியலையே ஆசிரியர் விமர்சிக்கிறார். ஹிட்லர், முஸோலினி குறித்தும் ஜப்பான், சீன நாடுகளைப் பற்றியும் விவாதம் படிப்பவர்களுக்குச் சுவையாக இருக்கிறது.

பலர் கண்ணுக்குக் காதல் விருந்தாகக் காட்சிதரும் தாஜ்மஹால் சூர்யாவின் கண்ணுக்குச் சிந்தனை சக்தியில்லாத மனித மந்தைகள் வியப்புடன் நோக்கும் ஒரு மூட அரசனின் தற்பெருமைச் சின்னமாகத் தோன்றுகிறது என்று, காட்டி, அழகியல் உணர்வையும் மீறிய தம் பொருளாதாரச் சிந்தனையைத் தெளிவுபடுத்துகிறார் ஆசிரியர். பாத்திரங்களின் நடுவில் நடைபெறும் உரையாடல்களில் எளிமையும், உயிர்ப்பும், யதார்த்தமும் நடமிடுகின்றன.

பாத்திர உரையாடல்கள் நடுவில் வரும் பெண் விடுதலை, வரதட்சிணைக் கொடுமை, பெண்களுக்குச் சம உரிமை பற்றிய கருத்துக்கள் இந்நாவலை ஒரு **சீர்திருத்த நாவலாக்குகிறது.** இக்கருத்துக்கள் பிரசாரமாகத் தனித்து நிற்காமல் கதைப் போக்கோடு ஒட்டி நிற்பது நாவலுக்குப் பெருமை கூட்டுகிறது.

காலையிளம் போதுபோல் மனோகரமாகத் தொடங்கும் இந்நாவல் மகாத்மாவின் புனித நினைவோடு முடிகிறது. நாவலின் முடிவு கல்கி இந்நாவலின் மூலம் மக்களுக்கு வழங்கும் செய்தியாகவே விளங்குகிறது. தபால்காரப் பாலகிருஷ்ணனின் வருகையோடு தொடங்கும் நாவல், முடிவிலும் அவன் வருகையோடு முடிகிறது. முதலும் முடிவும் இணைந்து நிற்பது சிறந்த நாவலின் பண்புகளுள் ஒன்றாகும்.

மேற்கூறிய காரணங்களால் அலை ஓசை தமிழர் நெஞ்சில் என்றும் நின்று நிலைத்து வாழும் என்று கல்கி அவர்கள் கருதியிருக்கலாம். மேலும் நாட்டின் விடுதலைக்கு உழைத்த தமிழ் எழுத்தாளர்களில் முதன்மையானவரான கல்கி விடுதலைப் போராட்ட வேள்வித் தீயில் புடம் போடப்பட்ட தேச பக்தராக நின்று இக்கதையைக் கூறியுள்ளார். இக்கால கட்டத்தில் விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டபோது அவர் பெற்ற அருமையான அனுபவங்களின் வெளியீடாக அலை ஓசை அமைந்துள்ளதால் தம் படைப்புக்களுள் மிகச் சிறந்ததாக அலை ஓசையை அவர் கருதினார் என்பது உறுதி.

காலங்கள் மாறினும் கற்போர் உள்ளத்தை விட்டகலா உயர்வுடைய காவியத்துக்கு நிகரானது 'கல்கி' அவர்களின் அலை ஓசை.

அலை ஓசை – கருத்தரங்கு

அலை ஓசை கருத்தரங்குக்கு வந்த கட்டுரைகளில் வானதி பரிசான ரூ.1000/- பெற்ற கட்டுரை தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்பட்டுள்ள பிற கட்டுரைகளை எழுதியவர்கள்:

1. **எம். ஆர். அனந்தசாயிராம்**
   22/15, சுந்தரேச சுவாமி கோயில் தெரு
   கொசப்பேட்டை, வேலூர் வ. ஆ.
   மாவட்டம் 632001

2. **எஸ். வள்ளியம்மாள்**
   104, மாடி, கனல் பாங்க் ரோடு,
   ஷி.ஐ.டி. நகர், சென்னை–600035

3. **டாக்டர் கா. செல்லப்பன்**
   ஆங்கிலத்துறை, பல்கலைக் கழக மையம்,
   திருச்சி-20

4. **ஆ. கணேசன்**
   19. பள்ளத் தெரு.
   திருச்செந்தூர் – 628215

5. **எம். ஏ. சுசீலா**
   துணைப்பேராசிரியர், தமிழ்,
   ஃபாதிமா கல்லூரி, புதூர் காட்டேஜ்
   மதர் ரோஸ் காலனி
   மதுரை-18

இவர்கள் தலா ரூ. 100/– பரிசு பெறுகின்றனர். கட்டுரைகள் கூடிய விரைவில் கல்கியில் பிரசுரமாகும்.



அஸிஃப் இக்பால் (காப்டன்)



மாஜித் கான் (துணைக் காப்டன்)

வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்

இந்தியா வந்துள்ள பாகிஸ்தான்
கிரிக்கெட் வீரர்கள்

படங்கள்: டில்லி ராஜு



ஸிகந்தர் பக்த்

வாஸிம் பாரி (விக்கட் கீப்பர்)





தலத் மிர்ஜா


ஜாவேத் மியான்தாத்





முதஸ்ஸர் நஜர்

ஸாதிக் மொஹமத்





ஜஹீர் அப்பாஸ்

எடஷாம்-உத்-தின்





தஸ்லிம் அரிப்


இம்ரான் கான்






வாஸிம் ராஜா

இக்பல் காஸிம்



Kalki Shopping Page

Kalki Shopping Page



ஸி.ஐ.ஏ. உளவாளி என்ற
குற்றச்சாட்டு
கோயா
ஆதரவாளர்கள்
கேரளத்தில் கோயா மந்திரி சபை
ஒரு வோட்டு மெஜாரிட்டியில்
ஊசலாடிக் கொண்டிருக்கிறது!
என்னப்பா, எங்கே IZ இட்லி?
'மளமள'ன்னு கொண்டாறியா..
இல்லே.. வீட்டுக்குப்போய் நானே
சமைச்சுச் சாப்பிட்டுக்கவா?
ஜனதாவுக்குத் தொகுதிகளை நிர்ணயிப்பதில் எம்.ஜி.ஆர்
அளவுக்கு மீறிய தாமதம் செய்வது பற்றி ஜனதா அதிருப்தி —
செய்தி 23-11-79



கல்கி

1979 டிசம்பர் 2
சித்தார்த்தி கார்த்திகை 16
மலர்: 38 இதழ்: 18

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

இடிதாங்கி இருக்கிறது!


பலத்த மழை, வெள்ளம் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் தமிழகத்தின் தலைநகரிலும் திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலும் அவதிக்குள்ளாகி யிருக்கிறார்கள். நிவாரணப் பணிகளில் முழு மூச்சுடன் ஈடுபடவேண்டியிருக்கும் தமிழக அரசு, இந்த மழைச்சேதம் போதாதென்று இரண்டு பலமான இடிகளையும் தாங்கவேண்டிய நிலையில் இருக்கிறது.

ஒரு இடி உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வடிவில் இருக்கிறது. 'அமெரிக்காவில் படித்து வரும் தமிழ் நாட்டு மாணவர்களுக்கும் கலப்புத் திருமணம் மூலம் பிறந்தவர்களுக்கும் மருத்துவக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்வது சட்டத்துக்குப் புறம்பானது' என்று தீர்ப்பு வழங்கியுள்ளது உயர்நீதி மன்றம். தமிழக அரசு இந்த இட ஒதுக்கீடுகளை நல்லது செய்வதாக எண்ணியே செய்திருக்கலாம். சட்டத்துக்குப் புறம்பானதாக இருக்குமே என்று சரியாக ஆலோசியாமல் செய்திருக்கலாம். அதனால் அதன் நல்லெண்ணத்தைச் சந்தேகிக்கத் தேவையில்லை. ஆனால், எதிர்மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஏற்கெனவே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அசல் தேர்வுப் பட்டியலில் திருத்தம் செய்யப்பட்டிருப்பதற்கு உயர்நீதிமன்றம் கடுமையான கண்டனம் தெரிவித்திருக்கிறதே, அதுதான் பலமான இடியாக அஇஅதிமுக அரசின் தலையில் விழுந்திருக்கிறது. இது சாதாரண விஷமத்தனம் அல்ல, நெருப்புடன் விளையாடுவது போன்ற காரியம்.

'நீதி மன்றத்தின் கவனத்தைத் திசை திருப்பி ஏமாற்றப் பார்த்தது யாராயிருந்தாலும் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று உயர்நீதி மன்றம் கூறியுள்ளது. யாராவது ஓர் அதிகாரி தாமாகவே தம் பொறுப்பில் செய்த விபரீத காரியமா அல்லது செல்வாக்குள்ள பெருந்தலைவர் யாரேனும் தூண்ட, அந்தத் துணிவில் நடந்த செயலா இது என்பது மக்களுக்குத் தெரிந்தாகவேண்டும்.

அஇஅதிமுக அரசின் தலையில் பேரிடியாக விழுந்துள்ள மற்றொரு விஷயம், மத்திய உள்துறை அமைச்சு தமிழகத்தில் நடத்திய ஒரு ஆய்வின் முடிவு. ஹரிஜனங்களுக்கு அநீதி இழைக்கும் குற்றங்கள் பற்றி ஆய்வு நடத்திய குழு, தமிழக அரசிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில், ஹரிஜனங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் 77, 78ம் ஆண்டுகளில் மிக அதிகமாகப் பெருகி விட்டது எனக் கண்டறிந்து கூறியிருக்கிறது. 1975ல் ஏழே குற்றங்கள் இழைக்கப்பட்டன. இது 76ல் 18 ஆகவும், 77ல் 54 ஆகவும் 78ல் 130 ஆகவும் உயர்ந்து விட்டது! அதாவது கடைசி ஆண்டில் முந்தைய ஆண்டை விட 240 சதவீதம் குற்றங்கள் அதிகரித்து விட்டன! குடி உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்த உருவாக்கப்பட்டுள்ள நடமாடும் போலீஸ் குழாத்தினரிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி நிலைமை அபிவிருத்தி அடைய நல்ல யோசனைகளையும் கூறியுள்ளது இந்த ஆய்வுக்குழு. சட்ட ஒழுங்குப் பிரச்னையாக மட்டும் இதனை அணுகாமல் சமூகப் பிரச்னையாக அணுகி செய்யவேண்டிய காரியங்களை விவரித்துள்ளது.

அபக்கியாதி ஏற்படுத்தியுள்ள இவ்விரு விஷயங்கள் குறித்தும் வேறு பல அம்சங்களிலும் அலட்சியமாய் இராமல் அரசு சுருசுருப்படைய வேண்டும். மக்களிடையே முதல்வரின் பிரபையும் செல்வாக்கும் அபரிமிதமானதுதான். ஆனால் அவற்றை மட்டுமே நம்பி செயல்திறனை அமைச்சரவை இழக்குமானால் நீண்டகாலம் முதல்வரின் தனிநபர் பிரபை என்ற இடிதாங்கி துணை நிற்காது.



டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.



தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
..போர்ட், பம்பாய்-400 023. ..போன்: 273831

பொன்விழா காணும் பல்கலைக்கழகம்

செட்டிநாட்டரசர் அண்ணாமலைசெட்டியார் அவர்களால் தில்லையில் தோற்றுவிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டிசம்பர் முதல் வாரத்தில் தனது பொன் விழாவைக் காண்கிறது.

இத்தருணத்தில் இப்பல்கலைக் கழகத்தோடு மாறுபட்ட கால கட்டங்களில் தொடர்பு கொண்ட நான்கு பேரைச் சந்தித்து, அவர்களது கருத்துக்களைத் திரட்டிக் கீழே கொடுத்துள்ளோம்:

இரு கால கட்டங்களில் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கும் பேராசிரியராகப் பணியாற்றிய தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்:

தமிழ் மொழியில் ஆராய்ச்சித் துறை, தமிழில் எம். ஏ., மரைன் பயாலஜியில் ஆராய்ச்சித் துறை, இசைக் கல்லூரி, போதனா மொழியாகத் தமிழை ஏற்பது ஆகியவை அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தான் முதன் முதலில் கொண்டுவரப்பட்டன. இதுதான் முதல் யூனிடரி பல்கலைக்கழகம்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, உருது, பெங்காலி ஆகிய மொழிகள் கூடிய அகராதி அதாவது தமிழ் வார்த்தைக்கு மற்ற மொழிகளில் பொருள் எழுதுவது, அதே மாதிரி மற்ற ஆறு மொழிகளுக்குமாக அகராதி வெளியிட நான் இருந்தபோது முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. முடிந்து வெளிவந்தால் பெரும் சாதனையாக இருக்கும். நான் பணியாற்றிய காலத்தில் ஆசிரியர் — மாணவர் உறவு நிலை மிகவும் சுமுகமாக இருந்தது. 1958ல் பொறியியல் மாணவர்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளுக்கு மாபெரும் வேலை நிறுத்தம் ஒன்றைச் செய்தனர். ஆனாலும் ஆசிரியர்களுக்கு நல்ல மரியாதை இருந்தது.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது என்பது அப்போதும் உண்டு. சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டதும் மூட நம்பிக்கைகளை ஒழிக்கப் பெரியார் தலைமையில் அணிவகுத்ததும் அன்றைய தினங்களின் முக்கிய அம்சம்.

கல்லூரியில் பணியாற்றும்போதே திரு ஏ. வி. செட்டியார் நமது சட்ட மன்ற மேலவைக்கு அங்கத்தினராகத் தேர்தலுக்கு நின்றார். இதனால் கல்வி நிர்வாகத்துடன் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக அவர் ராஜிநாமாச் செய்தார். அவரை மறுபடியும் கல்லூரியில் சேரச் செய்வதற்காக மாணவர்கள் நடத்திய போராட்டம் இருக்கிறதே ...அப்பப்பா...! ஆசிரியர்களிடம் தான் அவர்களுக்கு எவ்வளவு பாசம், பக்தி என்று திகைக்க வைக்கும்படி இருந்தது. நிர்வாகம் தான் அவரை வெளியேற்றி விட்டது என்று நினைத்து அந்த அளவு போராடினர். மறக்கமுடியாத நிகழ்ச்சி.











✖ ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார்
✖ மீனாட்சி சுந்தரனார்
✖ அன்பழகன்

✖ ஆர். ஆர். ராமகிருஷ்ணன்
✖ ஆர். ரகுபதி

பாண்ட்ஸ் (இந்தியா) நிறுவனத்தில் உற்பத்தி மானேஜராகப் பணியாற்றுபவரும், அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் 1963 முதல் 1965 வரை பொறியியல் எம். எஸ்ஸி. பயின்றவருமான திரு ஆர். ரகுபதி:

சர் சி. பி. ராமசாமி ஐயர் துணைவேந்தராக இருந்த சமயம். அவர் மாணவர்களின் ஏகோபித்த நன்மதிப்பைப் பெற்றிருந்தார். சொல் வளமும், கருத்தாழமும் பின்னிக் கிடக்க அவர் ஆற்றும் சொற்பொழிவுகளை மாணவர்கள் அமைதியுடன் கேட்டு மகுடிக்குக் கட்டுண்ட நாகம் போல் இருக்கும் காட்சி இன்னமும் என் கண் முன் நிழலாடுகிறது.

ஆயிரம் அரசியல் வேற்றுமை இருந்தாலும் மாணவர் என்ற முறையில் சிறந்த ஒற்றுமை நிலவத்தான் செய்தது.

1973ம் ஆண்டு முதல் 1978 ஆண்டு வரை அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பயின்று தற்போது 'ஹிந்து' நிறுவனத்தில் பொறியியல் வல்லுநராகப் பணியாற்றும் திரு ஆர். ஆர். ராமகிருஷ்ணன்:

அண்ணாமலை பல்கலைக் கழகம் சண்டை சச்சரவு மிகுந்த கல்லூரி என்று ஓர் அபிப்பிராயம் பொதுவாகப் பரவிக் கிடக்கிறது. ஆனால் ஹாஸ்டலில் வசித்து நான் படித்த நாட்களில் பெரிதாக அப்படியொன்றும் அமர்க்களம் நடக்கவில்லை.

நான் ஒரு 'டிபிகல்' மாணவனாகத்தான் இருந்திருக்கிறேன். பொறுப்பின்மை, அவசரப் படிப்பு, கடைசி நிமிஷ முஸ்தீபுகள், ஹாஸ்டல் அரட்டை, நடு நிசி தேநீர்— என்று அங்கு இருந்தேன்.

பொறியியல் துறையில் 'கோ—எஜுகேஷன்' இடையாது. இது ஒரு குறைதான்! ஆனாலும் மற்ற துறை மாணவிகளைச் சீண்டி, வேடிக்கை செய்யாமல் நாங்களும் இருந்ததில்லை. அவர்களும் தமாஷாக எடுத்துக் கொள்வார்கள்.

'ராகிங்' காரணமாக சீனியர்—ஜூனியர் மாணவ மனஸ்தாபங்கள் எழும். பிறகு அடங்கிவிடும்.

லேபரடரி, லைப்ரரி, ஹாஸ்டல் மெஸ் ஆகியவை சம்பந்தமாக சிறிய வெதும்பல்கள் உண்டு. இப்பல்கலைக் கழகத்தின் அளப்பரிய பெருமைகளோடு ஒப்பிடும்போது இவை மிகச் சாதாரணமானவை.

1939 முதல் 1944 வரை அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பயின்று ஆனர்ஸ் பட்டம் பெற்று வெளிவந்த பேராசிரியர் க. அன்பழகன்:

தென்னாற்காடு — தஞ்சை மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை நடுத்தரக் குடும்பப் பிள்ளைகட்கு உயர் கல்வி பெற ஒரு பெரும் வாய்ப்பாக இது அமைந்தது. உள்ளுறை மாணவர்க்கான பல்கலைக் கழகம் (Residential University) என்னும் முறையாலும், தமிழ் மொழிப் பயிற்சி, ஆராய்ச்சி, கீழ்த்திசைக் கலை, மொழி வளர்ச்சி ஆகியவற்றுக்கு முதன்மையான இடம் வழங்கியது என்பதாலும் — சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அமையாத சில தனிச் சிறப்புக்களைப் பெற்றது அண்ணாமலை பல்கலைக் கழகம். இப்பல்கலைக் கழகத்தின் சூழலும் அமைப்பும் காண்போர் உள்ளத்தில் ஒரு பெருமித உணர்வை ஏற்படுத்துவன. இங்கு துணை வேந்தர்களாக வீற்றிருந்த பெருமக்கள் பலரும் — இதன் புகழை உயர்த்தக் காரணமாயினர்.

சர் சாமுவேல் ரங்கநாதன், ரைட் ஆனரபிள் சாஸ்திரியார், சர் கே. வி. ரெட்டி, பேராசிரியர் எம். ரத்தினசாமி, டாக்டர் மணவாள இராமானுசம், சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், சர் சி. பி. ராமசாமி ஐயர் முதலாக, இந்நூற்றாண்டின் இணையற்ற வித்தகர்கள் பலர் இப்பல்கலைக் கழகத்தை வழிநடத்தியது இதன் பல துறை வளர்ச்சிக்கும் ஏதுவாயிற்று.

1937ம் ஆண்டு முதல் உருவான இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் உணர்வை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எதிரொலித்தது. 1941ம் ஆண்டு முதல் தனித் தமிழ் இயக்கம் —தமிழிசை இயக்கம் — ஆகியவற்றிலும் மாணவர்கள் ஆர்வம் கொண்டனர்.

அக்காலத்தில் தேசிய இயக்கத் தலைவர்களைத் தவிர பிற இயக்கத் தலைவர்களைப் பல்கலைக் கழகத்தில் பேசுவதற்கும் அழைக்க முடியாத ஒரு நிலை இருந்தது. தமது திறம் மிக்க பேச்சாற்றலால் இந்நிலையை மாற்றிய பெருமை பேரறிஞர் அண்ணாவைச் சாரும்.

அண்ணா வந்தார், பேசினார், வென்றார் என்று கூறும் நிலை அன்று. அதன் பின்னர் முதலமைச்சராக உயர்ந்து — பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தியது வரை பலமுறை அங்கு வந்தார்.

அண்ணா வந்த பின்னர் தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் மற்றும் பலரும் அங்கே அழைக்கப்படுவது இயல்பு ஆயிற்று. அண்ணாவை முதன் முதல் அழைத்தபோது அந்த மன்றத்தின் செயலாளராக இருந்தவன் நான்.

1944ல் நான் மாணவனாக இருந்தபோது உருவான இந்தி எதிர்ப்பு இயக்க ஆர்வம் தொடர்ந்து 1965ல் மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் அண்ணாமலை பல்கலைக் கழக மாணவர்களும் முனைப்போடு ஈடுபட்டு இராசேந்திரன் எனும் மாணவன் உயிர்த் தியாகம் செய்யும் அளவுக்கு வளர்ந்தது.

தமிழ் நாட்டு மாணவர்களில் முற்போக்குச் சிந்தனைக்கும் வேண்டும் காலத்தில் போராட்டத்தில் குதிப்பதற்கும் அண்ணாமலை மாணவர்கள் பெயர் பெற்றவர்கள். கல்வியில் நாட்டம் செலுத்துவதிலும் சளைத்தவர்கள் அல்ல.

— பேட்டி; **நாயகன்**

அவன் : ஆபீஸ் டயத்தில் தூங்கியதற்காக எனக்கு ஒரு இன்க்ரிமெண்ட் கட்! ராமசாமிக்கு இரண்டு இன்க்ரிமெண்ட் கட்!

இவன் : ராமசாமிக்கு மட்டும் ஏன் கூடுதலாக ஒரு இன்க்ரிமெண்ட் கட்...?

அவன் : அவன் குறட்டை விட்டான்... நான் குறட்டை விடலே!

—உ. ராஜாஜி




பாலை வெறுத்த ராஜு

உவந்து பருகுகிறான் நான் நியூட்ரமுல் சேர்த்தபின்.



இன்றோ நியூட்ரமுல் 'வஸ்தாது' அவன்தான்.

குழந்தைகளைப் பால் குடிக்க வைப்பது பெரும்பாடாக இருப்பானேன். இல்லையென்கிறார்கள் பல்லாயிரம் தாய்மார்கள். அவர்கள் வாழ்த்துவது நியூட்ரமுல் இனிமை. ருசிக்கு ருசி. பலத்துக்கு பலம்... கோக்கோ, பால்,



மால்ட் யாவும் செறிந்த நியூட்ரமுல்... பலேருசி. வளப்பமாக அதிலுள்ளவை புரதச்சத்துக்கள் வைட்டமின்கள், உலோக தாதுக்கள் வளரும் உடம்புக்கு போஷாக்கு. ருசி–மயமான நியூட்ரமுல்... பருகப் பருகப் பலம் பெருகும் பெருகும்.

மார்க்கெட் செய்வோர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட், ஆனந்த், குஜராத்

அமுல் படைப்பு

நியூட்ரமுல் பருகப் பருகப் பலம் பெருகும் பெருகும்.

daCunha GCM-16 TM

வட்டமேஜை



"சலன்" படம் எங்கே?

• "கல்கி திரை இசைச் சிறப்பிதழ்" படித்தேன். ரசித்தேன். அப்பப்பா! எத்தனை இனிக்கும் விஷயங்கள். மிகவும் அற்புதமான சிறப்பிதழுக்குச் சிகரமாக அமைந்தது இளையராஜாவின் அட்டைப் படம். திரை இசைக்காக ஒரு சிறப்பிதழை மிகவும் சிரத்தையுடன் தயாரித்து வெளியிட்டதற்காக என் மனப்பூர்வமான பாராட்டுக்கள்.

தாம்பரம் — இரா. தியாகராஜன்

• 'கல்கி' திரை இசை மலர் கண்டேன். 'கல்கி'யின் சிறப்பான தரத்துக்கு இது தேவைதானா? வர்த்தக ரீதிக்காகப் பல வழிகளில் பல பத்திரிகைகள் இருக்கின்றன. 'கல்கி' ஒரு தனித்த நிலையில் விளங்கியது போய், அதுவும்....

சென்னை-93 — கோவி மணிசேகரன்

• தீபம் நா. பார்த்தசாரதியும் கங்கை அமரனும் பங்கேற்ற உரையாடலின்போது கங்கை அமரன் 'மச்சானைப் பார்த்தீங்களா...?' என்ற பாடலை எழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'அன்னக்கிளி'யில் இடம்பெற்ற அப்பாடலை எழுதியது பஞ்சு அருணாசலம்தான்.

போடிநாயக்கனூர் — ரவிராஜ்

• தமிழ்ப் படப் பாடல்களில் மிகவும் குறைந்த நேரமே பாடும் பாடலாக "இரவுப் பாடகன் ஒருவன் வந்தான்" என்ற பாடலைக் குறிப்பிட்டுள்ளது. ஆனால், "மோட்டார் சுந்தரம் பிள்ளை" என்ற (ஜெமினியின் தயாரிப்பு) படத்தில் வரும் ராதா ஜெயலெட்சுமி பாடியுள்ள "மனமே முருகனின் மயில் வாகனம்" என்ற பாடல் ஒன்றரை நிமிடம்தானே ஒலிக்கிறது!

கொடுமுடி — ந. சேதுராமன்

• கமலஹாசன் தமக்குப் பிடித்த பாடல் என்று குறிப்பிட்டுள்ள "தேசுலாவுதே" கணவனே கண்கண்ட தெய்வம் திரைப் படத்தில் ஒலித்தது அல்ல. மணாளனே மங்கையின் பாக்கியம் படத்தில் இடம் பெற்றது.

பல கடிதங்கள் வரவேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே அப்படிக் கூறியுளாரோ?

சென்னை—10 — வி. ஆர். கிருஷ்ணன்

• கமலின் Blowup தான் உள்ளது. Poster ஐக் காணவில்லை. காகிதப் பஞ்சமா? அல்லது கமலுடன் தகராறு?

கல்லிடை — ஜெய்ஸ்ரீ

• கமலின் Blowup இதழுடன் இணைத்து வெளியிட்டிருப்பது நல்ல உத்தி. படமும் கச்சிதமாக இருந்தது. தொடர்ந்து இதே போல வெளியிடுங்கள்.

வேலூர் — வேணுகோபால்

• திரை இசை சம்பந்தப்பட்ட செய்திகளில், திருமதி லதா மங்கேஷ்கர் என்று குறிப்பிட்டுள்ளது. அவர் 'திருமதி' அல்ல.

வேலூர் — ராம்தாஸ்

• திரை இசை சிறப்பிதழை சிறப்பாகவும் நிறைவாகவும் தயாரித்தளித்த 'சலனின்' அற்புதமான பணியைப் பாராட்டும்போது ஒரு பெரும் குறை, அவருடைய புகைப் படத்தை வெளியிடாததுதான்!

பெங்களூர்-53 — 'மலர் மடந்தை'

[✖ மேலே அவர் படம் காண்க. —ஆசிரியர்]

• திரை இசைச் சிறப்பிதழ் நன்றாகத்தான் இருந்தது. அதற்காக காஞ்சி பெரியவாளின் அருள்வாக்கைக் கடைசிப் பக்கத்துக்குத் தள்ளிவிட்டது மனசுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது.

சென்னை-20 — சி. ஆர். நாகராஜன்

• சலன் திரு டி. எம். எஸ்., திரு சீர்காழி அவர்களைப் பற்றிக் குறிப்பிடாதது ஏன்? சலனை மன்னிப்புக் கேட்கச் சொல்லவும்.

சென்னை — வி. சம்பத்

[✖ மன்னிப்புக் கோருவதற்குப் பதில்தான் திரை இசை உலகில் சம்பந்தப்பட்டிருக்கும் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்து அந்த இதழிலேயே குறிப்பு வெளியிட்டிருக்கிறோமே. —ஆசிரியர்]

• இளையராஜா கர்நாடக இசையைத் தொடவில்லை என்பது உண்மையில் சிரிப்புத் துணுக்குத்தான். ஏனென்றால் அவர் இன்று புகழ் பெறுவதற்குக் காரணமே கர்நாடக ராகங்களில் ஸ்வரங்களைத் தகுந்தபடி பிரயோகப்படுத்தி இனிமையும் புதுமையுமான மெட்டுக்களைத் தருவதுதான். இதற்குப் பல உதாரணங்களைத் தர முடியும்.

சென்னை-14 — எஸ். பாக்யலக்ஷ்மி

• எனக்குத் தெரிந்த அளவில் எம். ஜி. ஆர். முதன் முதலாகப் பாடியது நவீன சாரங்கதாராவில் எம். கே. டி. யுடன் சேர்ந்து. மேக மண்டலம் தாண்டி என்று ஒருவர் ஆரம்பிப்பார். மற்றவர் நீலமுகிலிடை என்று தொடங்குவார்.

பம்பாய் — எம்.ஆர். நாராயணன்

• தங்கள் தலையங்கம் அபத்தமானது. ஆளும் கட்சியின் ஊழல்களை எதிர்க் கட்சித் தலைவர் கூறாது வேறு யார் கூற வேண்டும்? நீங்களே இவர்தான் ஊழலைப் பற்றிப் புகார் செய்ய வேண்டுமென்று அறிவித்துவிடுமே!

திருச்சி-13 — பூ. மருதை

• 'ஒலிப் பதிவில் ஒப்பற்ற சாதனைகள்' என்ற கட்டுரை கண்டேன்.

Synthesiser எனப்பட்ட கம்ப்யூட்டரால் இயங்கும் இசைக் கருவி ஒன்று தற்சமயம் டெல்லி International Trade Fair தூரத் தொடர்பு அரங்கில் இருக்கிறது.

ராகங்களைக் குறிப்பிட்டால் ஆலாபனை செய்வதும், பக்க வாத்தியமாகச் செயல்படுவதும் சில முக்கிய விசேஷங்கள்.

புதுதில்லி — நாராயணமூர்த்தி



அத்தியாயம் 19

'நீயும் ஒரு கப்பல்'


காமத்தின் வலிய கயிற்றால் பிணைக்கப்படும் உள்ளங்களுக்கு இருட்டு வெளிச்சமாகிறது, வெளிச்சம் இருட்டாகிறது. இச்சை விளைவிக்கும் மாற்றம் இது. ஆகவே காஸண்ட்ரா கப்பலில் காப்டன் இங்கலண்டின் அறையில் பரஸ்பர உணர்ச்சி வேகத்தில் பின்னிக்கிடந்த இருவரும் விளக்கு அணைந்ததையோ அந்தகாரம் சூழ்ந்துவிட்டதையோ அடியோடு கவனிக்கவில்லையென்றால், அதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்று ராணி மெதுவாக அவனுக்கு மந்திரம் ஓதிய போதே உணர்ச்சிக் காற்றினால் அலைக்கப்பட்ட அனந்த், அவள் இதழ்களை வசப்படுத்திக் கொண்டதுடன் இடையைச் சுற்றியிருந்த இருகைகளில் இடது கையைத் தூக்கி அவள் கழுத்தையும் வளைத்தான்.

ராணி பேச்சை இழந்தாள், அத்துமீறு முன்பாகத் திமிறிக் கொள்ளும் சக்தியையும் இழந்தாள். கழுத்தை வளைத்த இடது கை அவளை அவன் முகத்தை நோக்கி இழுத்ததும், அவள் அழகிய கபோலம் அந்த ஆண் மகனின் முரட்டுக் கன்னத்துடன் இழைந்ததும், அவன் வலது கரம் அவள் இடையின் பின்புறத்தை இறுக்கிப் பிடித்ததும், எல்லாமே அவள் சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டதால் அவள் பெருமூச்சு விட்டாள். அந்தப் பெருமூச்சு பெரும் புயலாக அவன் உள்ளத்தை உலுக்கி விடவே அவன் செயலிழந்து கிடந்தான் அவள் மடியில் சில விநாடிகள். இயற்கையின் மற்றொரு புயல் அந்த உணர்ச்சிப் புயலுடன் போட்டி போடாதிருந்திருந்தால் அவர்கள் உணர்ச்சிகளின் முடிவு என்னவாயிருக்குமென்பதைச் சொல்ல முடியாது. திடீரென்று வெளியே 'ஹோ' என்று எழுந்த பெரும் சப்தம், கப்பல் எதிர்பாராமல் ஆடிய வேகம், இரண்டும் சட்டென அவர்களைப் பிரித்ததால், முதலில் சுரணை அடைந்த அனந்த் அவள் மடியிலிருந்து துள்ளி எழுந்து மேஜை மீதிருந்த அவளைக் கீழே விழாதபடி தாங்கிப் பிடித்தான். அப்படிப் பிடிக்க வேண்டிய அவசியமில்லை யென்பதை அவனுக்கு உணர்த்த அவளும் தனது இருகால்களையும் தரையில் ஊன்றி மேஜையை உறுதியாக ஒரு கையால் பிடித்துக் கொண்டாள்.

அறை இருபுறமும் மாறி மாறி எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தது. வெளியே காற்றின் வேகம் ஏறிக் கொண்டிருந்ததால் ஆட்டம் அதிகமாக மேஜை மீதிருந்த மண்ணெண்ணெய் விளக்குச் சட்டென்று சாய்ந்து மேஜை மீது உருண்டது. அதை வேகமாக இடது கையால் பற்றிக் கொண்ட அனந்த் "ராணி! மெள்ளக் கட்டிலுக்குச் சென்றுவிடு. இந்த விளக்கைக் கொளுத்திக் கொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு அவள் தோளை ஆதரவாக வலது கையால் ஒருமுறை அழுத்தி விட்டு, இடது கையில் அணைந்த விளக்குடன் அறை ஆட்டத்தைச் சமாளித்துக் கொண்டு வெளியே சென்றான்.

மாலுமிகள் தளத்தில் அங்குமிங்கும் தள்ளாடியும், விழுந்தும் எழுந்தும் திரிந்து கொண்டிருந்தார்கள். மும்முரமாகச் சூழ்ந்

இருந்த பணியின் விளைவாக அவர்களைச் சரியாகப் பார்க்க முடியவில்லையென்றாலும், அவர்கள் பாயின் கயிறுகள் அவிழாதிருக்கின்றனவா என்பதைப் பரிசோதித்துக் கொண்டிருந்ததையும், காற்றின் விளைவாகப் பயங்கரமாகச் சுற்றிலும் எழுந்த அலைகள் வாரி தளத்தில் கொட்டிய நீர், பக்கத்துளைகள் வழியாக வெளியே செல்ல அந்தத் துவாரங்களிலிருந்த அடைப்புகளை நீக்கிக் கொண்டிருந்ததையும் கவனித்த இந்திரஜித் அனந்த், காப்டன் இங்கலண்டும் டெய்லரும் திறமைசாலிகளான மாலுமிகளைத்தான் வைத்திருக்கிறார்கள் என்று சிலாகித்தான் உள்ளூர. அவனுக்கிருந்த கடல் ஆசையில், கையில் மட்டும் அந்த விளக்கு இல்லாதிருந்தால் அவனும் அந்த மாலுமிகளில் ஒருவனாக அவர்களுடன் சேர்ந்து கப்பல் காப்புப்பணியில் இறங்கியிருப்பான். ஆனால் விளக்கை ஏற்ற அவசியமிருந்தாலும், அவன் எண்ணங்கள் இங்கலண்டின் அறையில் குழல் விரித்து நின்று கொண்டிருந்த ராணியையும், மேஜைமீது விட்டுவந்த துலாஜியின் கசங்கிய காகிதத்தையும் வட்டமிட்டுக் கொண்டிருந்தாலும் கையில் விளக்குடன் சற்று வேகமாகவே கால்களை வைத்து எதிரேயிருந்த டெய்லரின்



அறையை நோக்கி நடந்தான். அறை தாளிடப் பட்டிருந்ததால் இருமுறை பலமாகத் தட்டவும் செய்தான்.

சிறிது நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த டெய்லர் ''ஹூ த டெவில் ஆர் யூ?'' என்று அதட்டவே ''யுவர் ப்ரெண்ட்'' என்று அறிவித்துவிட்டு டெய்லரையும் உள்ளே தள்ளித் தானும் உள்ளே சென்று கதவைச் சாத்தினான்.

உள்ளேயிருந்த விளக்கு கூரையிலிருந்து ஆடிக் கொண்டிருந்தாலும் அது விழ முடியாதபடி சங்கிலிகொண்டு பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்ட இந்திரஜித் அங்கு இங்கலண்டும் இருந்ததைக் கவனித்தான். விளக்கு பெரிதும் ஆடியதால் அதன் வெளிச்சம் இங்கலண்டின் முகத்திலும் டெய்லரின் முகத்திலும் மாறி மாறி இடது பக்கமும் வலது பக்கமுமாகப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்த அனந்த், நீண்ட விவாதத்துக்கோ விளக்கத்துக்கோ அது சமயமில்லை யென்பதை உணர்ந்து ''இந்த விளக்கைக் கொளுத்த வேண்டும்'' என்று கூறினான் டெய்லரிடம்.

''தீப்பெட்டி இங்கிருக்கிறது'' என்று மேஜையின் டிராயரைக் காட்டினான் டெய்லர்.


மேஜையிடம் தள்ளாடிச் சென்று டிராயரைத் திறந்து தீப்பெட்டியை எடுத்து அதைக் கொண்டு மிகுந்த எச்சரிக்கையுடன் விளக்கைக் கொளுத்திக்கொண்ட அனந்த் ''காலையில் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான் தனது அறைக்கு. அறைக்குள் வந்ததும் கதவை ஒரு காலால் உதைத்து விட்டு கூரையைப் பார்த்தான். விளக்கைத் தொங்க விட அங்கு வளையமும் கட்ட இரும்புச் சங்கிலியும் இருந்ததால் மேஜை மீது ஏறி விளக்கைக் கூரைமீது தொங்க விட்டுப் பிணைத்துவிட்டு இறங்கிய பின்பு, மேஜை நடுவிலிருந்து ஓரத்துக்குப் போய்க் கிடந்த காகிதச் சுருளை எடுத்துத் தனது மடியில் செருகிக் கொண்டான்.

அவன் விளக்கை ஏற்றிக்கொண்டு இரும்பியதிலிருந்து அவன் செய்த ஏற்பாடுகளையெல்லாம் கவனித்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாள் ராணி. அப்பொழுதும் விரிந்த குழலை முடிக்கவில்லை அவள். ''விரி குழல் பைந்தொடி நாணி வேத்தவையில் முறையிடு நாள்'' என்று வில்லிபுத்தூரர் வர்ணித்த பாஞ்சாலியைப் போலக் காட்சி தந்தாள். இருவருக்கும் ஒரே வித்தியாசந்தான். பாஞ்சாலி நாணத்துடன் கோபமும் கொண்டிருந்தாள் அன்று. இன்று இவளுக்கு, நாணம் மட்டுமே மிகுந்திருந்தது, ஏற்கெனவே ஏற்பட்டுவிட்ட நிகழ்ச்சிகளால். அன்று அவள் உறுதியான நிலத்தில் நின்றிருந்தாள். இன்று இவள் ஆடும் மரக்கலத்தில் அத்துடன் தன் அழகிய உடலும் ஆட நின்றிருந்தாள். அன்று அவள் மனத்தில் சலனமில்லை, சினமிருந்தது. இன்று

இவள் மனத்திலும் சலனமில்லை, சபலம் இருந்தது. அந்தச் சபலம் மந்தகாசத்தைப் படரவிட்டது இவள் எழில் வதனத்தில்.

இப்படி குழல் அவிழ்ந்த பின்பும் தோளின் இருபுறத்திலும் அது பிரிந்து தொங்க இதழில் இளநகையுடன் நின்ற ராணியை உற்று நோக்கிய இந்திரஜித் அனந்த் ''ராணி! விடியும் நேரம் நெருங்கி விட்டது. வெளியே பெரும் பனியிலும் சிறிதளவு வெளிச்சமும் தெரிகிறது. நீ கொஞ்ச நேரம் படுத்து உறங்கு'' என்று கூறினான்.

இதைச் சொன்ன அனந்த் அவளருகில் வந்து குழல்களைச் சிராசு எடுத்து இடது கையை வைத்து வளைத்து முடிந்தும் விட்டான். அவன் குழலை மிக அழகாக



முடிந்து விட்டதைக் கண்ட ராணி பின்புறமாக அவன் மீது சாய்ந்து கொண்டு சொன்னாள் ''இதில் எத்தனையோ பரிச்சயமுண்டு போலிருக்கிறது?'' என்று.

இந்திரஜித் அனந்த் அவள் கேள்வியைப் புரிந்து கொள்ளாததுபோல் ''எதில்?'' என்று வினவினான்.

''குழலை முடிவதில்'' என்ற ராணி நகைத்தாள் மெதுவாக.

அனந்தும் நகைத்தான். ''இந்தச் சிறு அலுவலுக்கு முன்பரிச்சயம் வேண்டுமா?'' என்றும் வினவினான்.

''வேண்டாமா?''

''வேண்டாம். கப்பல்களில் பாய்க்கயிறுகளை எத்தனையோ முறை சுற்றிப் பந்தாகக் கட்டியிருக்கிறேன் இப்படி!''

''நான் என்ன கப்பலா?''

''அப்படித்தானிருக்க வேண்டும்.''

''புரியவில்லை நீங்கள் சொல்வது!''

''உன் பெயரே கப்பல் பெயரைப் போல் தொனிக்கிறது. ஆகவே உன்னையே நான் கப்பலாக்கிக் கொண்டால் என்ன?''

இதைக் கேட்டதும் ராணி கப்பலின் அத்தனை ஆட்டத்திலும் அவன் மீது பலமாகச் சாய்ந்தாள். அவன் தன் கைகளால் அவள் தோள்களைப் பிடித்து நிலைப்படுத்தினான். நிலைப்படுத்தினானே தவிர பின்புறமாகச் சாய்ந்து நின்ற அவளை அகற்ற முடியவில்லை. அவன் உணர்ச்சிகள் அவள் உடலழகால், அழகின் எழுச்சிகளின் இணைப்பால் பெரிதும் கிளறப்பட்டன. அந்தச் சமயத்தில் அவள் கேட்டாள்: ''அந்தக் கப்பலுக்குத் தலைவன் வேண்டுமே, அதைச் செலுத்த மாலுமிகள் வேண்டுமே துணை புரிய'' என்று.

''தலைவன் இருக்கிறான்; மாலுமிகள் தேவை



எழுத்தாளர்: காகிதக் கப்பல்னு ஒரு சிறு கதை எழுதி மேஜை மேல் வச்சிருந்தேனே... எங்கே அது...?

மனைவி: எனக்குத் தெரியாது! வாசலில் மழைத் தண்ணீரில் கப்பல் விட்டுக்கிட்டிருக்கிற உங்க மகனிடம் போய்க் கேளுங்க!

அவர்: பேய் மழையால் என் கடையிலிருந்த வெல்ல மூட்டைகளெல்லாம் கரைஞ்சு ஒண்ணுமே யில்லாமே போயிடுச்சு ஸார்!

அதிகாரி: ஸாரி! வெள்ள நிவாரண நிதி வழங்கும்படிதான் எங்களுக்கு உத்திரவு... வெல்ல நிவாரண நிதி நாங்க தரமுடியாது!

அவன்: எங்க பேட்டையில் வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்ட அமைச்சர்....

இவன்: என்ன செய்தார்...?

அவன்: அப்படியே மழைச்சுப்போய் நின்னுட்டார்!

மனைவி: எதுக்கு சின்னப்பிள்ளை மாதிரி மழையில் நனைஞ்சிக்கிட்டு நிக்கிறீங்க...?

எழுத்தாளர்: மழை ஜோக்ஸ் எழுத அப்படியாவது மூட் வருதான்னு பார்க்கிறேன்!

அவன்: மழையில் நனைகிறபோதெல்லாம் ராமசாமியை மனத்திற்குள் திட்டிக்கொள்வேன்!

இவன்: யார் அது ராமசாமி...?

அவன்: ஆறு மாதத்திற்கு முன் என் குடையை இரவல் வாங்கிய பாவி!

அவன்: குடையை மட்டும் யாருக்கும் இரவல் தரமாட்டேன்!

இவன்: ஏன்...?

அவன்: யாருக்குக் கொடுத்தீங்க... ஏன் கொடுத்தீங்க... எதுக்குக் கொடுத்தீங்கனு என் மனைவி 'குடை'ஞ்செடுத்துடுவாளே என்னை!

யில்லை'' என்று கூறிய அனந்த் சட்டென்று என்ன காரணத்தாலோ நிமிர்ந்து நின்றான். தன்னிடமிருந்து அவளை விலக்கவும் செய்தான்.

அவள் அவனிடமிருந்து நகர்ந்து பிரிந்து திரும்பி அவனெதிரில் நின்று நோக்கினாள் ஏமாற்றப் பார்வையுடன். ''ஏன்? என்ன?'' என்றும் வினவினாள்.

''நான் ஒரு முட்டாள்'' என்றான் அனந்த்.

''நானுந்தான். இந்தச் சமயத்தில் எல்லோருமே அப்படித்தான்'' என்றாள் ராணி.

''இல்லை இல்லை. நான் அடிமுட்டாள். உன்னிடம் சொல்லவில்லை'' என்றான் வருத்தம் தொனித்த குரலில்.

அவன் சொன்னதை அவள் தவறாகப் புரிந்து கொண்டதால் அவள் சிறிது பலமாகவே நகைத்தாள். ''இன்னும் சொல்ல வேண்டியது ஏதாவது பாக்கி இருக்கிறதா?'' என்று கேட்டாள் நகைப்பினூடே, நாணம் மிகுந்த குரலில்.

அவள் பேச்சின் அர்த்தத்தை அனந்த் புரிந்து கொண்டான். ஆகவே அவளைத் திருத்த முற்பட்டு ''அதைச் சொல்லவில்லை நான்'' என்றான்.

''எதைச் சொல்கிறீர்களாம்?'' என்று கேட்டாள் ராணி.

''இப்படி வா'' என்று அவளைப் பிடித்து அழைத்து நாற்காலியில் உட்கார வைத்தான். தன் சட்டையிலிருந்த காகிதச் சுருளை எடுத்து அவளிடம் கொடுத்து ''இதைச் சொன்னேன். உன்னைப் துவாஜி கொடுத்த காகிதத்தை மறந்தேன். முக்கிய அலுவலை மறந்தேன்'' என்று கூறினான்.

''என்னலவா?''

''ஆம்.''

''நான் வெறும் கப்பல்தானே?''

''இதுவும் கப்பலைப் பற்றியதுதான்.''

''அப்படியானால் இந்தக் கப்பலை மறந்து விட்டீர்கள்?''

''இல்லை. காகிதச் சுருளைப் பிரித்துப் பார்'' என்ற இந்திரஜித் அவளுக்குப் பக்கத்தில் வந்து நின்று காகிதச் சுருளை அவளிடமிருந்து வாங்கி மேஜை மீது வைத்துப் பிரித்தான். ''காற்றில் பறக்கப் போகிறது. ஜாக்கிரதையாகப் பிடித்துக்கொள்'' என்று கூறி அவள் இரு கைகளையும் பிடித்துக் காகிதத்தின் இரு பக்கங்களிலும் வைத்தான். ''இப்பொழுது பார்'' என்றும் சொன்னான்.

ராணி காகிதத்தை ஊன்றிப் பார்த்தாள். பார்த்துப் பிரமித்தாள். அதுவரை புரியாத பல மர்மங்கள் அவளுக்குப் புரிந்தன.

அவளுடன் குனிந்து காகிதத்தை நோக்கிய அனந்த். ''ராணி! இப்போது புரிகிறதா? நீயும் ஒரு கப்பல். உன்னைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது இந்தத் திட்டம்'' என்று அவள் காதில் முணு முணுத்தான். ராணி அவன் சொற்களைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவள் அழகிய விழிகள், உணர்ச்சிகள் எல்லாமே எதிரே விரிந்து கிடந்த காகிதத்தில் புதைந்து கிடந்தன.

(தொடரும்)


பெண்கள் தங்கள்
மனோபாவங்களை
அநேக அழகான வழிகளில்
வெளிப்படுத்துகிறார்கள்.
விமல்
அவற்றில்
ஒன்று!
VIMAL
A RELIANCE PRODUCT



பதில் சொல்ல முடியாத கேள்விகள்



கார்த்திகா ராஜ்குமார்

அவன் — என் மகன், திலீபன் என்னவோ சாதாரணமாகத்தான் கேட்டுவிட்டுப் போய் விட்டான்.

அந்தக் கேள்வியின் கடூரம் என் மனத்துள் இறங்கிக்கொண்டு, மனம் கனத்துப்போய், குழம்பிப்போய் அவன் கேட்டுவிட்டுப் போன கேள்வியைத் தொடர்ந்த.... புற்றீசலாய் எழும்பிய எண்ணங்களோடு சோபாவில் சாய்ந்து கொண்டு வெளியே வெறித்துக் கொண்டிருக்கிறேன்.

''அப்பா... காதலைப் பற்றி உங்க கிட்டே சொல்லிப் பிரயோஜனமில்லே. காதலை, என் உணர்ச்சிகளைப் புரிஞ்சுக்க உங்களாலேயோ உங்க வயசாலேயோ முடியாது... காதல்னு என்னன்னு தெரியுமா உங்களுக்கு?''

வார்த்தைகளை நெருப்புத் துண்டங்களாய்க் கொட்டிவிட்டு அவன் போய்விட்டான்.

காதலைப் பற்றித் தெரியாதாம் எனக்கு! அதைப் புரிஞ்சுக்க முடியாதாம்! காதல்னு என்னன்னு எனக்குத் தெரியாதாம்! அட கடவுளே! இந்தக் காதல்லே சிக்கி அவதிப் பட்டு, வேதனைப்பட்டு.... இந்தக் காதலோட ஒவ்வொரு நிலையையும் பார்த்தவன் என்று அவனுக்குத் தெரியாது...

என் மனத்தில் என் பழைய வாழ்க்கையின் ஃபைல்கள் என் எண்ணங்களால் புரட்டப் பட்டு, பழையதை யெல்லாம் மீண்டும் இதோ நினைத்துப் பார்க்கிறேன்.

பள்ளிப் பருவம்.

என் வகுப்பு லீடராக இருந்தவன் விக்டர். உயரமாக, இளம் மீசையுடன், இரண்டு வருடத்துக்கு ஒரு முறை பாஸ் செய்துகொண்டு 'ஸ்போர்ட்ஸ் டே' ஹீரோவாக இருந்தான். என்னை அவனுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

ஒரு சமயம் அவனைப் பற்றித் திடீரென்று ஏகமாய் வதந்திகள் பரவின. அதுவும் நடந்து முடிந்த ஸ்போர்ட்ஸ் டேக்கு அப்புறமாக — விக்டர் யாரையோ லவ் பண்றானும்! எனக்குப் புரியவில்லை. 'லவ்'ன்னு என்ன? சினிமாவிலே டூயட் சீன்லே வருமே அது மாதிரி.... சீச்சீ! அசிங்கம், தப்பான காரியம்! இதைப் போய் விக்டர் செய்வானா? இருந்தாலும் என் மனத்தில் சில குறுகுறுப்புக்கள். ஒரு நாள் துணிந்து அவனிடம் கேட்டேன்.

''விக்டர்... என்னமோ... நீ லவ் பண்றேன்னு... எல்லாரும் பேசறாங்களே.... அது என்ன நெஜமா?....''

''ஆமாம்.... அதுக்கென்ன....ம்?''

ஆமாம்.... எனக்கென்ன? இருந்தாலும்.. இருந்தாலும்....

அடுத்த வாரத்தில் ஒரு நாள் அவனுடன் போய்க் கொண்டிருந்தபொழுது ஒருத்தி வந்தாள். கான்வெண்ட் கேர்ள்தான்!

இவளைப் பார்த்ததும் அவன் சிரிக்க, இவள் சிரிக்க.... எனக்கு எப்படியோ இருந்தது.

''வசு...இதான்.... நேத்தைக்கு சொன்னேனே... கேட்டுச்சுன்னு! என் பெட்!''

அவள் என்னைப் புன்னகையுடன் பார்க்க, நான் சட்டென்று அங்கிருந்து ஓடினேன், ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல். எதற்காக, ஏன்?

இப்படி ஓடி ஒளிய வேண்டுமென்று... காரணங்களில்லாமலே ஓடினேன். வெட்கமா... இல்லை கூச்சமா... எதுவென்றே புரியவில்லை!


'லவ்வாம் லவ்! சீச்சீ அதெல்லாம் அசிங்கம்ப்பா என்று காதலைக் கண்டு காததூரம் ஓடிய நான்...'

இலேசாக கருமையாக உதட்டின் மேற்பகுதியில் இளரோமங்கள் அரும்ப ஃபுல் பேண்டும் ஷர்ட்டுமாய் மாறி, இனம் புரியாத வேகங்களும், எண்ணக் குறுகுறுப்புக்களும் குமிழியிட, சினிமாவில் வரும் லவ் சீன்களை ரசிக்க ஆரம்பித்தேன்.

காலேஜின் வாசலான இண்டர்மீடியேட்டில் நுழைந்த சமயம்....

மைதிலி என் கிளாஸ்மேட். அழகாக, மாநிறத்தில் 'எக்ஸ்பிரஸிவ்' கண்களுமாய் ஒருவிதமான கவர்ச்சியைத் தனக்குள் தேக்கிக்கொண்டு சற்று ஒடிசலான உருவத்துடன் இருந்த அவளைப் பார்ப்பதே எனக்குச் சிறு சந்தோஷமாக இருந்தது.

அவளுடன் பேச ஆசை இருந்தாலும், எனக்குத் தைரியம் மட்டும் இல்லாம



லிருந்தது. சந்தர்ப்பமும் வராமலேயே இருந்தது. அவளும் என்னைக் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை. அந்த நாள் வரை!

அன்று மைதிலியை நினைத்தபடியே ரசாயனச் சோதனைச் சாலையில் ஒரு சோதனைக்காக வேகமாக வந்து கொண்டிருந்தபோது தான் 'அது' நடந்தது.

நான் நிதானிப்பதற்குள் என் புது பேண்டில் ஓட்டைகள் ஈரத்துடன் உருவாகிக் கொண்டிருந்தன.

கோபத்துடன் நிமிர்ந்தேன். மைதிலி பெரிதாகப் பதறினாள்.

''ஐ ஆம் ஸாரி... நான்... ஆஸிட் எடுத்துட்டு வரப்ப... கால் வழுக்கி நின்ன வேகத்திலே, என் டெஸ்ட் டியூப்பிலே இருந்து.... ஒங்க மேலே சிந்திடுச்சு...ப்ளீஸ் மன்னிச்சுடுங்க.... ஸாரி....''

அவள் அழுதே இருப்பாள்.

''ஹய்யா.... புதுப் பேண்ட் ஹோ கயா'' என்ற மற்ற மாணவர்களின் கசமுசாக்களுக்கு நடுவே....

''ஏம்ப்பா... புதுப் பேண்ட் எல்லாம் பிராக்டிகலுக்குப் போடக் கூடாதுன்னு தெரியாதோ... ஏம்மா மைதிலி பார்த்து வரக் கூடாது?'' என்று டெமான்ஸ்ட்ரேட்டரின் குரலும் ஒலிக்க, எல்லாம் ஓய்ந்து போன பின் முகம் சிவந்து போய், 'அப்செட்' ஆகி நின்றிருந்த அவளிடம், ''பரவாயில்லைங்க... மைதிலி... தவர்றது சகஜம் தானே... நீங்க ஏன் அனாவசியமா ஃபீல் பண்றீங்க?'' என்று இதமான குரலில் நான் சொன்னவுடன் அவள் என்னை நன்றியுடன் நிமிர்ந்து பார்த்து விட்டுத் தலைகுனிந்தபடி நகர்ந்தாள்.

மதியம்... பிராக்டிகல் முடிந்து போகும் போது.....

''ஹலோ... ஹலோ... உங்களைத்தான்!'' கூப்பிட்டது சத்தியமாக மைதிலியேதான்!

''எ...எ...என்னங்க மைதிலி...?''

''ரொம்ப ஸாரிங்க... பாவம் என்னாலே உங்க புது பேண்ட் ஓட்டையாயிடுச்சே...''

''பழசா இருந்திருந்தாலுமே கூட ஓட்டையாயிருக்குங்க....'' அவள் மெல்லியதாகப் புன்னகைத்தாள்.

மைதிலியுடன் எனக்கு ஏற்பட்ட நட்பு வளரத் தொடங்கியது... சிறுகச் சிறுக... ஆனால் வெறும் நட்பாகவே இருந்தது... நட்பின் பரிணாமம் மாறும் நிலைக்கு வரு முன்பாக அவள் பிரிந்து போனாள். அதற்குள் பரீட்சைகள் வந்து முடிந்த கையோடு அவள் அப்பாவுக்கு டிரான்ஸ்ஃபர் ஆன கையோடு அவளிடமிருந்து வந்த இரண்டு மூன்று அர்த்தமில்லாத வழக்கமான கடிதங்களுடன் அவளின் பகுதி என் வாழ்வில் ஓர் இனிதான சிறு கதையாக முடிந்து போனது. அதன் பின் நான்....

கெமிஸ்ட்ரியில் டிகிரி வாங்கிக்கொண்டு வேலையில்லாத் திண்டாட்டம் அவ்வளவாக பிரம்மாண்ட உருவெடுக்காத அந்தக் காலத்தில்....

என் படிப்புக்குச் சம்பந்தமில்லாதபடி, ஸ்டேட் பாங்கில் வேலை கிடைத்து அதில் இருந்தேன். மைதிலியின் நினைவுகள் டீன் ஏஜில் ஒருத்தியுடன் இனிமையாய்ப் பழகிய நினைவுகளாய் மட்டுமே என்னுள் அவ்வப் போது தாக்கிக் கொண்டிருக்க, டீன் ஏஜ் கவர்ச்சியின் விளைவுகளில் இதுவும் ஒன்று... என மறந்துவிட்ட வேளையில்தான் 'தேவி' வாழ்க்கையில் என் குறுக்கிட்டாள்.

'தேவி' – இன்றும் என் மனத்தில் சில்லென்ற உணர்வை மீட்டிக் கொண்டிருக்கும் பெயர். உண்மையில் இந்த தேவியைதான் 'காதல்' என்று எல்லோரும் சொல்லுகிறார்களே... அப்படிக் காதலித்தேன்.

'பாரடைஸ் ஷாப்பிங் சென்டர்' என்ற பெரிய ஷாப்பிங் சென்டரின் சேல்ஸ் கேர்ள்ஸில் அவளும் ஒருத்தி. சிவந்திருந்த நெற்றியில் அழகான வட்டப் பொட்டுடன், காதில் வெண் முத்துக்கள் பதித்த ஜிமிக்கியுடன் தளரப் பின்னிய ஹேர் ஸ்டைலுடன் அளவான சிரிப்புடன் இருக்கும் இந்த தேவியைப் பார்த்தவுடன் மயங்கிப் போனேன்.

அவளின் உருவம் என்னுள் ஆழப் பதிந்து போய்விட அவளைச் சந்தித்து எப்படியாவது பேசிவிடுவதென்ற முடிவுடன், ஆயிரம் தயக்கங்கள், யோசனைகளுக்குப் பின், ஒரு நாள் துணிந்து அவளின் கவுண்டருக்குப் போனேன். அவள் கவுண்டரை நெருங்கியதும், அவள் கண்கள் வியப்பால் விரிய என்னைப் பார்த்தாள்.

''எஸ்...சார்... என்ன வேணும்?''

நிதானித்துக் கொண்டேன். ''டாலர்ஸ் இருக்குங்களா?'' என் முன் பலப் பல டாலர்களை எடுத்துப் பரப்பினாள் தேவி.

''எது உங்களுக்கு வேணும்? எந்த டைப்?''

''லவ்... ஸிம்பல்...!''

அவள் முகம் ஜிவ்வென்று சிவந்தது. ''என்னது?'' என்றாள் கோபத்துடன்.

''ஐ...மீன்...ஐ மீன்...இரண்டு ஹார்ட்ஸ் போட்டு ஏரோ இருக்குமே... அதான்... கேட்டேன். ஏங்க அப்படி டாலர் இல்லையா?''

ஒரு வழியாகச் சமாளித்தேன். அதற்குள் அவள் சகஜ நிலைக்கு திரும்பினாள். புன்னகைத்தாள்.

''ஐ ஆம் ஸாரி... இதோ பார்க்கிறேன்.''

அவள் தேடினாள். என் மனம் குளுகுளுத்தது. 'எப்படியும் இந்த சான்ஸை விட்டு விடக் கூடாது' என்று நினைத்துக் கொண்டேன்.

''ஏங்க... உங்க ஸிஸ்டர் ஒருத்தர் காலேஜிலே படிக்கிறாங்கதானே?''

அவள் தலை நிமிராமலே ''இல்லை'' என்றாள்.

''ஓ... அப்ப உங்க தம்பிதானா?''

''இல்லையே....'' பதில் உடனே வந்தது. சே! என்ன இவள் இப்படி...

''ஓ...அது வேற யாரு? உங்க மாதிரியே இருந்தது...அதுதான்...'' மீண்டும் சமாளித்தேன். அவள் நிமிர்ந்து என் கண்களையே உற்றுப் பார்த்துவிட்டு, என் மனதைக் கண்டுபிடித்தவள் போலக் கேட்டாள்:

''சுத்தி வளைக்காம... இல்லாத தம்பி தங்கையைத் துணைக்குத் தேடாம என்ன விஷயம், எதைப் பத்திக் கேட்க நினைக்கிறீங்கன்னு.... நேரிடையாவே கேட்கலாமே?''

ஒரு கணம் அதிர்ந்து போனேன். பின் துணிந்து, கேட்டுவிடுவதென்று முடிவு செய்து, சில நிமிட யோசனைக்குப் பின்...

''நான் கேட்கப்போறதுக்கு என்ன பதில் சொல்லுவீங்களோ... உங்க இஷ்டம்... ஆனா இருக்கிற நிலைமையைப் புரிஞ்சிட்டு கோபப்படாம மெதுவா... சொல்லுவீங்களா?''

அவள் புருவங்கள் உயர அழகாக விழித்தாள்.

''ம்... சரி... சொல்லுங்க...''

''தேவி... சில வார்த்தைகளிலே சொல்லட்டுமா? நான் அடிக்கடி இங்கே வர்ரதே உங்களைப் பார்க்கத்தான்....''

''எனக்கும் தெரியும்...'' என்றாள் மெதுவாக. மை குட்னஸ்! இன்ப அதிர்ச்சியின் இதமான தாக்குதல்கள்!

''தேவி....அப்படின்னு.... அப்படின்னு... நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. ஐ லைக் யூ... உங்களை மற்றவங்க எல்லோரும் என்னோட மனைவின்னு கூப்பிடணும்னு ஆசைப்படறேன்....''

இலேசாக என்னுள் வியர்த்தது. அவளின் அந்தச் சில நிமிட மௌனத்தில் என் இதயம் பயங்கரமாக அடித்துக் கொள்ள...

''தேவி.... நீங்க... என்ன சொல்றீங்க?'' தடுமாறினேன்.

அவள் அந்த டாலர்களை நிதானமாகக் கலைத்தபடி இருந்துவிட்டு பின் மெதுவாக அதிலிருந்து ஒன்றை என் பக்கமாக நகர்த்தினாள். அதில் I am ok If you are ok என்று எழுத்துக்களுடன் ஏதோ ஒரு படமும் இருந்தது. ஓ!....அப்படியானால்!....அப்படியானால்...! என் மனம் ஜிவ்வென்று விண்ணில் பறந்தது.

''தாங்க் யூ.... ஸோ மச் தாங்க் யூ... ஸோ மச்...இப்படி.... நடக்கும்னு... நான் கனவிலும் கூட.... நினைக்கலை.... இவ்வளவு சுலபமா... என்னாலேயே நம்பறதுக்கு முடியலையே....!''

''...ஷ்ஷ்.... என்ன இது? இப்பவே அசடு வழிய ஆரம்பிச்சாச்சா...?'' என்றாள் தேவி, குறுக்கிட்டு மிக மிக இனிமையாக. அவளுடைய கம்மலிலிருந்த ஜிமிக்கிகள் லேசாக ஆடும் அளவுக்கு அழகாகத் தலையை அசைத்தபடி அழகாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பிலேயே சொக்கிப்போய் மயங்கிப் போனேன். அந்த மயக்கத்திலிருந்து தேவியை நிரந்தரமாகப் பிரியும்வரை நான் விடுபடவே இல்லை.

''திருப்பதிக்கு மொட்டை அடிக்கலாம் என்று போகும்போது 'மயிரிழையில்' ஒரு விபத்திலிருந்து தப்பிச்சிட்டேன்...''

நல்லவேளை மொட்டை அடிச்சிட்டுத் திரும்பி வரும்போது விபத்து ஆயிருந்தா அப்படித் தப்பிச்சிட்டிருக்க முடியாது...!''

—ரவிசந்திரன்



வாழ்விலும் தாழ்விலும் இனி நாம் ஒன்று தான் என்று வழக்கமான தீர்க்கமான உறுதி களையும் எடுத்துக் கொண்ட பொழுதுதான் விதி வழக்கம் போல் தன் அனைத்து வலிமைக் கரங்களையும் எங்கள் வாழ்க்கையில் நுழைத்து மிகக் குரூரமாகச் சிரித்தது.

தேவி — அவள் தாய் மாமனின் இரண்டாம் தாரமாக ஆக்கப்பட்டாள். எங்களின் அப்பாக்களின் மிரட்டல்களும் அம்மாக்களின் கண்ணீரும் எங்களின் இயலாமையும் சேர்ந்துகொண்டு எங்கள் காதலைச் சின்னா பின்னப்படுத்தின.

தெய்விகக் காதல், உண்மைக் காதல், வெற்றி பெறுவதில்லை...அது இது போன்ற வேதாந்தப் பழமொழிகளைக் கேட்டு, சலித்து எங்களின் தீவிரக் காதலின் பரிதாப முடிவுக்காகப் பல இரவுத் தூக்கங்களைக் கண்ணீரில் கரைத்துக் கொண்டு, பல நாட்களை வெறுமையாக்கிக் கொண்டு, பலரின் பரிதாபப் பார்வைகளை வேதனையுடன் சகித்துக் கொண்டு, சிகரெட்டில், மதுவில் இதை மறக்க முயன்று, அப்பொழுதும் முடியாமல் போய் விட்ட இயலாமைக்காக நொந்துபோய் மெல்ல மெல்ல நான் ஸ்டேட் பாங்கில் வேலை செய்யும் ஓர் இயந்திரமாய் மாறிக்கொண்டிருந்தபொழுதுதான் வசந்தி எனக்கு மனைவியானாள்.

பெண் பார்த்தது, நிச்சயித்தது, பொருத்தம் பார்த்தது எல்லாமே என் பெற்றோர்கள் தான். வசந்த கால இனிமைகளுடன் மண வாழ்க்கையைத் தொடங்க வேண்டிய நான், அவை எதுவும் இல்லாமலேயே கடமைக்காக எந்திரம் போல் என் மண வாழ்வைத் தொடங்கினேன்.

வசந்தி — இனிமையான, அமைதியான, ஒன்றும் தெரியாத அசட்டுப் பெண்ணாய் இருந்தாள். என் வாழ்வில் வசந்த காலத்தை மீண்டும் வரச் செய்யப் படாத பாடு பட்டாள். அவ்வப்பொழுது அவளுக்குக் கிடைத்த வெற்றிகள்தான் என் இயந்திர மயமான வாழ்க்கைக் கடலில் அவ்வப்போது ஏற்பட்ட சந்தோஷத் தீவுகளின் மரங்களாய் வந்த என் மகன் திலீபன், என் பெண்கள் செம்பியா, ரம்யா... தன் ஆசைகளின் வெற்றிகளை முழுமையாய்க் காணு முன்னரே போனாள் வசந்தி. அவள் போன பின்தான் அவளுடைய அருமை எனக்குப் புரிய ஆரம்பித்தது.

வாழ்க்கைத் தேவைகளுக்காக லெட்ஜர்களையும், ரிஜிஸ்தர்களையும், அக்கவுண்ட்ஸ்களையும் தினமும் கட்டிக் கொண்டு, என் உணர்ச்சிகளின் வடிகால்களை என் டைரியில் கொட்டிக் கொண்டிருந்தேன்.

வெகு நாட்களுக்குப் பின் நினைத்துக் கொண்ட என் பழைய நினைவுகளின் சுமைகள் மனத்தில் அழுந்திக்கொள்ள, கண்களில் கண்ணீர் மெல்ல உருண்டு நிற்கிறது.

திலீபனின் அந்த வார்த்தைகள் என்னைச் சுடுகின்றன..... அலவாய்.... 'காதல்னா என்னன்னு தெரியுமா உங்களுக்கு?'



பஸ் பிரயாணிகளிடம் வசூலிக்கும் கட்டணத்திற்கு ரசீது அளிப்பது போல, டிக்கெட் அளிக்கும் பழக்கத்தை தமிழ்நாட்டில் முதல் முதலில் ஏற்படுத்தியவர் டி.வி. சுந்தரம் ஐயங்கார்.

எவ்வளவு சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான் அவன்?

அவன் கேட்ட கேள்வியைப் பற்றிப் பரபரப்பில்லாமல், பதற்றமில்லாமல் யோசித்துப் பார்க்கிறேன். உண்மையில் இந்தக் காதல் என்றால்தான் என்ன?

ஹைஸ்கூல் படிக்கிறப்போ காதல்னு புரியாத நான், வெட்கப்பட்டு ஒதுங்கிப் போன நான், 'இண்டர்' படிக்கிறப்போ, அந்தக் காதல்னு சொன்னாலே கிளுகிளுத்துப் போன நான், இதைவிட தேவியைக் காதலிச்சப்போ காதலே தெய்விகம்னு மயங்கிக் கிடந்த நான்....

இப்ப அதை ஏன் வெறுக்கிறேன்? ஏன் எனக்குக் கோபமும் எரிச்சலும் வரணும்?

என் மகன் காதலிக்கிறேன்னு சொன்னதை ஏன் என்னாலே ஜீரணிக்க முடியவில்லே?

காரணம், ஒருவேளை திலீபன் சொன்ன மாதிரி என் வயதா? இல்லே... என் அந்தஸ்தா? இல்லேன்னா காதல் தோல்வியாலே எனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களா?

இதிலே எது உண்மையான காரணம்?

காதலிக்காதே! கவலைப்படாதே... காதல்னு எப்பவுமே பிரச்னை.... அது இதுன்னு ஒவ்வொரு தலைமுறையா சொல்லப்பட்டு வந்ததும், அதிலேயே தொடர்ந்து பலரும் விழுந்து வருவது...

மனிதர்களோட பலவீனமா? இல்லே... இந்தப் போகாத காதலோட கவர்ச்சி மிகுந்த சக்தியா? இதிலே எது உண்மை?

காதல் — இந்த மூன்று எழுத்து வார்த்தையோட உண்மையான சொரூபம்தான் என்ன?

காதல் என்கிற வார்த்தைக்கு எதுதான் உண்மைதான் அர்த்தம்

ஒருவேளை ஒருவகையிலே திலீபன் சொன்னது போல 'காதல்னா என்னன்னே எனக்குத் தெரியலேயோ?'

ஒரே குழப்பமா இருக்கு.

என் மனசிலே நானே எழுப்பிக் கொண்ட இந்தக் கேள்வியெல்லாம் என்னாலே பதில் சொல்ல முடியாத கேள்விகளாகவே எனக்குத் தெரியுது.



பூக்குழி

லக்ஷ்மி

15

சென்னையில் இரண்டு தினங்களுக்கு மேல் தங்கிவிட்டுப் பின்னர்தான் திருச்சிக்குப் பயணம் என்று ராஜ்குமார் முடிவில் ஒப்புக்கொண்டிருந்தான். நண்பனை மகிழ்விக்கும் பொருட்டு இந்த மாபெரும் தியாகத்திற்கு அவன் சம்மதித்திருந்தான். முன்னதாகவே சென்னையிலிருந்த நண்பன் ஒருவனுக்கு திருச்சிக்குப் பயணம் செய்ய டிக்கட்டுகள் வாங்கிவைக்க வேண்டிய தேதிகளைக் குறிப்பிட்டு எழுதியிருந்தான். அதன்படியேதான் அவன் அகல்யாவுக்குத் தான் வரப்போகும் நாளைக் குறித்துத் தந்தியும் அனுப்பிவிட்டிருந்தான்.

விமான நிலையத்திலேயே வந்து சந்தித்த சென்னை நண்பன் அவனிடம் வாங்கித் தயாராக வைத்திருந்த டிக்கெட்டுகளைக் கொடுத்துவிட்டான். அவைகளைப் பெற்றுக்கொண்டதுமே ஊர்போய்ச் சேர்ந்து விட்டது போன்ற மகிழ்ச்சி ராஜ்குமாருக்கு. அந்த நண்பனுக்குத் தான் வெளியூரிலிருந்து கொண்டு வந்த பரிசுப் பார்சலைக் கொடுத்து நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொண்டு விமான நிலையத்தினின்று வெளிவந்தான்.

காமேஷ் அவனுடன் அந்தப் பெரிய ஹோட்டலில் வந்து தங்க மறுத்துவிட்டான். முன்பு ஒருமுறை அவன் சென்னைக்கு வந்தபோது புரசைவாக்கம் ராம நாய்க்கர் தெருவில் ஒரு சிறு லாட்ஜில் தங்கிய ஞாபகம் அவனுக்கு. அதே இடத்திற்குத்தான் மறுபடியும் போகவிரும்பிப் பிடிவாதமாக ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு தனியே புறப்பட்டு விட்டான்.

வீட்டுக்கு வெகு அருகில் வந்தும் மூன்று வருஷங்களாகப் பிரிந்திருந்த தாயையும் — தாரத்தையும் ஓடிச் சென்று பார்க்காது நண்பனைத் திருப்திப் படுத்தச் சென்னையில் அவன் அனாவசியமாகத் தங்க நேர்ந்தது. அவன் சிநேகிதத்திற்காக எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்திருக்கிறான் என்ற உண்மையைக் காமேஷ் சிறிதும் உணர்ந்து கொள்ளவேயில்லை. மூர்க்கத்தனமாக முறித்துக்கொண்டு வேறு தங்குமிடத்திற்குப் போய் விட்டானே என்ற ஆதங்கம் ராஜ்குமாரின் நெஞ்சை அறுத்தது. இத்தனை காலம் நெருங்கிப் பழகியும் காமேஷை அவனால் சிறிதும் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

மிகவும் நெருங்கிய நண்பன்போலும் பழகுகிறான்—திடீரென்று பகைவன் போல் வெறுக்கிறான்... இவன் ஏன் இப்படி ஒட்டட்டாம் புல்லாக இருக்கிறான்? அதுவும் ஊர் நெருங்கும் வேளையில் வார்த்தைகளால் நெருப்பாக நெஞ்சைச் சுடுகிறானே ஏன்? அவனுக்கு ஒரே குழப்பம் — ஏமாற்றம்.. துயரம்.. போகட்டும் இருக்குப்பயல்.. எப்படியாவது வற்புறுத்தித் தன்னுடன் அவனை ஊருக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அது மிகவும் முக்கியம். அகல்யாவுக்கு ஒரு அற்புதத்தைக் காட்டப் போவதாகப் பல கடிதங்களில் திகைப் பூட்டிக் கொண்டிருந்தானே அந்த அற்புதத்தைச் சென்னையிலே அப்படியே விட்டுப் போக முடியாதே.. பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளியமரத்தில் ஏறவேண்டும் என்பது போல்தான் காமேஷின் நட்பு... பலவும் எண்ணியபடி அவன் தனக்குக் கொடுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்து தோள் பையை இறக்கிக் கீழே வைத்துவிட்டுத் தாங்க முடியாத அலுப்புடன் படுக்கைமீது சாய்ந்து கொண்டான். அவனுக்கு எதுவும் சாப்பிடப் பசி இருக்கவில்லை.


அன்று காலை பம்பாயில் தனியே அந்த ஹோட்டலில் விடப்பட்டபோது பொழுது நீண்டு அவனுக்கு மிகவும் பாரமாகத் தென்பட்டது. மாதுங்காவிலே தங்கள் குடும்பத்துக்கு மிகவும் பழக்கமான ஒரு நண்பர் வசித்துக் கொண்டிருப்பது நினைவுக்கு வரவே டைரியைப் புரட்டி முகவரியைத் தேடி எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

மூன்றாவது மாடிப்பகுதியில் அவர்களது குடியிருப்பு - மூச்சிறைக்கப் படிகளைக் கடந்து வந்து அந்த ப்ளாட்டிற்கு முன் நின்ற பொழுது பெருத்த ஏமாற்றம். கனமானதொரு நௌதால், கதவின் தாழ்ப்பாளில் தொங்கிக் கொண்டிருந்தது. படிகளில் காலடி ஓசை கேட்டு எதிர் ஃப்ளாட்காரர்

கதவைத் திறந்து எட்டிப் பார்த்தார். அவர் வெளியூருக்குப் போயிருப்பதாகவும் — வர ஒரு வாரமாகும் என்றும் அவர் கொடுத்தத் தகவலில் எரிச்சலும், ஏமாற்றமுமாக ராஜ்குமார் திரும்ப மெல்ல படிகளில் இறங்கினான். உடனடியாக ஹோட்டலுக்குப் போக மனமில்லை. மெல்ல நடந்தபடியே வந்து அவன் காந்தி மார்க்கெட்டிற்குள் நுழைந்தான்.

மார்கழி மாதங்களில் ஊதக்காற்று உடம்பில் பட்டதும் அம்மா புடவைத் தலைப்பை இழுத்து மூடிக் கொண்டு உஸ் என்று பெரு மூச்சு விடுவது ஞாபகத்துக்கு வந்து. கரை முழுதும் சன்னமாகப் பூ வேலை செய்த வெள்ளைக் கம்பளி சால்வை ஒன்றை அம்மாவுக்காக அங்கே கடை ஒன்றில் வாங்கிக் கொண்டான். அகல்யாவுக்கு கைப்பை ஒன்றும் சேலத்து பார்வதி அம்மாள் பேரக் குழந்தைகளுக்கு பொம்மைகளும் வாங்கிக் கொண்டு ஹோட்டலுக்குத் திரும்பினான். பொழுதைக் கழிக்க பம்பாய்க் கடைத் தெருவை சுற்றின அலுப்பு - இப்போது அவனையுமறியாது நன்றாக உறங்கிப் போனான்.

இரவு ஏழுமணி அளவில் தான் எழுந்தான். முகத்தைக் கழுவி.. ஷேவ்செய்துகொண்டு.. கீழேவந்து ரிஸப்ஷனில் விசாரித்தான். அவனை யாரும் தேடிக் கொண்டு வரவில்லை என்ற தகவல் கிடைத்தது.. மிக்க ஏமாற்றமாக இருந்தது அவனுக்கு. காமேஷ் தங்கியிருந்த லாட்ஜிற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு





கிருபானந்த வாரியாருக்கு வீணையில் நல்ல பயிற்சி உண்டு. சென்னையில், தென்மடம் வரதாசாரியாரிடம் ஏழு ஆண்டுகள் வீணை பயின்றவர் வாரியார்!

விசாரித்தால், காமேஷ் என்பவர் சற்று முன்னர்தான் எங்கேயோ வெளியே போனார்.. வர இரவு நேரமாகும் என்று கூறிவிட்டுச் சென்றார்... மறுபக்கத்திலிருந்து கிடைத்த பதில் மனத்தை உறுத்தியது.. காமேஷிற்கு எத்தனை அசட்டையான மனப் போக்கு....

இரவு உணவிற்குப்பின் வரவேற்பறையில் அவன் வெகுநேரம் நண்பனுக்காக காத்திருக்க விரும்பவில்லை. தனியாக ஏதோ காரியமாக அவன் எங்கேயோ போயிருக்கிறான் - நமக்கேன் பாடு என்று எண்ணியபடி... நேரே தன் அறைக்குச் சென்றான். பெட்டிக்குள் தாறுமாறாகக் கிடந்த சாமான்கள் அனைத்தையும் எடுத்து மறுபடியும் ஒழுங்காக அடுக்கி வைத்து மூடிப் பூட்டினான். ஹைதராபாத்திலிருந்த தனது நெருங்கிய நண்பர் சரவணனுக்கு டெலிபோன் செய்தான். அவனது குரலைக் கேட்டதும் மறுபக்கத்தில் சரவணன் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தார். ''வேலையா? அது உனக்குக் காத்துக்கொண்டிருக்கிறது. அது சரி, நீ சுத்த விவரம் கெட்ட பிள்ளையாக இருக்கிறாயே? ஊரிலே அம்மாவும் உன்மனைவியும் ஆசையோடு காத்திருக்கும் போது... சென்னையிலே ஏன் கம்மா உட்கார்ந்திருக்கே.. முதலில் ஊருக்குக் கிளம்பு.'' உரிமையோடும், அன்போடும் கடிந்து கொண்டார். கொஞ்ச நேரம் அவரிடம் பேசி விட்டு மகிழ்ச்சியும் - திருப்தியுமாகப் படுக்கையில் சாய்ந்தான். உறக்கமே வரவில்லை. ஆச்சு.. இன்னும் இரண்டு நாளில் அவன் திருநெல்வேலியில் இருப்பான். திருச்சி ஜங்கஷனை அடைந்ததும் நேரத்தை வீணாக்காது உடனடியாக ஒரு டாக்ஸியில் ஊர்போய்ச் சேர்ந்து விட வேண்டும். வண்டிநிற்கும் சப்தம் கேட்டதுமே அகல்யா ஓடிவந்து விடுவாள் வாசலுக்கு. ஜோடியாகக் கண்ணாடி பிரதிபலித்த உருவம்போல் இரண்டு பேரும் வந்து எதிரே நின்றால் வியப்பில் கண்கள் விரிய.. 'கணவன் யார்?' என்று குழம்பி முகம் சிவந்து ஒரு கணம் அவள் தடுமாறிப் போவதை வேடிக்கைப் பார்க்கவேண்டாமா?

எப்படி என்னைக் கண்டு பிடித்தாய்? ஒரே தோற்றம்- வேணுமின்னே ஒரே மாதிரி உடை தரித்துக் கொண்டு வந்தோமே என்று அவன் கேட்டால் கோபத்துடன்... கண்கள் பளபளக்க, உதட்டைச் சுழித்துக் கொண்டு அவள் 'இது விளையாட்டா.?' என்று சிணுங்கும்போது... தனக்குள்ளே கற்பனை செய்து கொண்டு அவன் வாய் விட்டு சிரித்தபடி படுக்கையில் புரண்டான்.

லேசாக அறைக் கதவு தட்டப்பட்டதும் விழித்துக்கொண்டு எழுந்து திறந்தான். ஹோட்டல் பையன் காலை பத்திரிக்கையும் காப்பி கெட்டிலும் கொண்ட மரத்தட்டை ஏந்தியபடி வெளியே நின்று கொண்டிருந்தான். விடிந்து வெகுநேரம்வரை தூங்கி விட்டதை உணர்ந்து பரபரப்புடன் குளியலறைக்குள் மறைந்தான் ராஜ்குமார். விரைவில் குளித்து முடித்துவிட்டு – வேறு உடுத்திக் கொண்டு – பையன் தட்டில் வைத்துப்போன இரண்டு பிஸ்கட்டுகளை வேகமாகத் தின்றுவிட்டு ஆறிப்போன காப்பியை குடித்தான். துவாலை – பனியன்–இத்தியாதிகளைத் தோள் பைக்குள் வாரிப் போட்டுக் கொண்டு அறையை மூடி பூட்டிவிட்டுக் கீழே வந்தான்.

ரிஸப்ஷனில் காலைப் பணிக்கு வந்திருந்த பெண்ணிடம் சாவியைக் கொடுக்க கை நீட்டிய போது... அவள் லேசாக முறுவலித்தாள். அகல்யாவைப்போல் உயரமாக இருந்தாள். தலை முடியை அள்ளித் தூக்கலாகக் கொண்டை போட்டுக் கொண்டிருந்தாள். ''வெளியே அதுக்குள்ளே கிளம்பி விட்டீர்களே? ஹேவ் எ நைஸ் டைம்'' மிகவும் பழக்கப்பட்டவள் போல அவள் பேசினாள். கண்கள் சிரித்தன. அகல்யாவுக்கும் அப்படித்தான் அகன்ற நீண்ட விழிகள் – சிரிப்பு, மிதக்கும் பார்வை.

காமேஷ் கிடக்கிறான் – மடையன் என்று உதறிவிட்டு ஊருக்குப் புறப்பட மாட்டோமா என்றதொரு ஏக்கம் நெஞ்சை அடைத்தது...'மன்னிச்சுக்கோ அகல்யா! இன்னும் ஒரே ஒருநாள் தான் - அதற்குப் பிறகு நமக்குள் பிரிவே கிடையாது... நிச்சயம்.' தன்னுள்ளே சொல்லிக்கொண்டு அவன் வேகமாக வெளி நடந்தான்.

புரசைவாக்கம் ராமநாய்க்கன் தெருவுக்குள் நுழைந்தவுடனே விரைவில் அவன் அந்த லாட்ஜைக் கண்டு பிடித்துவிட்டான். கீழ் பகுதியிலிருந்த வெற்றிலை பாக்குக்கடை – லாண்டிரி இரண்டையும் தாண்டி குறுகலாக ஓடிய சந்துக்குள் நுழைந்து மாடிப்படிகளில் ஏறி வராந்தாவுக்கு வந்தான். வரிசையாகத் தங்கும் அறைகள் காணப்பட்டன. காப்பி நிறைந்த கண்ணாடி டம்ளரை கம்பி உறியில் தூக்கிக் கொண்டு வேகமாக வராந்தாவில் விரைந்து கொண்டிருந்த லாட்ஜ் பையனை விசாரித்தான். ஈ மொய்த்த குப்பைக் கூடை எதிரே இருந்த கதவை அவன்! சுட்டிக் காட்டிவிட்டு ஓடி விட்டான்.

'காமேஷ் எப்படித்தான் இந்தச் சூழ்நிலையைச் சகித்துக்கொண்டிருக்கிறானோ?' என்ற வியப்பு அவனுக்கு. மெல்லக் கதவைத் தட்டினான்.

ஈறு உபாதைகளின் முதல் அறிகுறிகள்?



ஊத்தை (Plaque)
எந்நேரமும் உங்கள் பற்களையும் ஈறுகளையும் சுற்றி கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளின் மெல்லிய படலங்கள் தோன்றிய வண்ணமிருக்கின்றன. இவற்றை அலட்சியம் செய்தால் இந்த படலங்கள் காரையாக உருப்பெறுகின்றன.

பற்காரை
பற்களின் அடிபாகத்தில் இது படிந்து, ஈறுகளில் எரிச்சல் உண்டாக்கி அவற்றை வீங்கச் செய்கிறது. காலை. விட ஈறுகளிலும் எலும்புகளிலும் சரிவு ஏற்படுத்தி பற்களை விழச்செய்கிறது.

இரத்தம் கசியும் ஈறுகள்
பிரஷ் செய்யும் போது பலவீனமாகவும் மிருதுவாகவும் உள்ள ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். இதனால் வலி ஏற்படாவிடினும் இந்த ஈறுகளின் இரத்தக் கசிவு பெரும் உபாதைகளில் கொண்டு விடலாம்.


பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட இந்த டூத்பேஸ்டினால் பயனடையுங்கள்.



டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஸ்பெஷல் ஃபார்முலா
டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் திறமிக்க அஸ்ட்ரிஞ்ஜன்ட் செயல் உங்கள் ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது. போர்ஹென்ஸ் கொண்டு பிரஷ் செய்வதால் உங்கள் வாய் தூய்மையாக, நன்னிலையில் மேலும் நலமுடன் திகழ்கிறது.

பல் டாக்டர்கள் கூறுகிறார்கள்
தவறாமல் பற்களை பிரஷ் செய்வதும் ஈறுகளைத் தேய்த்துக் கொடுப்பதும் ஈறு உபாதை, பற்சிதைவுகளைத் தடுக்க உதவும். ஆகவே, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் மற்றும் போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத் பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள், ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்.

ஈறுகள் கேட்டால் உடல் நலம் கெடும்



இலவசம்! "உங்கள் பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். 25 பைசா தபால் தலையுடன் இம்முகவரிக்கு எழுதுக: போர்ஹென்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, த.பை.எண் 11463, பம்பாய் 400 020.
எம்மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

போர்ஹென்ஸ்
பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட

210-F-203 TM

காமேஷ் அப்பொழுது தான் எழுந்தவன் போல் இரவு உடையிலேயே இன்னமும் காணப்பட்டான். அறைக்குள்ளே விருந்து சிகரெட்டின் மணம் குப்பென்று முகத்தில் மோதியது. இரவு சாப்பிட்டுவிட்டு அவன் வைத்திருந்த எச்சில் தட்டில் இன்னமும் மீதி சோறு காய்ந்து கொண்டு கிடந்தது. புத்தி தான் கோணல் என்றால் பழக்க வழக்கங்களாவது சுத்தமாக இருக்கக் கூடாதா?... 'கிளம்பு காமேஷ்... உன்னை அழைத்துப் போகத்தான் வந்தேன்.' வற்புறுத்தி விட்டு அறையைச் சுற்றிலும் பார்க்க விரும்பாது கண்களை மூடிக்கொண்டான் ராஜ்குமார். அரை மனதுடன் முகத்தைக் கழுவிக்கொள்ள குளியலறைக்குத் துவாலுடன் சென்றான் காமேஷ். சிறிதுபொழுதில் அந்த லாட்ஜின் தோற்றத்திற்கே சம்பந்தமில்லாத மிடுக்கான ஆசாமியாக வெள்ளை சபாரி ஸூட்டில்—கருப்புக் கண்ணாடி அணிந்துக்கொண்டு கழுத்தில் மாட்டிய பைனாகுலருடன் ஷேவிங் லோஷன் சுற்றிலும் கமகமக்கப் புறப்பட்டு விட்டான் காமேஷ்.

''மகாபலிபுரத்திற்கு ஒரு சுற்றுலா போய் விட்டு வருகிறோம். பகல் சாப்பாடு - டிபன் எல்லாம் அங்கேயேதான். என் ட்ரீட் உனக்கு. என்னடா முறைக்கிறே... நட சீக்கிரம்'' உற்சாகப்படுத்தினான் ராஜ்குமார்.

பஸ்ஸை விட்டு இறங்கிப் பயணிகளுடன் கால் ஓய இருவரும் மகாபலிபுரத்தைச் சுற்றினார்கள். வெய்யில் உச்சியையடைந்தபோது ஆளுக்கு ஓர் இளநீரைக் குடித்துவிட்டு கடற்கரைப்பக்கம் நடந்தனர். நீலவண்ணக் கடல் நீரும் வெள்ளை மணலும் ராஜ்குமாரின் உள்ளத்தை மெல்ல வருடின.

''காமேஷ்! வெய்யில் வேளையிலே கடல்நீர் ஜில்லுனு எப்படி மயக்குகிறது பார்த்தியா? என் கையை பிடிச்சுண்டு இறங்குடா. ஒரே ஒரு சின்னக் குளியல். ரொம்ப சுகமாக இருக்கும். தாய் நாட்டுக்கு வந்திருக்கோம் சமுத்திர ஸ்நானம் பண்ணுவோம் வா... எல்லா தவறுகளுக்கும் ஒரு முழுக்கு போட்டுவிடலாம்.'' சிரித்துக் கொண்டே தோள்பையைக் கீழே வைத்து விட்டு வேகமாக உடைகளைக் களைந்து அதற்குள் போட்டுவிட்டு உள் ஆடையுடன் நின்றான். ''எனக்கு நீஞ்சத் தெரியாது — என்னை வற்புறுத்தாதே தண்ணியைக் கண்டாலே எனக்குப் பயம்'' பிடிவாதமாகக் காமேஷ் மறுத்தான்.

கடற்கரையில் அப்போது யாரையும் காணவில்லை. அங்குமிங்கும் அதுவரை நடமாடிக் கொண்டிருந்த பயணிகள் சாப்பாட்டைத் தேடிக்கொண்டு போய்விட்டிருந்தனர். கடற்கரை வெறிச்சென்று காணப்பட்டது. கலவரத்துடன் காமேஷ் சுற்றிலும் பார்த்தான். ''தண்ணி உடம்பிலே படறப்போ எத்தனை சுகமா இருக்கு தெரியுமா? கொஞ்சம் இறங்கிப் பாரேன்.'' மகிழ்ச்சியுடன் கூவியபடி ஓவென்று இரைச்சலிட்ட கடல் அலைகள் இடையே புகுந்து மீன்போல் மேலும் மேலும் கடலுக்குள்ளே நீந்தியபடி போய்க்கொண்டிருந்தான் ராஜ்குமார். வியப்புடன் அவனையே பார்த்துக்கொண்டு கரையில் நின்ற காமேஷ் திடுக்கிட்டுப் போனான்.

வெகுதொலைவில் நீருக்குமேல் கருப்பாக தெரிந்த அந்தத் தலையைக் காணவில்லையே ராஜ்குமாருக்கு என்ன நேர்ந்துவிட்டது? கலவரத்துடன் மார்பில் தொங்கிய பைனாகுலரைக் கழற்றி அதன்வழியே பார்த்தான். 'ராஜ் — ஏய் ராஜ்' என்று கத்திக் கொண்டு ஓடினான். உதவிக்கு வரக் கூட அருகில் யாருமில்லை. மறுபடியும் பைனாகுலர் மூலம் பார்த்தான்... 'பாவிப்பயல் மூழ்கிப் போய் விட்டானே. அடகடவுளே...!' காமேஷின் நெஞ்சு பயத்திலே பக்பக்கென்று அடித்துக் கொண்டது. நெற்றியில் பூத்த வியர்வையைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு கால்கள் மணலில் ஊன்றிக் கொண்டு விட்டன போன்ற பிரமையில் நடக்கத் தோன்றாது கடலையே வெகுநேரம் வெறித்துக் கொண்டு நின்றான்.

(தொடரும்)

தர்மசங்கடம்'

தம்பு!



நீங்காத நினைவு



தீபன்

மீ.ப.சோமு

தீர்த்தாரப்பன் என்ற பெயர் அபூர்வமான பெயர் அல்லவா? அந்தப் பெயருக்குரிய தெ. சி. தீர்த்தாரப்பன் (டி. கே. சி.யின் புதல்வர் ''தீபன்'') அவர்களும் அபூர்வமான மனிதர். அவர் ஒரு கந்தருவப் பிறவி.

எங்கள் நட்பு சங்கீதத்திலே அரும்பி, இலக்கியத்திலே பூத்துப் பின்னர் காதலிலே கனிந்தது!

அந்தக் காதலை எப்படிச் சொல்வது! மிக மிக நெருங்கிப் பழகுவோம். பலமாகச் சண்டைகளும் போட்டுக் கொள்ளுவோம். மறுவிநாடியே சேர்ந்துகொள்ளுவோம். சிறு வயதின் அந்த மாசற்ற அனுபவங்களையெல்லாம் இப்போது நினைத்தால் நம்ப முடியாத ஒரு கனவாக இருக்கிறது.

'உல்லாசம்' என்ற சொல்லுக்கு ஒரு மனித உருவம் இருந்தால் அது எப்படி இருக்கும்? அப்படி இருப்பார் தீபன்.

தீபச் சுடர் போன்ற மேனி. தீப ஒளி வீசும் கண்கள். தோற்றத்தில் ஒளி வீசிய அந்தத் தீபச் சுடர் அவருடைய நடையில், பேச்சில், விசிறி மடிப்பு அங்கவஸ்திரத்தை மாலை போன்று கழுத்திலே போட்டுக்கொள்வதில், சிரிப்பதில், பாடுவதில், எழுதுவதில், நையாண்டி பேசுவதில் எல்லாவற்றிலுமே ஒளி வீசும்! அந்த வயதில் பல விஷயங்கள் அவரிடம் கற்றேன். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது சொல்கிறேன், அவரைப் போல அகமும் புறமும், உள்ளமும் உடம்பும், பேச்சும் பாட்டும், இலக்கியமும் ஒருசேர ஒரே அழகு மயமாகத் திகழும் இன்னொருவரை நான் பார்த்ததில்லை!

'அழகைக் கொடுத்த தெய்வம்
ஆயுளைக் கொடுக்கலையே!''

என்று நாட்டுப் பாடலிலே வரும். அப்படி ஆகிவிட்டது அவருடைய வாழ்வு!

பட்டப் படிப்பு முடிந்ததும் சட்டப் படிப்பைத் தொடர்ந்தார். அமரர் கல்கியின் பாராட்டிலே பல கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் படைத்தார். 1938 இல் வானொலிப் பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக நியமனம் பெற்றுச் சென்னைக்கு வந்தார். வழி அனுப்பினேன். சென்னைக்கு வந்தவர் பிறகு திருநெல்வேலிக்குத் திரும்பவில்லை!

தீபனுடைய குரல் இனிமை மயமானது. பாலசரஸ்வதியின் பாணியில் அற்புதமாகப் பதங்கள் பாடுவார். நளினத்தோடு அபிநயங்கள் பிடிப்பார். மதுரை மணி அய்யர் மாதிரி விறுவிறுப்புடன் ஆலாபனை செய்வார். எல்லாம் இருபத்தைந்து வயதுக்குள் ஆடிப் பாடி அமர்ந்துவிட்டது! தமது திறமையை அவர் முழுவதும் வெளியிடுவதற்கு முன் அவரைக் காலன் கொண்டு போய்விட்டான்! அரைகுறையாகக் கேட்ட ஒரு புதிய ராகம் எப்படி நம் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் சுற்றி வந்து ஒலிக்குமோ அப்படி அவருடைய நினைவு என் உள்ளத்தில் சுழல்கிறது!

நீங்காத நினைவுகளாக நான் பாதுகாத்து வருகிற தீபனின் சில கடிதங்கள் உண்டு. அவற்றில் ஒன்று மிகவும் நீளமான கடிதம். 1940ல் என் திருமணத்தின்போது அவர் சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு எழுதிய கடிதம் அது. காச நோய் பற்றிக்கொண்ட நிலையில் படுக்கையில் இருந்தார். அன்பின் வேகம் நோயின் வேகத்தை மீறி அதிலிருந்து எழுந்து வந்த கடிதம் அது. இந்தக் கடிதத்தைப் பற்றிப் பின்பொரு சமயம் ராஜாஜி குறிப்பிட்டார்: ''இந்தக் கடிதம் ஒரு முத்து. ஆனல் முத்து தோன்றிய உயிர் (சடல் முத்தைப் போல) மறைந்துவிட்டது!''

தீபனுக்குச் செல்லையா என்பது வீட்டுப் பெயர். அவர் மறைந்ததும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தமது துயரத்தையெல்லாம் ஒரு வெண்பாவாகக் கொட்டி டி. கே. சி.க்கு எழுதினர்:

எப்பாரும் போற்றும்
இசைத்தமிழ்ச் செல்வா! என்
அப்பா அழகியசெல்
லையா நான்—இப்பாரில்
சிந்தை குளிரச்
சிரித்தொளிரும் நின்முகத்தை
எந்தநாள்க் காண்பேன்
இனி!

இந்தப் பாடலைப் பார்த்து டி. கே. சி. இதற்கு என்ன பதில் எழுதியிருப்பார் என்று நினைக்கிறீர்கள்? அருமை மகன், ஒரே மகன் மறைந்த துயரத்தையும் மீறித் தமிழ் மொழிக்கு ஓர் அழகிய வெண்பா கிடைத்துவிட்டது என்று ஆனந்தப்பட்டார் டி.கே.சி! இதை நம்ப முடிகிறதா? 25-3-1941ல் கவிமணிக்கு டி.கே.சி. எழுதிய கடிதத்தில் டி.கே.சி. என்ற தந்தையும் டி.கே.சி. என்ற ரசிகமணியும் எப்படி வெளிப்படுகிறார்கள், பாருங்கள்:

''தங்கள் உள்ளத்தின் கனிவு வெண்பாவில் தெளிந்து கிடக்கிறது. தமிழுலகில் இந்த வெண்பா எழுத ஒருவர்தான். அது



''என்னங்க இது...? எங்கேயாவது சண்டை போட்டு வந்தீங்களா? வேஷ்டி, சட்டை எல்லாம் கிழிஞ்சு...''

''குழந்தைகள் தின விழாவிலே தலைமை வகிச்சேன். குழந்தைகள் கொஞ்சம் என்னோட விளையாடிச்சு!''

தாங்கள் தான்... நண்பர்கள் எல்லோரும் கவியில் உள்ள சோக ரசத்தைச் சுவைத்து வியந்தார்கள். எனக்கு என்னவோ ஒரு தமிழ்க்கவி உதயமாகி வருவதைப் பார்ப்பதில் அளவிறந்த ஆனந்தம்! கவிக்கு உயிரையே கொடுக்கலாம் என்று சொல்வது நம்மவர் மரபு. தங்கள் கவி உயிரைக் கொடுத்து வந்த மாதிரியே இருக்கிறது!

''இசைத்தமிழ்ச் செல்வா'' எவ்வளவு வாய்ப்பு! ''என் அப்பா'' எவ்வளவு கனிவோடு விளிக்கிறது! ''அழகிய செல்'' என்று நின்று மூன்றாவது சீரில் ''ஐயா'' என்று மோனையில் விழும்போது அருமைப்பாடெல்லாம் பிறந்துவிடுகிறது! தமிழ் பாஷை தங்களுக்கு அருமையாய்த் துணைபுரிகிறது. கல்கியும் ராஜாஜியும் (அப்போது சிறையில் இருந்தார்கள்) வெளியில் இருந்தால் தங்கள் வெண்பாவை ரொம்ப அனுபவிப்பார்கள்!''

தந்தை என்ற நிலை எங்கோ மறைந்துவிட்டது. மடிந்துவிட்டது. ரசிகமணி அல்லவா எழுந்து நின்று பேசுகிறார் இவ்வாறு இந்தக் கடிதத்தில்!

கார்த்திகைத் தீபத்தன்று எங்கள் ஊரான மீனாட்சிபுரமும், அதையொட்டிய சந்நியாசி கிராமமும், புதுக்கிராமம், பஞ்ச அக்கிரகாரம், சந்நிதித் தெரு முதலான பகுதிகளும் ஒரே தீப அலங்காரமாக இருக்கும். தெருவீதி எல்லாம் பெண்கள் அழகழகாகக் கோலம் போட்டு, குத்து விளக்கேற்றி, நூற்றுக் கணக்கான அகல் விளக்குகளை வரிசை வரிசையாக வைத்திருப்பார்கள். ஏதோ ஒரு சொப்பன புரியாகக் காட்சி தரும் அது! அப்படிப்பட்ட திருக்கார்த்திகைக்குத் தவறாமல் எங்கள் வீட்டுக்கு வந்துவிடுவார் தீபன். நாங்கள் இருவரும் ஒவ்வொரு தெருவாக நடந்து சென்று அந்தத் தீப வரிசையை ரசித்துக் கொண்டே போவோம்! இப்போது என் நினைவுலகிலே அந்த அழகான தீபங்களோடு தீபமாகத் தீபனும் சுடர்கிறார்!

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

ஆண்டுகள் பல செல்லச் செல்லக் கடந்த காலத்தில் நடந்தவற்றைத் திரும்பிப் பார்க்கும்போது தெளிவு பிறக்கும். ஆனால் காலம் சிலவற்றை மறைத்து விடுவதும் உண்டு. மகாத்மா மேற்கொண்ட உபவாசங்களின் வரிசைக் கிரமமான பட்டியலைப் பல ஆண்டுகள் கழித்து இன்று பார்க்கும் நாம், அவை அவருடன் சேர்ந்து வாழ்ந்த அந்தத் தலைமுறை மக்களிடையே ஏற்படுத்திய பாதிப்பின் தன்மையை முற்றிலும் உணரவே முடியாது.

காந்தி எல்லா உபவாசங்களையும் தாங்கி உயிர் வாழ்வார் என்பதும் ஒரு துப்பாக்கித் தோட்டாவினால்தான் மடியப் போகிறார் என்பதும் அவரது சம காலத்திய மக்களுக்குத் தெரியாது. அவருக்கு வயதாக வயதாக, ஒவ்வொரு முறையும் அவர் உபவாசம் மேற்கொள்ளும்போதும் அது தொடர்பாக ஏற்படும் கவலையை அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் இன்றுள்ள நமக்கு அடுத்தடுத்த மகாத்மாவின் உபவாசங்களில் பரபரப்பும் கவாரசியமும் குறைந்து கொண்டே வரலாம். காரணம் அதன் முடிவு என்ன என்பது நமக்குத் தெரிந்ததுதானே!

1933 மே மாதத்தில் ஸி. ஆருக்கு அந்த உபவாசத்தின் முடிவு என்னவாக இருக்கும் என்பது தெரிந்திருக்கவில்லை. அந்த உபவாசத்தின்போது கதை முடிந்துவிடுமோ என்று அவர் அஞ்சினார். "எனக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. இருபத்தொரு நாள் உண்ணாவிரதமிருந்து அவரால் பிழைக்க முடியாது" என்றார் அவர். மகாத்மாவுடன் சிறைச் சகாவாக இருந்த பட்டேல் ஒப்புக்கொண்டார். மூன்று மாதங்களுக்கு முன்பே காந்தி உபவாசம் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டபோது ஸி. ஆர்., காந்தியிடம், "நீங்கள் பொறுமை இழக்கிறீர்கள்" என்று கூறியிருந்தார். இப்போது எரவாடாவுக்கு விரைந்து சென்று அதைவிடக் கடுமையான சொற்களைப் பிரயோகித்தார்.:

"நீங்கள் சதா கவலையோடு யோசித்துக் கொண்டே இருந்திருக்கிறீர்கள். விகிதாசாரங்களை நிர்ணயிக்கும் திறனை இழந்து விட்டிருக்கிறீர்கள். பரிசோதனைகளை நிகழ்த்திப் பார்ப்பதில் உங்களுக்கு அபரிமிதமான ஆசை இருக்கிறது. இப்போது நீங்கள் மரணத்தையே பரிசோதித்துப் பார்க்க விரும்புகிறீர்கள். உங்கள் நடத்தை சரி என்று ஆமோதிக்கிற ஒரு மனிதரையேனும் எனக்கு உங்களால் சுட்டிக் காட்ட முடியுமா?"

"ஆண்ட்ரூஸ்" என்று பதிலளித்தார் மகாத்மா. ஸி. ஆர். பதிலடி தந்தார்:

"ஆண்ட்ரூஸுக்கு ஓர் அறையைக்கூடச் சரியாகப் பூட்டி வைக்கத் தெரியவில்லை. அப்படி இருக்க ஒருவரது உயிரைப் பூட்டி வைப்பது பற்றியா அவர் பேசுவது? நான் சொல்கிறேன், நீங்கள் இன்னும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்."

காந்தியிடம் பக்தி கொண்டிருந்த அந்த பிரிட்டிஷ்காரருக்கு லோகாயதமான ஞானம் அதிகமில்லை என்பது தெளிவு. காந்தி ஸி. ஆருக்குப் பதிலளித்தார்:

"ஒருவேளை நான் செய்வது தவறாகவே இருக்கலாம். ஆனால் தவறாக இருக்கலாம் என்பதை நிச்சயம் தவறேதான் என்று நான் ஒப்புக்கொள்ளுமாறு சொல்கிறீர்கள். என்னை விட அறிவில் மிகச் சிறந்தவர்களுடன் வாதத்தில் நிலைத்து நிற்க என்னால் எப்படி முடியும்? ஆனால் இதயம் என்ன சொல்கிறது என்று பார்த்தால் அவர்களுக்கு நிகராக நின்று சமாளித்துவிட என்னால் முடிகிறது."



இருபத்தொரு நாள் உண்ணாவிரதத்தை அவரால் தாங்க முடியுமா என்று நிர்ணயிக்க மருத்துவப் பரிசோதனைக்கு அவர் உட்பட வேண்டும் என்று காந்தியிடம் யோசனை கூறினார் ஸி. ஆர். மகாத்மா தாம் இறக்க விரும்பவில்லை எனவும் உயிர் வாழவே விரும்புவதாகவும் கூறியிருந்தார். உபவாசமிருந்தாலும் உயிர்பிழைத்திருப்போம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அருகிலிருந்த சங்கர்லால் பாங்கர் ஸி. ஆரின் யோசனைக்கு ஆதரவு தந்தார். ஆனால் மருத்துவப் பரிசோதனை, தமக்கு ஆழ்ந்த ஆன்ம நம்பிக்கை இல்லை என்பதையே புலப்படுத்தும் என்ற காரணத்துக்காக மகாத்மா அந்த யோசனையைப் புறக்கணித்தார்.

''ஆக, நீங்கள் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள், நீங்கள் தவறே இழைக்க முடியாது என்பதாகவும் சொல்லாமல் சொல்கிறீர்கள்'' என்று ஸி.ஆர். தாக்கினார். மகாத்மாவின் பதிலில் சூடுபறந்தது: ''என்னுடைய ஆன்ம நம்பிக்கைகளுக்கு நீங்கள் இவ்விதமாகக் குழி பறிக்க நான் விடமாட்டேன். என்னை டாக்டர்கள் எந்த விதமாகவும் பரிசோதிப்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.''

சில மணி நேரம் சென்றதும், 'இப்படி அருமை நண்பர்களிடம் கோபித்துக்கொண்டு விட்டோமே, அதுவும் புனிதப்படுத்துகிற உபவாசத்துக்கு முன்பாக' என்று வருந்தி காந்தி மன்னிப்புக் கோரி எழுதினார்:

''அன்புள்ள ஸி. ஆர்., நீங்கள் எனக்கு உயிரினும் அருமையானவர். உங்களையும் சங்கர்லாலையும் நான் மிகவும் புண்படுத்தி விட்டேன். 'என்னை மன்னியுங்கள்' என்று நான் சொல்வதில் அர்த்தமில்லை. கேட்பதற்கு முன்பே நீங்கள் என்னை மன்னித்து விடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் எதற்கு உடன்பட முடியாது என்று கழுதை போல் பிடிவாதம் பிடித்தேனோ அதற்கே ஒப்புதலளிக்கிறேன், பரிசோதனைக்கு உடன்படுகிறேன் — அதாவது, அரசாங்கம் அதனை அனுமதிக்குமானால்.''

மறுநாள் ஸி. ஆர். காந்தியிடம் சிரித்துக் கொண்டே சென்று கூறினார்: ''மன்னிப்பு கேட்கவெல்லாம் அவசியமே இல்லை. உங்களை விட அதிகமாகப் பரபரப்பும் கோபமும் அடைந்தது நாங்கள்தான். இப்போது நாங்கள் மருத்துவப் பரிசோதனை எதும் வேண்டாம் என்று தீர்மானித்துவிட்டோம்.''



''இந்த ராஜ் நாராயண் ஹெல்மெட் போட்டுக்கப் போறேன்னு சொன்னாலும் சொன்னார்... ஒரு பயல் ஹெல்மெட் போடறதில்லே... வியாபாரம் படுத்துப் போச்சு!''

44. கோவை மத்திய சிறைச்சாலை

போராட்டம் முடிவடைந்து விட்டது. ஸி. ஆரின் மனம் அமைதியாக இருந்தது. பிரார்த்தனை செய்யுமாறு தேச மக்களை அவர் வேண்டினார். ''பிரார்த்தனை தாக்கத்தில் உருகட்டும்; மீண்டும் விழித்தெழுதல் பிரார்த்தனையுடனேயே ஆரம்பமாகட்டும்'' என்று அவர் எழுதினார். ''அசட்டுத்தனமான கொண்டாட்டங்களில் நாம் நேரத்தை வீணாக்க வேண்டாம்.''

தெற்கே அவர் ஒரு துரிதப் பயணம் சென்று பூனா திரும்பினார், மகாத்மாவின் அருகே இருக்க. காந்தி சுயமாக விதித்துக் கொண்ட கட்டுப்பாட்டிலிருந்து உயிர் மீண்டு வந்தார். ஒவ்வொரு இரவும் ஸி. ஆர்., தமது நாட்குறிப்பில் ஓர் உபவாச தினத்தின் முடிவைக் குறித்தார். முதல் நாள், இரண்டாம் நாள், என்று தொடர்ந்து எழுதி வந்தார். மே 29ம் தேதிய குறிப்பு ''பாபுவின் உபவாசம் முடிந்தது'' என்பதாக உள்ளது.

காந்தி, உபவாசம் ஆரம்பமான தினத்தன்று — 1933 மே 8-ந் தேதி விடுதலை பெற்றார். உபவாசத்தின் இயல்பும் குறிக்கோளும் மட்டுமின்றி இவை அவர் மனத்தின் போக்கைப் புலப்படுத்துவதும் விடுவிக்கப்பட்டதற்குக் காரணங்களாகத் தரப்பட்டன. ''காந்தியை அரசு உடனடியாக விடுவித்ததன் மூலம் பண்புடன் நடந்து கொண்டிருக்கிறது'' என்று ஸி. ஆர். எழுதினார்.

காங்கிரஸ் அக்ராசனர் படேல் இன்னமும் எரவாடாவில்தான் மகாதேவ தேசாயுடன் இருந்தார். மகாத்மாவின் உடல் நிலை பற்றி ஸி. ஆர். அவருக்கு அடிக்கடி செய்தி அனுப்பிக்கொண்டிருந்தார். மே 17ம் தேதி அவர் எழுதினார்: ''பாபு அற்புதமான நல்ல நிலைமையில் இருக்கிறார். எல்லாம் நல்ல விதமாகவே முடியும் என்று நினைக்கிறேன்.'' மகாதேவ தேசாயின் விடுதலை அறிவிக்கப்பட்டபோது ஸி. ஆர். பட்டேலுக்கு எழுதினார்: ''மகாதேவ தேசாயின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் உங்களைப் பொறுத்தவரை அவர் பிரிவு எப்பேற்பட்ட சோகத்தை அளிக்கும் என்பதையும் என்னால் உணர முடிகிறது.''

(தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

வீட்டுக்கு வீடு வாசப்படி



பட விமரிசனம்

ஜகன் (விஜயகுமார்) டென்னிஸ் ஆட்டத்தில் வீரன். ஜெயாவுக்கோ (ரதி) டென்னிஸ் என்ருல் உயிர். ஜெகனின் அபாரமான ஆட்டத்தில் தன்னேயே அவனுக்கு அர்ப்பணிக்கு மளவுக்குப்போய் விடுகிருள். காதலர்களின் எண்ணமும் கொஞ்சம் சலசலப்புக்குப் பிறகு கை கூடுகிறது. ஜெயா பெரும் பணக்காரரின் ஒரே மகள். ஜகன் ஏழைக் குடிசைவாசியாக வளர்ந்து டாக்டருக்குப் படித்து உயர்ந்தவன். சமூக சேவையே மூச்சாகக் கொண்டவன். அதுவும் டாக்டராயிற்றே. இளம் மனைவியோடு வீட்டில் இருக்கும் போதுகள் மிகமிகக் குறைவு. விளையாட்டு வீரனை விரும்பி மணந்த மங்கைக்கோ ஏக்கம் மிகுந்த இரவுகள் எத்தனையோ. ஒரு நாள் அபூர்வமாகக் கணவன் இரவில் வீட்டில் தங்க, அன்ருவது தன் தாபம் தணியாதா என்று அவள் தவிக்க, அப்போது கதவு தட்டப்படுகிறது. உயிருக்காக மன்ருடிக் கொண்டிருக்கும் ஒரு நோயாளியின் அழைப்பு. இளம் மனைவியின் உள்ளம் கணவனை அந்த நிலையில் பிரியாமல் நிற்ப் பொய்சொல்ல வைக்கிறது. அன்று இரவு இன்பமாகக் கழிகிறது. ஆனால் அவன் கணவனின் அன்புக்குப் பாத்திரமான ஒரு ஆத்மா அமைதியடைகிறது. உண்மை தெரிந்த போது கணவன் சீறுகிருன். இளம் மனைவியும் எதிர்க்கிருள் - மனைவிக்குக் காட்ட வேண்டிய மதிப்பைத் தனக்குத் தரவில்லை என்று. முடிவு? பிணக்கு, பிரிவு. ஒரே ஊரில் தனித்தனியே வாழ்கிருர்கள் ஒருவர் மற்றவரின் நினைவாக. முதலில் பிடிவாதம். பிறகு பிடிவாதம் தளர்ந்து போகிறது. இவர்களைச் சேர்த்து வைக்க அவன் நண்பனும், மனைவியும் திட்டமிட்டு நாடகமாடி வெற்றி காண்கிருர்கள்.

எல்லாருக்கும் தெரிந்த இந்தக் குடும்பக் கதையைத்தனக்கே உரிய பாணியில் கையாண்டிருக்கிருர் அனுபவமிக்க மாதவன். ஆகவே பழைய தீமானலும் தொய்வு தெரியவில்லை.

இளம் மனைவியாக வரும் ரதிக்குக் குடும்பப்பாங்கான நடிப்பு வர இன்னும் நாளாகும். வார்ப்புக்களில் வியக்க வைத்த அளவு பூக்களில் சோபிக்கவில்லை. வாசல் படியிலே.....? பல இடங்களில் அவர் பேசும் வசனம் கூடப் புரியவில்லையே!

டென்னிஸ் கோர்ட்டில் கதை ஆரம்பமாகிறதே கொஞ்சம் வித்தியாசமாக ஏதாவது கிடைக்கும் என்று நிமிர்ந்து உட்கார்ந்தால், கதாநாயகி ஜெயாவுக்குத் தன் காதலனுக்கு விளையாட்டு பொழுது போக்குத்தான் என்பதை அறிந்ததும் ஏற்படும் அதிர்ச்சியைப் போலவே நமக்கும் ஏற்படுகிறது. ஜகனாக விஜயகுமார் ரொம்பக் கச்சிதமாக நடித்திருக்கிருர் பாராட்டுக்கள்.

ஜெகனின் நண்பன் மோகனாக வரும் புதுமுகம் சுமன் இளவட்டத்தின் சேஷ்டைகளைக் கச்சிதமாகக் காட்டி 'கன்ட்ராட்' பெறும்படி செய்துள்ளார். முன்னுக்கு வரும் அறிகுறிகள் இருக்கின்றன. லதாவாக வரும் ஷோபாவுக்குத் தோற்றம் காலை வாரினலும் நடிப்பு கை கொடுக்கிறது.

பிரிந்த காதலர்களைக் கூட்டி வைக்கும் கைங்கரியத்தில் பெரும் பங்கு சுருளிக்கும் மனோரமாவுக்கும் உண்டு. பாஞ்சாலி சபதம் தெருக் கூத்தும், திருட்டுச் சாராயக் குடிகாரப்பேச்சும் கொஞ்சம் ஓவரானலும் கூட கதையை ஓட்ட உதவுகின்றன.

சோமனின் காமிரா சாமானியமல்ல.

வீட்டுக்கு வீடு வாசப்படி: சினிமாவுக்குச் சினிமா பழங்கஞ்சி!

-கௌசிகன்



முற்றுப் பெறாத வாக்கியங்கள்..

மதஜ மிருத்தியுஞ்சயன்

அத்தியாயம் 5

பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் பெங்களூர் ஜங்ஷனை அடைந்து பதினைந்து நிமிடங்கள் ஓடிவிட்டன.

முக்கால்வாசிக்கு மேல் வண்டி காலியாகிவிட்டது.

ரங்கூன் ராமையா பதற்றமில்லாமல் வண்டியிலிருந்து இறங்கினார்.

பதற்றம் என்பது அவரது அகராதியில் இல்லாத ஒரு வார்த்தை.

நிதானம் தவறினால் சொல்ப காரியமாக இருந்தாலும்கூட அது நினைத்தபடி நடக்காது என்பது அனுபவம் அவருக்குப் போதித்துள்ள பாடமாகும்.

குட்டையான உருவம். குண்டுதான். ஆனாலும் சதைப் பிண்டம் போல் இல்லாமல் ஆரோக்கியமானவராக எடுத்துக் காட்டும் குண்டு. பழுத்த பெங்களூரா மாம்பழ நிறம். தங்கப் பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி. பஞ்சகச்ச வேஷ்டி. அந்தக் காலத்துப்பாணியில் கைகளில் 'டக்'வைத்துத் தைக்கப்பட்ட முழுக்கை சில்க் சட்டை. தங்கப் பித்தான்கள். முகத்தில் காணாதது புன்னகை.

இதுதான் ரங்கூன் ராமையா.

'வைரம்' பற்றித் தெரிந்தவர்களுக்கு ரங்கூன் ராமையாவைப் பற்றி நிச்சயம் தெரியாமல் இருக்க முடியாது.

அவருடைய தாத்தாவுக்கும் தாத்தா ரங்கூனில் நகை வியாபாரத்தில் கொடி கட்டிப் பறந்துவிட்டு இந்தியாவுக்கு வந்தவர். அவருக்கிருந்த அடைமொழி 'ரங்கூன்' சந்ததிக்கே தங்கிவிட்டது.

பாண்டி பஜாரில் ஒரு வியாபாரம். ஹைதராபாத் கல்தான் பஜாரில் இன்னொரு வியாபாரம். பெங்களூர் சேஷாத்திரிபுரத்தில் ஒரு வியாபாரம் என்று வைரத்தில் பறந்து கொண்டிருந்தார்.

இவையெல்லாம் 'வெள்ளை'.

இந்தியாவின் பிரதான நகரங்களில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் 'லான்'களில் சட்டை இல்லாமல் திறந்த மார்புடன் காற்று வாங்கிக்கொண்டு, மிளகு தூவின வறுத்த முந்திரிப் பருப்புகளைக் கொரித்தவாறு பேசப்படும் 'கறுப்பு' வியாபாரத்தில்தான் அவரது தொழில் ரகசியமே அடங்கிக் கிடக்கிறது.

சில நிமிடங்களில் பல லட்சங்கள் புரளும் வியாபாரங்கள் அவை!

இரண்டு மாதங்களுக்கு முன்பு பம்பாய் 'ஒபராய் ஷெரடன்' ஹோட்டலில் ஒரு பெரிய மீன் சிக்கியது.

பத்து லட்சம் ரூபாய் முதல்.

அதிகம்தான்.

கவலைப்படாமல் இறங்கினார்.

பட்டை தீட்டிய வைரங்கள்.

தகதகத்தன.

ஒரு பிரெஞ்சுக்காரன், கஸ்டம்ஸ் அதிகாரிகள் கண்ணில் மண்ணைத் தூவிக் கொண்டு வந்துவிட்டிருந்தான்.

ராமையா மூக்கில் எப்படியோ வேர்த்து ஆளை மடக்கிப் போட்டார்.

வைரம் கை மாறியது.

சரியான விலை வரும்வரை அதை எங்கே பாதுகாத்து வைப்பது என்று யோசித்தார்.

கடைசியில் பங்களூர் வில்ஸன் கார்டனில் உள்ள ஒரு தேசிய வங்கி பாதுகாப்புப் பெட்டகத்தில், ஒரு சிகப்பு மேட்டித் துணியில் மூட்டையாகக் கட்டி வைத்து விட்டுப் போனார்.

ஒன்றரை மாதங்கள் ஓடியும் சரியான விலை படியவில்லையே என்று அவருடைய மனத்தினுள் ஒரு கவலை படர, மைசூரில் ஒரு புள்ளி சிக்கினான்.

அவரும் அவனும் ஒரு நாள் பெங்களூரில் சந்தித்தனர். 'செவன் ஹெவன்' ஹோட்டலில் அன்று பிற்பகல் அவன் வைரத்தைப் பார்த்தான்.

ஒரு லட்சம் அட்வான்ஸ் கொடுத்து ஒப்பந்தம் செய்து கொண்டனர். பாக்கி பத்தொன்பது லட்சத்தைப் பதினைந்து நாட்களில் கொடுத்து வைரத்தைப் பெற்றுக் கொள்வதாகப் பேச்சு.

சொன்னபடி அவனிடமிருந்து செய்தி வந்ததும்தான் ராமையா சென்னையிலிருந்து பெங்களூர் கிளம்பினார்.

பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து வைரத்தை எடுத்துக் கொண்டு நேராக மைசூர் சென்று கொடுத்துவிட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்னைக்குத் திரும்ப வேண்டியதுதான்.

ரிடர்ன் ஜர்னிக்குக்கூட பிளேனில் டிக்கெட் 'புக்' செய்தாகி விட்டது.

முன் தினமே டிரைவர் முத்துவை காரை எடுத்துக்கொண்டு பெங்களூர் போகச் சொல்லி அனுப்பிவிட்டு தாம் மட்டும் பிருந்தாவனில் வந்து இறங்கினர்.

வைரத்துடன் பெங்களூரிலிருந்து காரிலேயே மைசூர் செல்வதாக அவரது திட்டம்.

காருடன் பெங்களூர் சிடி ரயில்வே ஸ்டேஷனில் முத்து காத்திருந்தான்.

அவன் நல்ல பலசாலி. டிரைவராக மட்டுமில்லாமல் மெய்க் காப்பாளனாகவே ராமையாவுக்குப் பணியாற்றினான். வியாபாரத்தின் பரிணாமத்தைக் கூறாவிட்டாலும்கூட, பயணத் திட்டங்களை அவனை நம்பி ராமையா கூறுவார்.

மிகப் பெரிய வியாபாரமாக இருந்தாலொழிய அவர் இது மாதிரி கிளம்ப மாட்டார் என்பது முத்துவுக்குத் தெரியும்.

முத்துவின் மேல் இருந்த நம்பிக்கையால் மைசூர் பயணத் திட்டத்தை ராமையா கூறியிருந்தார்.

இந்தத் தடவை தம்முடைய நம்பிக்கை பொய்த்துவிடப் போகிறது என்று ராமையா அறிந்திருக்க நியாயமில்லைதான்!





லால்பகதூர் சாஸ்திரி, குடும்ப வாழ்க்கையிலும் நிதானம் மிகுந்தவர். சாப்பாட்டில் உப்பு குறைந்துவிட்டால் கூட, சாப்பிடும்போது ஒன்றும் சொல்ல மாட்டார். சாப்பிட்டு அரைமணி நேரம் கழிந்து, ஏதோ பேச்சுவாக்கில் மனைவியைக் கேட்பார்: "ஆமாம்... என்ன, இன்றைக்குச் சமையலில் உப்புப் போட மறந்துவிட்டாயா?"

ஆறு மாதங்களுக்கு முன்னால் தன் பெண் கல்யாணத்துக்கு அவன் ராமையாவிடம் ஐயாயிரம் ரூபாய் கடன் கேட்டான்.

ராமையா, முத்துவுக்கு இரண்டாயிரம் கடனுகக்கொடுத்து அதற்குமேல் கொடுத்தால் பணத்தைத் திருப்புவதில் அவனுக்குக் கஷ்டங்கள் இருக்கும் என்று சொல்லி மறுத்துவிட்டார்.

முத்து கெஞ்சினன்.

முடிவு என்று எடுத்துவிட்டால் ராமையாவை அசைப்பது எவராலும் முடியாத செயல்.

கெஞ்சல் குமுறல் ஆயிற்று.

கல்யாணம் நடந்தது.

பத்தாவது நாள் பெண் கண்ணீரோடு திரும்பினுள். வாக்களித்தபடி சீர் கொண்டு வந்தால்தான் வாழ்க்கை என்றுனும் கணவன். குமுறலில் குரோதம் கலந்தது.

இந்தக் கட்டத்தில்தான் அவனுடைய எஜமான விசுவாசத்துக்கு விலை பேசப்பட்டது.

நல்ல விலை தருவதாக ஆசை காட்டப்பட்டதும் சபலத்தில் வீழ்ந்தான்.

முப்பதினுயிரம் என்று முடிவாயிற்று.

பெண், புருஷன் வீட்டுக்குப் போய்விடுவாள் என்கிற திருப்தியில் தான் செய்யப் போகும் காரியத்தின் ஈனத்தை மறந்தான்.

தகுந்த சமயத்தில் சரியான தகவல் கொடுக்க வேண்டியது மட்டுமே அவனது வேலை.

தகவல் கொடுத்துவிட்டு அட்வான்ஸாக ஐயாயிரம் வாங்கிக் கொண்டாயிற்று.

தன்மீது எவ்விதச் சந்தேகத்தையும் எழுப்பாமல் அவர்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்று உறுதிமொழி வாங்கிக்கொண்டான். அது திருடர்களின் உறுதிமொழி என்று பாவம் அவனுக்கு நினைக்கத் தோன்றவில்லை,

முத்துவுக்கு வேறு விதமான எண்ணங்கள்.

ராமையா தற்போது செய்வது 'கருப்பு' வியாபாரம் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது.

வைரம் கொள்ளையடிக்கப்பட்ட பின்பும் 'திருடனுக்குத் தேள் கொட்டியது' போல் ராமையாவால் வாயைத் திறக்க முடியாது.

தன்னுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டதற்குத் தண்டனைகொடுத்தது போலும் ஆகிவிடும். அதே சமயம் தனக்கும் ஒரு நல்ல எதிர்காலம். இதுவே முதலும், கடைசியுமாகும். இதன் பிறகு செருப்பாய் உழைத்து நாணயத்துடன் இருக்க வேண்டும்.

பெங்களூர் — மைசூர் பாதையில் கார் ஓடிக் கொண்டிருந்தது.

இடுப்பில் முடிந்து கொண்டிருந்த சிகப்பு மேட்டித் துணி மூட்டையை வலது கையால் அழுத்தி மூடியபடி காரின் பின் சீட்டில் சுகமாகச் சாய்ந்து கொண்டு 'ஜர்தா-பீடா'வை வாயில் மென்று கொண்டு பெங்களூர் சீதோஷ்ண நிலையின் ரம்யத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார் ரங்கூன் ராமையா.

இன்னும் சில மணி நேரங்களில் உடைமையாகப் போகும் லட்சங்களை எங்கே முடக்கலாம் என்கிற எண்ணத்தில் அவரது மனம் சுழன்றது.

அதே சமயத்தில் சில மணி நேரங்களில் தனக்குக் கிடைக்கப் போகும் ஆயிரங்களினுல் ஒரு செம்மையான எதிர்காலத்தை எவ்விதம் அமைத்துக் கொள்ளலாம் என்று எண்ணமிட்டபடி வண்டியை ஓட்டினுன் முத்து.

திடீரென்று பின் பக்கத்துச் சக்கரங்களில் ஒன்று பெருத்த சத்தத்துடன் 'பங்சர்' ஆக, வண்டியை நிறுத்தினுன்!

'பாஸ்' தங்களைத் தனியாக அழைத்து ஏதோ முக்கியமான விஷயம் பற்றிப் பேச விரும்புகிருர் என்று செய்தி வந்ததும் டேவிட்டுக்கும் ஜோஸ¨க்கும் தலை கால் புரியவில்லை.

பொதுவாக செய்திகளைத்தான் பாஸ் அனுப்புவாரேயன்றி நேராக அழைத்து எவருடனும் பேச மாட்டார் என்பது 'அந்தக் கூட்டத்தில்' அனைவரும் அறிந்த உண்மை. அப்படியே அபூர்வமாக அழைத்துப் பேசினுலும் மற்றவர் பார்வையினின்று முகத்தை மறைத்துக் கொண்டுதான் பேசுவார்.

தனது பன்னிரண்டு வருடப் பழக்கத்தில் இரண்டு மூன்று தடவைகள்தான் ஜோஸ் அழைக்கப்பட்டிருக்கிருன். ஆரம்ப காலத்தில் யதேச்சையாக ஒரே ஒரு முறை அவருடைய முகத்தைப் பார்க்கும் வாய்ப்பும் அவனுக்குக் கிடைத்திருக்கிறது. ஆனுல் தற்போது அந்த முகஜாடை கூட அவனுக்கு நினைவில்லை.

டேவிட்டைப் பொறுத்த மட்டில் அவன் அழைக்கப்பட்டதே யில்லை. ஒரே ஒரு தடவை மைக்ரோ போனில் குரலைக் கேட்டிருக்கிருன். ஆனுல் தன் திறமை மீது அவர் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிருன்.



''அம்மா! நான் பக்கத்து பங்களா ரீடாவோட விளையாடட்டுமா?''

''வேண்டாம்! அவ அம்மாளை எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது!''

''அப்போ, நான் அவகூட சண்டை போடட்டுமா?''

—கோ. தீபா

இருவரும் 'பாஸி'ன் மறைவிடத்துக்குச் சென்றார்கள்.

முகம் தெரியாத வண்ணம் அமர்ந்து கொண்டு பேசலானார்.

''ஜோஸ்... டேவிட்... அந்த சி.ஐ.டி. பொடியன் விஷயத்திலே நீங்க கோட்டை விட்டது உங்க திறமையையே சந்தேகிக்கும் படி என்னை ஆக்கிவிட்டது. நீல் கமலும் முன்னை மாதிரி இல்லே.... ஜோஸ் நீதான் அவளைச் சரிப்படுத்தணும். நல்லதனமாச் சொல்லு... படியலேன்னா இங்கே அனுப்பி வை... நான் சரிப்படுத்தறேன்...

''ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயமாக் கூப்பிட்டிருக்கேன்... உங்களை நம்பி ஒப்படைக்கலாமா?''

பாஸ் நிறுத்தினார்.

''சொல்லுங்க பாஸ்... நாங்க உங்க நாய்ங்க... இந்தத் தடவை தவறிட்டா எங்க தலையை உருட்டிடுங்க....'' உணர்ச்சி வசத்துடன் டேவிட் பதில் சொன்னான்.

''ஆமாங்க பாஸ்...'' ஜோஸ் ஒத்துப் பாடினான்.

பாஸ் தொடர்ந்தார்.

''நீங்க ரெண்டு பேரும் தனித் தனியா ரெண்டு வேலைகளைச் செய்ய வேண்டும்...

''டேவிட் நீ முதலில் கவனிச்சுக்கோ...

''ரங்கூன் ராமையா விஷயம்தான் உனக்குத் தெரியுமே! நீதானே டிரைவர் முத்துவை மடக்கியவன். மெட்ராஸிலேந்து நியூஸ் வந்திருக்கு... வைரத்தோட ராமையா இன்று மைசூர் போகப் போகிறான். சரியான நேரம் பற்றி முத்துக்கிட்டேருந்து செய்தி வரும். ஏற்பாடு செய்திருக்கேன். நீ இங்கேயே இரு. செய்தி வந்ததும் துணைக்கு ரெண்டு பேரைக் கூட்டிக் கொண்டு கிளம்பு. காரை வழிமறிச்சு வைரத்தைக் கிளப்பிடுங்க. அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி முகத்தை மூடிக்குங்க. துரோகம் பண்றவங்களை நம்ப முடியாது. முத்துவோட கதையை முடிச்சடணும். ராமையாவைக் கொல்ல வேண்டாம். காரியம் முடிஞ்ச ஒரு மணி நேரத்திலே வைரம் என் கைக்கு வந்தாகணும்.

''இன்னும் இரண்டு மூணு நாட்களுக்குள்ளே எல்லாருடைய கணக்கையும் மெட்ராஸிலே பிரிச்சுக் கொடுத்துட்டுக் கம்பெனியை ரெண்டு வருஷம் க்ளோஸ் பண்ணி வைக்கலாம்னு திட்டம். சிங்கப்பூர் போகப் போறேன். இஷ்டப்பட்டவங்க வரலாம்.... திரும்ப வேணும்னா கம்பெனியை ஸ்டார்ட் செய்துக்கலாம்!

''என்ன, சந்தேகம் ஏதாவது உண்டா?''

''ராமையா திமிறினான்னா...?''

''ஒரு தட்டுத் தட்டு.... கூடிய மட்டும் கொன்னுடாதே... நிலைமை மீறிப் போகும் போலத் தோணினா அவனையும் முடிச்சடு.''

தனக்கு என்ன வேலையிடப் போகிறார் பாஸ் என்று ஜோஸ் காத்திருந்தான்.

''ஜோஸ் உன்னோட வேலை ரொம்ப சுலபமானது. அந்த சி. ஐ. டி. பொடியன் ரொம்பத் துள்றதா தகவல். அவனைக் குண்டு கட்டாக் கட்டிப்போட்டு நம்ப ஜெயநகர் பங்களாவிலே அடைச்சு வை. ஆட்களை உதவிக்குக் கூட்டிண்டு போ. அவசியம்னா நீல் கமலை பங்களாவிலே தங்கியிருக்கச் சொல்லு. பொடியனைப் பற்றிய விவரங்களை விசாரிக்க மெட்ராஸ்லே ஏற்பாடு செஞ்சிருக்கேன். அவனை வாகா மடக்கு. மெட்ராஸ்லே ஏதாவது தாண்டில் முள் கிடைச்சா மடக்கிப் போடுங்கன்னு 'இன்ஸ்ட்ரக்ஷன்' கொடுத்துட்டேன். ஒழுங்கா இருந்தான்னா நான் சிங்கப்பூர் போனதும் வெளிலே விட்டுடலாம். என்ன ஆளைக் கவனிக்கிறயா?''

''செஞ்சுடறேன் பாஸ்... ஒரு சின்னக் கோரிக்கை.''

''என்ன விஷயம்?''

''கம்பெனியைக் கலைச்சதும் நீல் கமலை என் கூட வைச்சுக்கலாம்னு ஆசை... உங்களுக்கு இஷ்டமில்லேன்னா வேணாம்...''

இதைக்கேட்டதும் டேவிட்டுக்கு உள்ளூறப் பற்றி எரிந்தது. ஜோஸ் கேட்டதை பாஸ் மறுத்துவிட வேண்டும் என்று மனத்துக்குள் 'கிராஸ்' போட்டுக் கொண்டான்.

''எனக்கு அப்ஜக்ஷன் இல்லே... எல்லாம் நல்லபடியா நடக்கிறவரை அவளை யோக்கியமா நடந்துக்கச் சொல்லு. அவளும் இஷ்டப்பட்டாக் கூட வைச்சுக்க...கூடத்தான் வெச்சுக்கலாமே தவிர பிஸினஸ் பண்ணக் கூடாது.... திரும்பவும் நாம்ப தொழில் ஆரம்பிச்சா அவ உதவி தேவைப் படலாம்... என்ன புரிஞ்சுதா?''

''யெஸ் பாஸ்....''

''நீங்க போகலாம்.''

வெளியே வந்தனர்.

ஜோஸை விடத் தனக்கு அதிக முக்கியத்வம் வாய்ந்த வேலையைக் கொடுத்திருக்கிறார் 'பாஸ்' என்று மகிழ்ந்த டேவிட்டுக்கு நீல் கமலைத் தன்னுடன் வைத்துக் கொள்ள ஜோஸுக்கு அவர் அனுமதி அளித்ததைத் தாங்க முடியாமல் பொறாமையால் மாய்ந்து போனான்.

பாஸ் சிங்கப்பூர் போனதும் ஒரு கை பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்தான்.

(தொடரும்)

ஓயாமல் நடந்து வருகிற யுத்த கோரத்தின் காரணமாக ஜான்ஸி நாட்டின் புழுதிப் படலம், புகை மண்டலமாய்ப் பரவி வீர மகாராஷ்டிரக் கண்களை நிமிட்டி விட்டுக் கொண்டிருக்கிறது....

சாதகம் செய்யக் கோரிய அந்நிய மாநில அரசன் தாந்தியாதோபேவின் படைகளோ, கைகூலிக்குக் கண்களை அடகு வைத்துப் பாதகம் செய்யத் தலைப்பட்டு விட்டன. இத்தனைக்கும் தாந்தியாதோபே ஒரு காலத்தில் பால்ய நண்பன்.

என்ன செய்வாள் ராணி லட்சுமி பாய்? கும்பினியர்களை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்தித் தனது சுதந்திரப் பதாகையை நிறுத்த உரிமை கர்ஜனை புரிந்தாள்.

எந்த விதத்திலும் தனது சுதந்திர தாகத்தைத் தீர்த்து, இந்த மண் அந்நியனுக்கு அடிமைப்படக் கூடாது என்பதற்காக ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடச் செய்தும், நம்மில் பிறந்த துரோகிகள் — பேய்களாகவும் பிசாசுகளாகவும் பிறக்க வேண்டிய லஞ்சச் சைத்தான்களின் மானங்கெட்ட ஈனத்தனத்தால் ஜான்ஸி நாடு விழுந்து படும் நிலைக்கு வந்து விட்டது.

1852-ஆம் ஆண்டு சரித்திரத்தின் ஒரு பொன்னேடாகத் திகழ வேண்டுமேயல்லாது புண்ணேடாகிப் புலம்பக் கூடாது என்பதில் தீவிரமாக முனைந்து பார்த்தாள் ராணி லட்சுமிபாய்.

இரவு பூத்துக் கருமையாக மணக்கிறது.

எப்படிப் பார்த்தாலும் தப்பிச் சென்றுவொழிய உயிர் தப்ப முடியாது என்கிற அவலமான நிலை...!


''ராணி! தயவுசெய்து சொல்வதைக் கேளுங்கள். நாளைப் போருடன் ஜான்ஸி நாடு வீழ்ந்து பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நாம் எதிர்பார்த்த தாந்தியா தோபேவும், பத்மநாதனும் உபாயம் செய்வதற்குப் பதிலாக அபாயம் செய்து விட்டார்கள். வீரம் பேசி நாளை வீர சொர்க்கம் அடைவதைக் காட்டிலும் ராஜதந்திரமாகச் சில காரியங்களைச் செய்து பின் வாங்கிப் பிறகு தாக்கி முன்னேறி இந்த வெள்ளைக் கழுகுகளை விரட்ட வேண்டும். தயவு செய்து யோசித்துப் பாருங்கள்...''

திவான் லட்சுமண ராவ் மிகவும் பணிவுடன் அமைதியான முறையில் எடுத்துச் சொல்லிப் பார்க்கிறார்...

கனன்ற கண்களுடன் உப்பரிகையில் ஒரு புலிபோல் உலாவிக் கொண்டிருந்த லட்சுமி பாய் ஒரு கணம் நின்று திரும்பிப் பார்க்கிறாள். அந்தக் கொஞ்சம் வெளிச்சத்திலும் அவளது கண்கள் ரத்த நிறமாக மாறியிருப்பது தெரிய வருகிறது.

திவான் லட்சுமண ராவின் அந்த வேண்டுகோள் ஏற்கும்படியாக இருந்தது. ராணி லட்சுமி பாயும் சம்மதித்தாள். ஆயினும் தனது பொன்னனைய மண்ணான ஜான்ஸியை விட்டு ஓடுவது அவளது இதயத்தைப் பிழிந்து ரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்கிறது. மண் மணக்கும் இதயம் கொண்டவளாயிற்றே ஜான்ஸி நாட்டரசி லட்சுமி பாய்!

நட்ட நடு நிசித் தாண்டவம் நல்லவர்களுக்குப் பயன்படுவது என்பது யோக மார்க்கம்; அது தீயவர்களுக்கும் திசை காட்டுவதென்பது போக மார்க்கம். அந்த நள்ளிரவில் நல்லிதய நாயகி



யான ராணி லட்சுமி பாய், முதுகில், சின்னஞ் சிறு பாலகனான தாமோதரனைக் கட்டிக் கொண்டு, கோட்டையின் ரகசிய வாயிலைத் திறந்து கொண்டு புறப்பட ஆயத்தமாகிறாள்...

ஒரு கணம் தனது அரண்மனையையும், கோட்டையையும் கவனிக்கிறாள். கனன்ற கண்கள் தண்ணிய நீரை உகுக்கின்றன...

பொழுது விடிகிறபோது எப்படியும் யூனியன் ஜாக் கொடி கோட்டையில் பறக்கும்....

ஓ....

சத்தமிட்டுக் கதறி அழவேண்டும் போல் அந்த வீரப் பிரதாபம் நிறைந்த பெண்ணுள்ளம் குமுறுகிறது...

''ராணி...''

மீண்டும் திவான் குரல்...

குதிரைகளின் சேணங்கள் தளர்ந்து தட்டிவிடப் படுகின்றன...

குறிப்பிட்ட வீரர்களுடன் ராணி லட்சுமி பாய், தனது அன்புக்குரிய கணவர் ராஜா கங்காதர ராவ் காணிக்கை போலத் தந்து, வளர்த்து ஆளாக்கி அரசாளும்படி ஆணையிட்ட குழந்தை தாமோதரனுடன் புரவியில் விரைகிறாள்.



அப்போது....

—ஓர் ஆங்கில ஒற்றன் இதைக் கவனித்து விட வேண்டுமா?

அந்த நொடிப் போதில் ராணி லட்சுமி பாய் தப்பிப் போகிற செய்தி கும்பினிச் செவிகளில் காய்ந்த கொப்பரை எண்ணெயாய்க் கொட்டத் தொடங்கித் துடிக்கச் செய்கிறது.

ஆங்கில கும்பினி சேனாதிபதி சர் ஹியூ ரோஸ் தொண்டை வெடிக்கக் கதறுகிறான்: ''போய் அந்தப் பெண் பிசாசைப் பிடியுங்கள்; அதைப் பிடித்து உயிருடன் இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.''

உண்மையிலும் இப்படி ஒரு பெண் புலியைப் பார்க்க ஆங்கில சாம்ராஜ்யமே ஆர்வமுடனிருந்தது. இந்திய மண்ணில்பிறந்த புழுவும் சத்தியமாகத் துடிக்குமானால் புலியாகி உறுமும் என்கிற அதிசயச் செய்தியை நன்றாகவே உணர்ந்திருந்தனர், ஆங்கில நாடு பிடிக்கும் வெறியர்கள்...

எத்தனை ரகசியமாய்ப் புறப்பட்டும் இச் செய்தி தெரிந்து விட்டதே என்ற ஏக்கத்துடன் திவான் லட்சுமியிடம் தெரியப் படுத்துகிறார்...

புரவிகள் காற்றினும் கடிதாகப் பறந்து விரைகின்றன...

'சோ' என்ற எதிர் காற்றில் குதிரைகளின் குளம்புச் சத்தங்கள் திசைகளை அதிரடித்துக் கலங்கச் செய்கின்றன. பயமுறுத்துவதற்கென்றே மலரும் இரவு நேரமும் பயந்து திக்குமுக்காடுகிறது...

வானிலே ஐந்தாம் நாள் தேய்பிறை அழுது வடிகிறது...

நட்சத்திரங்கள் கண் சிமிட்ட மறந்து என்ன நடக்கப் போகிறதோ என்பதில் எதிர்பார்த்துத் திகைக்கின்றன...

அந்த இக்கட்டான நேரத்தில் தெய்வபலம் போல் ஓர் உதவி இடைபுகும் என்று யார் எதிர்பார்த்தார்கள்? சித்த சுத்தியுடன் செய்கிற எந்தத் தர்மமும் தலை காக்கும் என்கிற நிஜப் பூர்வமான உண்மைகளை மக்கள் அனுபவிக்காமலா 'தர்மம் தலைகாக்கும்' என்று சொல்லி வைத்து இருக்கிறார்கள்? ராணி லட்சுமி பாயை அப்போதைக்கு அது காக்கவே செய்தது...

ஜான்ஸி நாடு கலவரமற்ற, கனகப் பிரகாசத்துடன் 'ஓகோ'வென்றிருந்த காலம்.



ராஜாஜியின் துணைவியார் காலமானபோது; "ஐந்து குழந்தைகளை வைத்துக்கொண்டு எப்படி சமாளிப்பீர்கள்? குழந்தைகளை உத்தேசித்தாவது தாங்கள் மறுமணம் செய்துகொள்ள வேண்டும்" என்று பலரும் யோசனை சொன்னார்கள்.

அவர்களுக்கு ராஜாஜி சொன்ன பதில்: "ஐந்து குழந்தைகளை வைத்துக் கொண்டு சமாளிப்பது சிரமம் தான்! ஆனால், ஆறவதாக ஒரு பெண் குழந்தையையும் சேர்த்து விடப்பார்க்கிறீர்களே!"

அரசக் கணவர் ராஜா கங்காதர ராவுடன் குங்குமச் சிவப்புத் துலங்கச் சுமங்கலியாக வாழ்ந்த நேரம்...

தனது அருமைத் தோழிகளான மந்திரியுடனும் • காசியுடனும் பல்லக்கில், குல தெய்வமான மகாலட்சுமியைத் தரிசிக்க மாலை நேரத்தில் சென்றுகொண்டிருந்தாள். அப்போது பனி கடிக்கும் குளிர் காலம்.

சாலை வழியே ஏழைகள் குளிரால் வாடித் தவிக்கிற பரிதாப நிலை கண்டு நடுங்கிப் போனாள் ராணி லட்சுமி பாய். நாட்டின் பரிபாலனத்தில் இப்படியான ஏழ்மைச் சொருபங்கள் தேகத்துக்கு ஆடை வசதியற்றும் வாழ்கிறார்கள் என்கிற உண்மையறிந்து வேதனையில் நெஞ்சு பொருமினாள்.

ஆ! எத்தனை ஏழைகள் — ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாய்க் குளிர் தாளாது நடுங்கிச் சாகிறார்கள்...

மறு நாளே...

ராணி லட்சுமியிடமிருந்து இரக்கத்துக்கு ஓர் இலக்கியம் போன்ற உத்தரவு பிறந்தது. அது:

''நாட்டில் எந்த மூலை முடுக்குக் கடைகளிலிருக்கும் அனைத்துக் கம்பளங்களும் அரண்மனைக்கு வந்தாக வேண்டும். அவற்றுக்கான விலையை அக்கணமே பெற்றுக்கொள்ளலாம்!''

திவான் லட்சுமண ராவ் மிகவும் சிரத்தையுடன் இந்த ஆணையை ஏற்று. மதித்துச் செயல்பட்டார்.

பனியால் நடுங்கும் ஏழைகளைப் பறையறிவித்து வரவழைத்துத் தனது கரங்களாலேயே கம்பளங்களை அகம் மலரக் [கொடுத்து முகம் மலர மகிழ்ந்தாள் லஷ்மிபாய். ஏழைகள் அனைவருமே ஜான்சி நாட்டையும் அதன் அரசியையும் வாழ்த்தி விடைபெற்றுக் கொண்டிருந்தனர்; கம்பளம் மட்டுமல்லாது சில ஏழைகளுக்கு துணிகளையும் வழங்கினாள். அவர்களது மானம் காப்பாற்றப்படுவதில் மிகுந்த அக்கறை காட்டினாள்.

ஓ....என்லே இந்த ராணியின் இரக்கச் சிந்தை....

லட்சுமி பாயும் இரக்கத்தின் காரணமாக இப்பணியை ஏற்றாளே யொழிய தர்மம் என்கிற பெயரால் செய்யவில்லை. தர்மம் என்ற பெயரால் செய்யாத தருமம்தானே தலையான தருமம்...

அந்த இரக்கம் நிறைந்த தருமம் இப்போது ஜான்சி ராணியைக் காக்க முனைந்தது.

ராணியார் தப்பிச் செல்கிறார்கள்; ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுச் சிந்தித்துச் செயல்படவே இந்தச் சுதந்திர தாகம் மிக்க— நாட்டுப் பற்று மிகுந்த வீராங்கனை தப்பிச் செல்கிறார்கள் என்பது அவர்களுக்குப் புரிய வந்தது.

அனைவருமே அந்த நள்ளிரவில் — அந்த ஒருசில கணங்களில் கூடி ஒரு முடிவுக்கு வந்தனர்: எந்த ராணி லட்சுமி பாய் அன்புடன் தந்த கம்பளங்களை அதுவரை போர்த்திக் குளிரைத் தணியச் செய்து வந்தார்களோ, அந்தக் கம்பளங்களை ஏந்திக் கொண்டு அனைவருமே பாதையின் குறுக்கே புகுந்தனர்.

ராணி லட்சுமி பாய் சென்ற பாதையில் அவர்கள் அந்தக் கம்பளங்களைக் கோணல் மாணலாக விரித்தனர். பின்தொடர்ந்து வருகிற ஆங்கிலக் கும்பினிப் படைகளின் குதிரைகளின் குளம்புகள் கம்பளத்தில் பட்டதும் அவற்றின் சுருக்கத்தின் காரணமாகக் குதிரைகளின் கால்கள் தடுமாறி ஒன்றின் மேல் ஒன்றாக மோதி விழுந்து ?ரிய நேரிடும் என்பது அவர்களின் கண்டுபிடிப்பு. அதன்படி செயல்பட்டனர்.

தொலைவில் ஆங்கிலக் கும்பினிப் படை வீரர்கள் தங்கள் புரவிகளைத் துன்புறுத்தி வேக வேகமாக விரைந்து வருகிறார்கள்...

இருட்டில் பாதையிலிருந்த கம்பளங்கள் அவர்கள் கண்களில் படவில்லை. வழி நெடுக விரிக்கப்பட்ட கம்பளங்களைக் குதிரைகள் மிதித்துத் தாண்டுகிறபோது...

வான் முகட்டைக் கிடுகிடுக்கவைக்கும் குதிரைக் கனைப்புக்கள்...

வீரர்கள் தடுமாறி விழுந்து அலறுகிற கோரக் குரல்கள்.....

ஒன்றோடொன்று மோதுகிற பயங்கரக் காட்சி....

சாலையோரத்தில் பதுங்கிக் கவனித்த அந்த ஏழைகளின் முகங்கள்தாம் அந்த இருட்டில் எண்ணமாய் மலர்ந்து மணக்கின்றன.....

ஒவ்வொரு கம்பளமும் அதனதன் விலைக்கு மீறிய — விலைக்கே அடங்காத — செயல் புரிந்த விந்தை கண்டு பெருமிதப் படுகின்றது...

பொழுது விடிகிறபோது செய்தியைக் கேள்விப்பட்ட கும்பினிச் சேனாதிபதி சர் ஹியூரோஸுக்குக் குளிரத் தொடங்கி விட்டது;



தாக்கர்ஸி–தலைமுறையினரின் நாகரீக இணைப்புப் பாலம்

நாகரீகத் துணிகள்; குடும்பத்தினருக்கான துணிகள். அணியவும், உபயோகிக்கவும், பெருமையுடன் எடுத்துக் காட்டவும் தரமுயர்ந்த தாக்கர்ஸி துணிகள். வாயில், வீரே, கேம்ப்ரிக், பாப்ளின், 2 × 2, வேட்டி, ஜக்கார்டு, ஃபர்னிஷிங், க்ரோஷ்ரிங்க் ரெஸிஸ்ட் (முன்கூட்டியே சுருக்கப் பட்டது) மற்றும் டெபிலைஸ்ட் (மடிப்பைத் தடுக்கப் பரிசோதனை செய்யப்பட்டது) காட்டன் ஆகியவற்றில் எல்லையில்லா டிசைன்கள், நெசவுகள் மற்றும் வண்ணங்கள். தவிர பாலியெஸ்டர் கலப்பிழை சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், ஆடைத் துணிகள் மற்றும் புடவைகள்.

TF ஹிந்துஸ்தான் ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்ஸ் லிட்.

1873 முதல் உன்னதமான ஜவுளிப் பரம்பரைச் சின்னம்

Dattaram-HM-17 TAMIL

நிகரில்லா வலிமைக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—லேசுடா லேசு,
நீடித்த உழைப்புக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—வீசுடா வீசு !



நிர்லான்

நைலான் மீன்பிடி வலை மணிக் கயிறு

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ் & கெமிக்கல்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம்:
"நிர்லான் ஹவுஸ்"
254—B, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு.
பம்பாய்-400 025

சென்னை கிளை:
300, மோப்ரேஸ் ரோடு
சென்னை—600 018

லின்டாஸ்-NIR-12-303 TM



W. S. கிருஷ்ணசாமி நாயுடு

திமுக அமைச்சரவையில் அதிகார துஷ்பிரயோகம் பற்றிய கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் அறிக்கை சமீபத்தில் வெளிவந்தது. அவரைப்பற்றி:

வசதியான குடும்பத்தில் பிறந்தவர். நன்றாகப் படிப்பார் என்றாலும் ஏனோ நான்காவது பாரத்தில் பெயிலாகிவிட்டார். பள்ளித் தலைமை ஆசிரியர் அவருடைய இரண்டு கைகளிலும், செம்மையாகப் பிரம்பால் அடித்து விட்டாராம்.

இவர் பி. ஏ. பாஸ் செய்ததை வீட்டில் பெரிய விருந்து வைத்துத் தடபுடலாகக் கொண்டாடினர். காரணம் இவர்தான் குடும்பத்திலே முதன் முதலில் பட்டம் வாங்கியவர்.

பி. ஏ. முடித்த பிறகு, அரசாங்க உத்யோகம் பார்த்து கலெக்டராகப்பதவி உயர்வு பெறவேண்டுமென்று ஆசை இருந்தது. வேலை வேட்டை நடுவே நேரத்தை வீணாக்காமல் இருக்கச் சட்டம் படிக்க ஆரம்பித்தார். வேண்டா வெறுப்பாகத்தான்! ஆனால் அவர் வாழ்க்கையையே அது மாற்றியமைத்து விட்டதே! வழக்கறிஞர் என்ற முறையில் இவருக்குப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது ரமணமகரிஷி வழக்குதான்.

பகவான் ரமண மகரிஷியின் பூர்வாசிரம உறவினர்கள், அதுவரை பகவானை பார்க்காதவர்கள், அவர் பெயரும் புகழும் அடைவதைக் கண்டு அவரோடு சொந்தம் கொண்டாடினார்கள். ஆரம்பகாலத்திலிருந்தே பகவானுடன் ஒன்றாகப் பழகிய சீடர்களை ஒதுக்கிவிட்டு, பகவான் இருந்த இடம், சுற்றுப்புறப் பகுதிகள், மற்றும் ஆசிரம விவகாரங்களைத் தாங்களே கவனிக்க ஆரம்பித்தார்கள். இது சீடர்களுக்குப் பெரும் கோபத்தைக் கிளப்பியது. எப்போதும் இறைவனையே நினைக்கும் ரமணர், இந்தச் சர்ச்சையைப் பற்றிக் கொஞ்சமும் பொருட்படுத்தாதது, அவரது 'உறவினர்களுக்கு' ரொம்பச் சாதகமாக இருந்தது.

முதலில் வழக்கு உறவினர்களுக்குச் சாதகமாகவே இருந்து உண்மை மறைக்கப்பட்டது: இறுதியில் ஆசிரமத்தைச் சேர்ந்த பெருமாள் சாமி இவரை ஆஜராகும்படி கேட்டனுப்பினார். "எனக்கு எதிராக வழக்காடிய பிரபல வக்கீல் டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், முடிவில் என் கட்சி ஜெயித்தபோது, என்னை ஆரத்தழுவிக் கொண்டது என் வாழ்வில் மறக்க முடியாதது" என்கிறார் கிருஷ்ணசாமி நாயுடு.

1949ல் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியானார். ஏழரை ஆண்டு இப்பதவியை வகித்த கிருஷ்ணசாமி நாயுடுவுக்கு இன்று வயது எண்பத்திநாலு.

"லக்ஷ்மி"

டாக்டர் திரிபுரசுந்தரி, லக்ஷ்மி என்று தமக்குப் புனைபெயர் வைத்துக் கொண்டதற்கான காரணத்தைச் சமீபத்தில் மாக்ஸ்முல்லர் பவனில் Face to Face நிகழ்ச்சியில் கூறினார்:

"எனது பெரியம்மா மகாலக்ஷ்மி. இளம் வயதில் பூ விழந்து பொட்டிழந்து விதவைக் கோலம் எய்தியவள் — அவருடைய பெயரை விளங்க வைக்கவேண்டும் என்று எனக்கு ஆசை. என்னிடம் கொள்ளைப் பிரியம் கொண்ட அந்த அம்மாளின் பெயரான 'லக்ஷ்மி' என்பதைப் புனைபெயராகச் சூடிக் கொண்டேன்."

இவர் டாக்டராகப் பணிபுரிந்த காலத்தில் இவரிடம் சிகிச்சை பெற்ற ஆங்கிலோ இந்தியப் பெண்மணி ஒருத்தி சிகிச்சை முடிந்து விடை பெறும்போது ஒரு டஜன் கர்சீப்பைப் பரிசளித்துச் சென்றாள். இதைக் கண்ட ஏழைப்பெண் ஒருத்தி தன் சிகிச்சை முடிந்து விடைபெற்ற போது தன் புடவைத் தலைப்பில் முடித்திருந்த நாலணா நாணயத்தைத் தந்தாராம். "அன்போடு அந்த ஏழைப் பெண் கொடுத்ததை இன்றும் நான் பொன்னை போல் பாதுகாத்து வருகிறேன்" என்றார் லக்ஷ்மி.


"நீங்களே டாக்டர். யாரோ ஒருவர் உங்களுக்குக் கொடுத்த இலக்கிய டாக்டர் பட்டத்தை ஏன் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்?" என்று ஓர் எழுத்தாளர் குத்தலாகக் கேட்டார் லக்ஷ்மியிடம்.

"ஐயா! அன்போடு கொடுக்கும் எந்தப் பொருளும் எனக்கு ஒசத்தி தான். என்னிடம் ஏழைப்பெண் அன்போடு கொடுத்த நாலணாவைப் பெற்றுக்கொண்டது போல இந்த டாக்டர் பட்டத்தையும் ஏற்றுக் கொண்டேன்!" என்று ஒரு போடு போட்டார் லக்ஷ்மி.

— பி. எஸ். எம். : சிக்கி



FOCUS




நான் கண்ட ரஷ்யா

அகிலன்

12. ஜார்ஜியத் தேயிலை:

ஒருபுறம் கருங்கடலுக்கும் மறுபுறம் காஸ்பியன் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில், காரகோரம் மலைத் தொடர்களைத் தன்னகத்தே கொண்ட நிலப் பரப்பு ஜார்ஜியக் குடியரசு. மலைக் காடுகளால் சூழப்பெற்ற நாடாதலால் அங்கு மலைச் சரிவுகளில் ஏராளமாகத் தேயிலை விளையக்கூடுமென நான் நினைத்துக்கொண்டிருந்தேன். நம் நாட்டிலும் இலங்கையிலும் குளிர் நிறைந்த குன்றுகளில் தேயிலை பயிரிடப்படுவதையும், தேயிலைத் தளிரைக் கிள்ளி எடுக்கப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுவதையும் நான் கண்டிருக்கிறேன்.

ரஷ்யச் சிரிப்பு!



ஆனால் ஜார்ஜியாவில் தேயிலை சமவெளியில் — கருங்கடல் பிரதேசத்தை யொட்டிய வயல்களில் பயிரிடப்படுகிறது. தேயிலைத் தளிரைக் கிள்ளி எடுக்கப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் அங்கே தேவைப்படுவதில்லை. அவ்வளவு வேலையையும் ஒருசில யந்திரங்களே செய்துவிடுகின்றன! ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் தொடங்கி அக்டோபர் வரை ஏழு மாதங்களுக்குத் தேயிலையைச் சேகரிக்கிறார்கள். நவம்பர் முதல் மார்ச் முடியக் குளிர் காலமான ஐந்து மாதங்களில் தேயிலைத் தோட்டங்களில் எந்த வேலையும் நடப்பதில்லை. ஆனால் தேயிலை ஆலைகளில் அவை பதனிடப்பட்டு 'பாக்' செய்து அனுப்பும் வேலை ஆண்டு முழுவதும் நடக்கிறது.



✱ பிளிஸி நகரில் இந்திய எழுத்தாளர்களுக்கு விருந்துபசாரம் செய்த ஜார்ஜிய பேராசிரியர் நிகோலாய்.

ரஷ்யாவில் எந்தப் பண்ணையாக இருந்தாலும் சரி, — தேயிலைப் பண்ணையோ, பருத்திப் பண்ணையோ, திராட்சைப் பண்ணையோ, காய் கறித் தோட்டமோ, பழத் தோட்டமோ, எதுவாக இருந்தாலும் சரி,— ஒரு ஏக்கர், பத்து ஏக்கர், ஒரு வேலி, பத்து வேலி என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை.

✱ மேலே: ஜார்ஜிய சமவெளியில் அரசாங்கப் பண்ணையில் இயந்திரம் தேயிலையைக் கிள்ளி எடுக்கிறது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் நமக்கு எதிரிலும் வலதுபுறத்திலும் இடது புறத்திலும் அந்தப் பண்ணை பரந்து கிடக்கும். கிலோ மீட்டர் அல்லது மைல் கணக்கில் தான் அதன் பரப்பை நாம் கணக்கிடவேண்டும்! ஒன்று, அது தொழிலாளர்களே சேர்ந்து நடத்தும் கூட்டுப் பண்ணையாக இருக்கும்; அல்லது அரசாங்கப் பண்ணையாக இருக்கும். பண்ணையில் உழைக்கும் தொழிலாளர்களுக்குப் பண்ணைக்கு அருகில் வரிசை வரிசையாக வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பார்கள். ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவரவர் வீட்டைச் சுற்றிலும் சுமார் அரை ஏக்கர் நிலம் வீதம் வழங்கப்படும். அதில் அவர்கள் சொந்தமாகக் காய்கறிகளையோ, பழங்களையோ பயிரிட்டு அருகில் உள்ள நகரங்களில் விற்பனை செய்து கொள்ளலாம். பண்ணைகளை அடுத்துக் குழந்தைக் காப்பகங்களான பாலவாடிகளும் பள்ளிகளும் இருக்கும். மருத்துவ மனைகளும் உண்டு.

பிலிஸி நகரத்தில் உள்ள தேயிலை ஆலை ஒன்றுக்குச் சென்றிருந்தோம். தேயிலையைப் பதனிட்டுப் பொட்டலங்களாகத் தயார்செய்யும் ஆலை அது. அதன் தொழில் நுணுக்கத் தலைவர் திரு பாவெல் இந்தியாவுக்கு 1954—55ல் வந்து சில மாதங்கள் தங்கியிருந்து இங்கிருக்கும் தேயிலைத் தொழில் பற்றி ஆராய்ந்தவர். அவரிடம் விவரங்கள் கேட்டேன். ரஷ்யாவில் யாரிடம் எந்த விவரம் கேட்டாலும் 'புரட்சிக்கு முன்பு எப்படி இருந்தது, இப்போது எப்படி இருக்கிறது, என்று ஒப்பிட்டுத்தான் கூறுவார்கள். அவர்கள் இப்படி ஒப்பிட்டுக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்வதில் ஒன்றும் தவறில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

''புரட்சிக்கு முன்பு 500 ஹெக்டரில் பயிரிட்டோம். இப்போது 66000 ஹெக்டர். முன்பு மூன்று தேயிலை ஆலைகள் இருந்தன. இப்போது 86 ஆலைகள். இந்த ஆண்டு நாலு லட்சத்து முப்பதாயிரம் டன் தேயிலை உற்பத்தி செய்து ரஷ்யா முழுவதற்கும் அனுப்பியுள்ளோம். எங்களை விட்டால் அஜர்பைஜான் சிறிதளவு தேயிலை உற்பத்தி செய்கிறது'' என்றார் பாவெல்.


அந்தத் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். எங்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளைக் கோட்டு மாட்டி விட்டார்கள். எங்கள் துணியிலிருக்கும் தூசி அங்குள்ள தானியங்கி (Automatic) இயந்திரங்களைக் கெடுத்து விடாமலிருப்பதற்காகவோ, அல்லது தேயிலைத் தூள் எங்கள் மீது படாமலிருக்கவோ தெரியவில்லை. அவ்வளவு பெரிய தொழிற்சாலையில் உழைத்தவர்களின் மொத்த எண்ணிக்கை 470தான்! இயந்திரங்கள் தாங்களாகவே இயங்கி மளமளவென்று தேயிலைப் பொட்டலங்களை வரிசையாக அடுக்கிக் கொண்டிருந்தன. அங்கங்கே ஒருசில தொழிலாளர்கள் நின்று கவனித்துக் கொண்டிருந்தனர்; அவ்வளவுதான்.

''தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு?'' என்று கேட்டேன்.

''150 ரூபிள். கணக்கப்படி, போனஸ் எல்லாம் சேர்த்தால் மாதம் இருபது முப்பது ரூபிள் வீதம் அதிகம் கிடைக்கலாம்.''

இந்த ஊதியம் அதிகம் என்று சொல்ல முடியாது. ஆனாலும் உணவு, உறைவிடம், போக்குவரத்து, எரிபொருள் முதலியவை அங்கே மலிவாகக் கிடைப்பதாலும், கல்வி மருத்துவம் போன்றவை முற்றிலும் இலவசமாக அளிக்கப்படுவதாலும், விலைவாசி கட்டுப்படுத்தப் பட்டிருப்பதாலும் அது போதுமான ஊதியம் என்றே எனக்குத் தோன்றியது. தவிரவும் குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து உழைத்து ஊதியம் பெற வாய்ப்புள்ள நாடு அது.

ஜார்ஜியா மிகுதியான அளவில் தேயிலையை உற்பத்தி செய்தாலும் இந்தியத் தேயிலைக்கு அங்கே நல்ல மதிப்பிருக்கிறது.



✱ பிலிஸியின் தேயிலை ஆலை ஒன்றில் தேயிலைப் பொட்டலங்களை அிலனுக்கும் வித்யாலங்காருக்கும் காட்டுகிறார் ஆலைத் தலைவர் பாவெல்.

இது தரத்தில் உயர்ந்ததென்று அவர்கள் கருதுகிறார்கள்.

அடுத்து நாங்கள் பிலிஸி நகரத்திலுள்ள தலைமை இருதய நோய் மருத்துவமனைக்குச் சென்றோம். ரஷ்யர்கள் நோயைக் கண்டு மிகவும் அஞ்சுபவர்கள். அதற்கு எதிராகப் பெரும் பொருட் செலவில் கடுமையான போராட்டம் நடத்தி வெற்றி கண்டு வருபவர்கள். நூறு வயதுக்கு மேற்பட்ட பலரை இன்னும் நாம் அந்த நாட்டில் காணலாம்! நாங்கள் லெனின்கிராடு ஓட்டலில் தங்கியிருந்தபோது, எங்களைத் தேடிக் கொண்டு ஒரு லேடி டாக்டர் வந்து விட்டார். அங்கிருந்த பயணிகளில் யாருக்காவது நோய் இருந்தால் தேடிப் பிடித்து மருந்து கொடுப்பதற்காக அனுப்பப்பட்ட டாக்டர் பல நோய்களை அவர்கள் கட்டுப்படுத்தி

46964

இந்த எண்ணின் மதிப்பு என்னவென்று கேட்டால் யாரும் சொல்வார்கள். நாற்பத்தாறாயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து நான்கு என்று. இதே எண்ணை வலப் புறமிருந்து திருப்பிப் படியுங்கள்: அதே மதிப்புத்தான் வரும்.

இதுபோல, இடப்புறமிருந்து அல்லது வலப்புறமிருந்து படித்தாலும் ஒரே மதிப்பைத் தெரிவிக்கின்ற எண்களுக்கும் பெயர் —Palindromic எண்கள்.

ஒரு சொல்லோ, சொற்றொடரோ அல்லது சிறு செய்யுளோ முதலிலிருந்து படித்தாலும் கடைசியிலிருந்து படித்தாலும் ஒரே பொருளைக் கொடுத்தால் அது ஒரு Palindrome என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். Madam என்கிற ஆங்கிலச் சொல், தமிழில் 'மோரு போருமோ?', 'விகடகவி' என்பதெல்லாம் Palindrome வார்த்தைகளுக்கு உதாரணங்கள். இந்தப் பெயர் அதே குணமுள்ள எண்களுக்கும் பொருந்தும்.

நீங்கள் ஏதாவதொரு எண்ணைச் சொல்லுங்கள். அது எத்தனை இலக்கமுள்ளதாக இருந்தாலும் சரி; அதிலிருந்து ஒரு Palindromic எண்ணை நாம் உருவாக்க முடியும். உதாரணமாக:—

1. ஏதேனும் ஒரு எண்ணைக் குறித்துக் கொள்ளுங்கள். இதன் பிறகு:
2. அதே எண்ணை வலப்புறமிருந்து திருப்பி இன்னொரு புதிய எண்ணாக எழுதுங்கள்.
3. இந்த இரண்டு எண்களையும் கூட்டுங்கள். இப்பொழுது மூன்றாவது புதிய எண் கிடைத்திருக்கிறது.
4. இப்படியே மேற்சொன்ன வழிமுறைப்படி செய்து கொண்டே இருங்கள், ஒரு Palindromic எண் கிடைக்கும் வரை! இப்பொழுது — 476 என்ற எண்ணை எடுத்துக் கொள்வோம். இதிலிருந்து ஒரு பாலின்ட்ரோமிக் எண்ணை எப்படிக் கண்டு பிடிப்பது?

இப்படித்தான்	1.	476
	2.	476
		674
	3.	1150
	4.	0511
		1661

இது ஒரு பாலின்ட்ரோமிக் எண் தானே!

ஒரே ஒரு ரகசியத்தை மட்டும் இங்கே சொல்லியாக வேண்டும்: இத்தனை நேரம் நீங்கள் படித்தவற்றை எல்லாம் பரீட்சை செய்து பார்ப்பதற்கு, மறந்து போய்க் கூட 196 என்ற எண்ணைத் தேர்ந்தெடுத்து விடாதீர்கள். ஆயிரம் முறை புரட்டி எடுத்தாலும் அதிலிருந்து ஒரு பாலின்ட்ரோமிக் எண் கிடைப்பது அரிது. இந்த எண் மட்டும் ஒரு விதி விலக்கு. -நன்றி: சயன்ஸ் டுடே

- கார்த்திக் குமார்



அவர்: நீங்க எடுத்தபடம் சென்சாராகி முப்பது நாள் ஆச்சே ஏன் இன்னும் ரிலீஸ் பண்ணாமே இருக்கீங்க!

தயாரிப்பாளர்: அதிலே நடிச்ச ஹீரோவைப் பத்தியும் ஹீரோயினைப் பத்தியும் நிறைய கிசு கிசு ரிலீஸ் ஆகட்டும். அப்புறம் படத்தை ரிலீஸ் செய்யலாம் அப்படின்னு காத்திட்டிருக்கேன்.

—கே. ஆர். எம்.

எத்தனை?

இந்த மரத்தில் மறைந்து இருக்கும் பறவைகள் எத்தனை? கண்டு பிடியுங்கள்!

வர்ணம் பூசிப் பாருங்கள்!



விடை: மொத்தம் ஏழு பறவைகள் மறைந்து இருக்கின்றன.

— ரமணி ரங்கநாதன்

ஆகா! என்ன பணிவு!

'பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்—ஆசிரியர்'

சாதாரணமாக இப்படித்தான் பத்திரிகைகளிலிருந்து கதை கட்டுரைகள் திரும்பவரும். ஆனால் சீனாவில் சில பத்திரிகைகள் கதை கட்டுரையைத் திருப்பி அனுப்பும் விதமே அலாதி!

"தங்கள் கதை—கட்டுரையைப் படித்துப் பார்த்தோம். உலகிலேயே சிறந்த படைப்பு உங்களுடையதுதான் என்று முடிவு செய்தோம். ஆனால் இதை வெளியிட்டால் அடுத்து வெளியிடும் கதை கட்டுரைகள் இதே தரத்தில் இருந்தாக வேண்டும் என்று வாசகர்கள் தொந்தரவு செய்ய ஆரம்பித்து விட்டால், நாங்கள் எங்கே போவது? இம்மாதிரிப் படைப்புகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை கூட வருவதில்லை. ஆகவே, உங்களிடம் ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு உங்கள் கதை—கட்டுரையை இத்துடன் திருப்பி அனுப்புகிறோம்!

தங்கள் காலடியில் விழுந்து வணங்கும்,


தங்கள் வேலைக்காரனுக்கு வேலைக்காரன், ஆசிரியர்.

—கோ. இரா —ஜூனியர் ஸ்டேட்ஸ்மன்



இந்திரா காந்தி BLOW UP செய்துப் பார்க்கவும்.





அரபு மொழியைத் தமது 46-வது வயதில் கற்கத் தொடங்கிய விநோபா பாவேக்கு, திருக்குர் ஆனை, அந்த மொழியில் மனப்பாடமாகவே ஓதத் தெரியும்!

விட்டாலும், உலகம் முழுவதிலும் இப்போது மிகுந்துள்ள இருதய நோய் அவர்களுக்கும் ஓர் அறைகூவலாகவே இருக்கிறது. ஜார்ஜியாவின் தலைமை இருதயநோய் மருத்துவமனையின் பல பகுதிகளையும் நாங்கள் சுற்றிப் பார்த்தோம். அமெரிக்கா, ஸ்வீடன், இன்னும் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் நவீன இயந்திரங்களை அவர்கள் வாங்கி வைத்துப் பயன் படுத்துகிறார்கள்.

''உங்கள் இருதயத்தை இப்போது பார்த்து விடுவோமா?'' என்றார் அதன் தலைமை மருத்துவர் டாக்டர் பார்டியாஷ்விலி.

ஏற்கனவே குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த நான் இன்னும் அதிகமாக நடுங்கத் தொடங்கி விட்டேன். என்னை இப்போது ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துப்போக வேண்டுமென்கிறாரா?

''வேண்டாம் எனக்குச் சற்று ரத்த அழுத்தம் அதிகம்; மாத்திரை சாப்பிடுகிறேன். இருதயத்துக்கு வேறு ஒன்றும் கோளாறு இல்லை.''

''அப்படியென்றால் கட்டாயம் பார்த்து விடவேண்டும். எங்கே, கோட்டைக் கழற்றுங்கள்.''

கோட்டை மட்டிலும் கழற்றி விட்டு, சட்டை, ஸ்வெட்டர் இவற்றோடு நின்றேன். அருகிலிருந்த ஓர் இயந்திரத்தில் ஏறி நிற்கச் சொன்னார். அந்த இயந்திரத்தின் முன்னால் ஒரு டெலிவிஷன் பெட்டிபோல் ஒன்று இருந்தது. ஒரு ஸ்விட்சை அழுத்தினார்கள். அந்த டெலிவிஷனில் என்னுடைய மார்பு எலும்புக் கூட்டுக்குள் என் இதயம் விரிந்து சுருங்கி, விரிந்து சுருங்கி, டக் டக் என்ற சத்தத்துடன் இயங்குவதைக் கண்டேன். சத்தத்தையும் கேட்டேன். வேடிக்கையான காட்சியாக இருந்தது அது.

''இருதயம் நன்றாகத்தான் இருக்கிறது: கவலை வேண்டாம். எதற்கும் இதை-இந்தப் படத்தையும் ஒலியையும்—பதிவு செய்து தருகிறேன். தேவையான போது உங்கள் ஊரில் பரிசோதித்துக் கொள்ளலாம்'' என்றார்.

நன்றியோடு நான் அதை மறுத்து விட்டேன். காரணம் சென்னையில் அந்த அளவுக்கு வசதிகள் இருக்குமா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. என்னையடுத்து 83 வயதான வங்காள எழுத்தாளர் கோஸ்வாமி போய் நின்றார். பெரிய தொரு துணிப்பையைப் போல் அவர் இருதயம் உள்ளே தொங்குவதைக் கண்டோம். அது சரியாக அடித்துக் கொள்ளவுமில்லை. கான்பூர் சதி வழக்கு, மீரட் சதி வழக்கு என்றெல்லாம் 12 ஆண்டுகள் வெஞ்சிறையில் சுழித்த தியாகி அவர். அந்தப் பரிசோதனையின் விளைவு அவர் எங்களோடு இந்தியாவுக்குத் திரும்பாமல், மாஸ்கோவில் வைத்தியம் செய்து கொள்ளத்தங்கி விட்டார். அவரைப் பேணி மருத்துவம் செய்து அனுப்பும் பொறுப்பை ரஷ்யா ஏற்றுக்கொண்டு விட்டது.

அங்கெல்லாம் நோயாளிகள் தங்களைத் தேடி வரவேண்டுமென்று காத்துக் கொண்டிருக்காமல், தொழிற்சாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் டாக்டர்கள் நேரில் சென்று ஒவ்வொருவராகப் பரிசோதனை செய்கிறார்கள். அதைத் தவிர, நகரத்தின் பல பகுதிகளிலும் இயங்கும் மருத்துவ மனைகள், தங்களால் குணப்படுத்த இயலாதவர்களைப் பெரிய மருத்துவ மனைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. மருத்துவத்துக் கென்று யாரும் சொந்தமாகச் செலவு செய்யவேண்டியதில்லை.

(தொடரும்)



சிமெண்ட் காங்கிரீட் கலவை இயந்திரங்கள் இயங்குவதை நாம் பல சந்தர்ப்பங்களில் கட்டிடம் கட்டப்படும் இடங்களில் பார்த்திருக்கிறோம். ஆஸ்திரியாவில் இந்த இயந்திரத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து கார் டிக்கியில் வைத்துக் கொண்டு ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு செல்ல வசதியாகத் தயாரிக்கிறார்கள்! கட்டிடக்கலை இன்ஜினியர்களுக்கு இது வரப்பிரசாதமாக இருக்கிறதாம்! — நியூஸ் வீக்



Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி, தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ, இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்' ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❋ குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்
❋ கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள் .

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை

A-வகுப்பு	B-வகுப்பு	C-வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல் -	1-ம் நெம்பர்	நேரில் பெறலாம்
ரூ. 350-00	250-00	175-00	115-00	90-00	75-00	V.P.P.யிலும் பெறலாம்

மாதாந்திர சுற்றுப் பயண விவரம்: ஒவ்வொரு ஆங்கில தேதிகளிலும்

பிரதம வைத்தியர் தங்குமிடங்கள் :

சென்னை-600002, 1 முதல் 8ந் தேதி வரை: ராமச்சந்திரா லாட்ஜ், போன்: 846526, 6 அத்திப்பட்டன் தெரு, அண்ணாசாலை சமீபம். P ORR. & Sons – பெட்ரோல் பங்க் மேற்புறம் ரோடு. காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

சேலம் தலைமை அலுவலகம்: , 11, 16, 17, 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள்.

திருச்சி: 9, 10 தேதி: அசோக் பவன், ஜங்ஷன் ரோடு. போன்: 25763, காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கோவை: 12, 13ந் தேதி. ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ், ராஜ வீதி, போன்: 33330.

பொள்ளாச்சி 14ந் தேதி: மாடர்ன் லாட்ஜ், தாலுகா ஆபீஸ் எதிர் சந்து, காலை 8 மணி முதல் 12 மணி வரை.

திருப்பூர் 14ந் தேதி: ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. மாலை 3 மணி முதல் 5 மணிவரை.

ஈரோடு 15ந் தேதி: ஆனந்த் லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

மதுரை 21, 22 தேதி: மணீஸ் கேப். (டவுன் ஹால் ரோடு) போன்: 22019. காலை மணி முதல் இரவு 7 மணி வரை.

சாத்துக்குடி 23ந் தேதி: ராதா லாட்ஜ், ஜி. சி. ரோடு, காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை.

திருநெல்வேலி: 23, 24ந் தேதி: நெல்லை லாட்ஜ். காலை 7 மணி முதல் இரவு 8 வரை.

மதுரை 26ந் தேதி: மணீஸ் கேப், டவுன் ஹால் ரோடு, போன்: 22019. காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை.

திண்டுக்கல் 26ந் தேதி: ஆரியபவன் லாட்ஜ் பழனி ரோடு. மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை.

உதவி வைத்தியர் தங்குமிடங்கள் :

விழுப்புரம் 3ந் தேதி: வாசவி விஹார் ஹோட்டல், எம். ஜி. ரோடு. காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கடலூர் என்.டி. 3ந் தேதி: ஹோட்டல் பிருந்தாவன். மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை.

சிதம்பரம் 4ந் தேதி: ஜெயராம் லாட்ஜ், (மேல வீதி) காலை 7 மணி முதல் பகல் 3 மணி வரை.

கும்பகோணம் 5ந் தேதி: தாஜ்மஹால் லாட்ஜ் பொற்றாமரைக் குளம் (போன்: 1423) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தஞ்சாவூர் 6ந் தேதி: அசோகா லாட்ஜ், (ராஜா கலை அரங்கம்) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கம்பம் 21ந் தேதி: யூனிவர்சல் லாட்ஜ், காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.

தேனி 21ந் தேதி: பாண்டியன் லாட்ஜ், மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

விருதுநகர் 23ந் தேதி: ஹோட்டல் அஜந்தா. காலை 7 மணி முதல் 12 மணி வரை.

இராஜபாளையம் 23ந் தேதி: அசோகா லாட்ஜ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

நாகர்கோவில் 24ந் தேதி: உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், போஸ்டாபீஸ் ஜங்ஷன் ரோடு, காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.


தென்காசி 25ந் தேதி: பார்வதி லாட்ஜ். காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கோவில்பட்டி: 25ந் தேதி சரஸ்வதி லாட்ஜ், மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

தலைமை அலுவலகம் :

சிவராஜ் சித்த வைத்தியசாலை

C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்
(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)
காந்தி ஸ்டேடியம் – சேலம்-636007



ஆற்றாது அழுத கண்ணீர்!!

குன்றக்குடி பெரியபெருமான்

போட்டிக்கதை-11

திருநீலகண்ட நாயனார் மடத்துக்கு எதிரே தெருவை அடைத்துக் கொண்டு நின்றது கூட்டம். அலங்கரித்த மேடையின் மேல் மண் குதிரைகள் இரண்டு வைக்கப்பட்டிருந்தன. குதிரைகளின் முகங்களைச் சிறிய கோராத் துண்டுகளால் மூடி வைத்திருந்தனர். மேடையைச் — சுற்றி நான்கு திசைகளிலும், பக்கத்துக்கு ஒன்றாக நகரத்திலிருந்து கொண்டு வந்திருந்த 'கியாஸ் லைட்' 'உஸ்' என ஓசை எழுப்பியவாறு எரிந்து கொண்டிருந்தது. சுற்றிலும் சூழ்ந்து நின்ற ஆண்களும் பெண்களும் குதிரைகளைப் பார்ப்பதும் குஞ்சான் வேளாரின் கைராசியைப் புகழ்வதுமாக இருந்தனர். சிலர் வேளாரின் விரத முறைகளைப் பற்றிக் கதையளந்து கொண்டு நின்றனர்.

ஆச்சு, இன்னும் கொஞ்ச நேரந்தான்; ஊர் அம்பலக்காரர் வந்ததும், குதிரைகளுக்குக் கண் திறக்கப்பட்டு, அவை சண்மாய்க்கரை ஐயனார் கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு விடும்.

ஐயனார் கோயிலில் கொண்டு போய் வைத்து, படைப்புப் போட்ட பின், குதிரைகளைக் கண்மாய்க் கரை மதகில் நிறுத்தி விட்டுத் திரும்பும்பொழுதே மழை தூரத்திக் கொண்டு வந்துவிடும்! மழை வராவிடினும் சிறு தூறலாவது போடுவது வழக்கம்!

குதிரை எடுப்பு!

அந்தக் கிராமத்துக்குள் மழையை வரவழைக்க எடுக்கப்படும் ஆவணி மாதத்துப் பௌர்ணமி விழா. ஐயனார், குதிரைகளில் ஆரோகணித்து மழை மேகங்களைக் கிராமத்துக்குள் ஓட்டி வருவதாக ஓர் ஐதீகம்! அப்படியொரு நம்பிக்கை!

ஆடி மாதம் முழுவதும் ஒருவேளை உணவாக விரதமிருக்கும் குஞ்சான் வேளார், ஆவணி முதல் நாள், இரவு நடு நிசியில் 'ஐயனார் உத்தரவு' ஐ ஒரு கண்மாயின் உள்ளில் மண்ணெடுத்துத் தாமே தலைச் சுமையாகக் கொண்டு வருவார். கொண்டு வந்த மண்ணைத் தழைத்துக் குழைத்துக் குதிரைகளை உருவாக்கும்வரை குஞ்சான் வேளார் கரைத்துக் குடிப்பாரே தவிர, கட்டியாக ஏதும் உண்ண மாட்டார். குதிரைகள் கண்மாய் மதகில் ஏறி, மழையின் சிறு தூறல் உடலில் விழும்வரை நோன்பிருக்கும் குஞ்சான் வேளாரின் விரதம் கிராமத்தில் பிரசித்தமானது.

கிடுகிட்டியும் உறுமியும் தூரத்தில் முழங்க ஆரம்பித்து விட்டன. கிராமத்தின் வடக்குப்புறத்தில் அமைந்த வீரமாகாளி மூலைப்பொட்டலில் முத்துவீரப்ப அம்பலக்காரர் தமது பரிவாரங்களுடன் குதிரை எடுப்புக்குப் புறப்பட ஆயத்தமாகிவிட்டார். பெண்கள் ஐயனார் பள்ளுச் சொல்லி, வாய்க்குள் 'லோலோ' வென நாக்கைச் சுழற்றிக் 'குலவை' இட்டனர். ஒரு முறை எல்லோரையும் கண்களால் அளந்த பின் அம்பலக்காரர் 'இம்' என்றார்.

அதுவரை அம்பலக்காரரைப் பார்த்தே வாசித்துக் கொண்டிருந்த நாயனக்கார சின்னத்தம்பி, தெருவை நோக்கி நாயனத்தைத் திருப்பி, நடக்கத் தொடங்கினான். கிடுகிட்டி, உறுமி, ஒத்து, மேளம், தாளம் ஆகியவை நாயனத்தின் பின் நகர்ந்தன. அம்பலக்காரருக்கு முன், தேங்காய் பழத் தட்டை ஏந்திக் கொண்டு நின்ற பண்டாரம் தட்டில் பட்டுத் துண்டு இல்லாததைப் பார்த்தவுடன், அம்பலக்காரரிடம், ''பரிவட்டத்தைக் காணோமுங்களே!'' என மெல்ல இழுத்தான்.

''அந்தப் பயலுக்குப் பரிவட்டம் வேறெ கூட்டணுமோ? ம்....ம்.... கொடுத்த தட்டை எடுத்துக்கிட்டு நகருடா...'' என அம்பலக்காரரைச் சினந்து சொன்ன வார்த்

தைகளின் பொருள் புரியாமல், பண்டாரம் அயர்ந்து நடந்தான்.

போன பொங்கலின்போது-முத்துவீரப்ப அம்பலக்காரர் மனைவி நாச்சியாரம்மாள், குஞ்சான் வேளாரிடம் பொங்கல் பானை வாங்கப் போனவன் வெறுங் கையுடன் வீடு வந்து சேர்ந்தாள். அழுகையும் ஆத்திரமும் பீறிட வேப்ப மர நிழலில் தகட்டுக் கல்லில் அமர்ந்திருந்த அம்பலக்காரருக்கு முன்னே வந்து நின்ற நாச்சியாரம்மாளை, ''என்னடி நாச்சியாரு! என்ன ஒரு மாதிரியா வந்து நிக்கிறாய்?'' எனக் கேட்டவாறு வெற்றிலைச் செல்லத்தைத் திறந்தார் அம்பலக்காரர்.

''சட்டிப்பானை செய்யற வேளானுக்குக் கூட என்னைப் பார்த்தாக் கேவலமாப் போச்சு! பொங்கல் வைக்க எடுத்த பானையை நாலு பேருக்கு நடுவில கீழே வெச்சுட்டுப் போன்னு சொல்லிப்பிட்டானே! அங்கயே நாக்கைப் பிடுங்கிக்கிட்டுச் சாகலாம் போல ஆயுட்டுது. ஊரு அம்பலாருக்கு வாக்கப்பட்டுச் செல்லாக்காசு ஆகிப்போனா இந்த நாச்சியாரு!'' என விம்மத்தொடங்கினாள் அம்பலக்காரர் மனைவி.

''எந்த வேளாண்டி அப்படிச் சொன்னவன்?'' நிதானமில்லாமல் சுண்ணாம்பு தடவிய வெற்றிலையை மென்றதால் அம்பலக்காரருக்கு வாய் சிவக்கவில்லை. ஆனால் இப்போது கண் சிவந்தது!

''பானை செய்யறதிலே குஞ்சான் கொஞ்சம் நல்லாச் செய்வானேங்கிற நெனைப்பிலே அவன் சூளையிலே ரெண்டு பானையை எடுத்தேன். அது என்னமோ குதிரை எடுப்புக்குக் கொண்டு வர்ற மண்ணிலே செய்த நாயனார் பானையாம். அதை யாருக்கும் கொடுக்க மாட்டானாம்! நாயனார் மடத்துக்குத்தான் கொடுக்கிறதாம்! கையிலே வெச்சிருந்த பானையைப் பறிச்சு ஒரு மூலையிலே கொண்டு போயிக் கவித்துப்பிட்டு, வேறே பானைகளைக் காட்டினான். 'அதுக நல்லா இல்லயே அப்பா'ன்னேன். அப்போ அவன் சொன்னதை இப்போ நினைச்சாலும்....'' மீண்டும் விம்மினாள் நாச்சியாரம்மாள்.

''என்னடி சொன்னான்?''

அம்பலக்காரரின் அலறலைக் கேட்டு வைக்கோல் கடித்துக் கொண்டிருந்த வண்டி மாடுகள் திரும்பிப் பார்த்தன.

'' 'தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் புடிச்சுப் பதம் பாக்கிற காலமாய்ப் போச்சு' அப்படின்னு எகத்தாளமாய்ப் பேசிப்புட்டான். அதுவும் நாலு பேருக்கு மத்தியிலே.'

''ஓகோ... இவரு பானை கொடுக்கலேன்னா நம்ம வீட்டிலே பொங்கல் வெக்க முடியாதோ! இந்தக் கழுதை இல்லேன்னா இன்னொரு கழுதை! காலம் கெட்டுப்போச்சல்ல.... எவன் எதைப் பேசறதுன்னு ஞாயம் கெட்ட நாளாச்சல்ல... வரட்டும், வரட்டும்! குஞ்சான்தானே அவனைக் கவனிக்கிற வகையிலே கவனிச்சுக்கிறேன். சரி...சரி... நீ போ'' என எழுந்த அம்பலக்காரர், அப்போதுதான் புகையிலைக் கத்தையை அடக்கியதையும் மறந்து, வாய்க்குள் இருந்தவற்றையெல்லாம் ஒரே துப்பாகத் துப்பினார்!

குதிரை எடுப்புக் குஞ்சான் வேளாருக்கு ஊர் மஞ்சுவிரட்டில் கிடைக்கும் சாயத் துண்டு மரியாதையை இல்லையென்று செய்து மாசி மகத்துக்கு அவல் இடிக்கக் குடிகள் கொடுக்கும் முனை கட்டிய நெல்லைக் கொடுக்க விடாது தடுத்து, பங்குனிப் பொங்கல் படையலில் கிடைக்கும் பங்கை விவகாரமாக்கி, வைகாசி வசந்த விழாவில் ஊர்ப் பொதுவில் வழங்கும் வேஷ்டி சேலையைப் பணப் பற்றுக் குறை எனக் கொடுக்க மறுத்த பின்னும், அம்பலக்காரருக்குக் குஞ்சான் வேளாரிடம் கொண்டிருந்த வன்மம் குறைந்தபாடில்லை.

வாத்தியங்கள் முழங்க, பெண்கள் குலவை இட, அம்பலக்காரர் நாயனார் மடத்தை நெருங்கியவுடன், பூஜகர் சண்முக வேளாரிடமிருந்து பரிவட்டத் தட்டைப் பெற்று, மேடையில் கொண்டு போய் வைத்தார்.

வாத்தியங்கள் நிறுத்தப்பட்டன.

''ம்....ம்.... சீக்ரம் கண்ணைத் தொறக்கச் சொல்லுங்க....'' என வேகப்படுத்தினார் அம்பலக்காரர்.

''அதுசரி, வழக்கம் போலே அம்பலக்காரய்யா பரிவட்டத்தைக் கட்டுங்க...ம்... குஞ்சான் இப்படி வாருமய்யா.'' எனக் கூறிய வாறே தட்டில் பட்டு இல்லாததைப்பார்த்த பூஜகர், அம்பலக்காரரை நோக்கி, ''ஆமா! பரிவட்டப் கட்டப் பட்டைக் காணோமே!'' என வினவினார்.





1925-ஆம் ஆண்டு, சர். அஸ்டோஷ் முகர்ஜியிடம், சர். சி.வி. ராமன் சொன்னார்: "எனக்கு வசதி செய்து கொடுங்கள்; ஐந்தே ஆண்டுகளில் நோபல் பரிசு வாங்கிக் காட்டுகிறேன்."

யாரும் அவருக்கு வசதி செய்து கொடுக்கவில்லைதான். ஆனால், ஐந்து ஆண்டுகளில் —1930-ஆம் ஆண்டு— பௌதிக இயலுக்கான நோபல் பரிசை சர். சி.வி. ராமன் வாங்கி விட்டார்!

''பட்டாவது துட்டாவது! அதெல்லாம் அந்தக் காலமய்யா! மண் குதிரைக்குக் கண் எழுதப் பட்டு வேறு வேணுமாக்கும்? ம்...ம் எல்லாம் சரிதான். துண்டை எடுத்திட்டுக் கண்ணை எழுதச் சொல்லுங்க... வேணுமானா குதிரைத் தலைகளை மூடியிருச்சிற கோராத் துண்டுகளை எடுத்துக் குஞ்சான் தலையிலே போடுங்க'' என வாய் விட்டுச் சிரித்தார் அம்பலக்காரர்.

அம்பலக்காரரது பேச்சும், சிரிப்பும் கூட்டத்தினரிடையே பரபரப்பை ஊட்டி, அவரவர்கள் தங்கள் எண்ணங்களை ஒருவருக்கொருவர் கிசுகிசுத்துக் கொண்டனர்.

மேடையின் அருகே மழிக்கப்படாத முகத்துடன், மெலிந்த உடலின் இடுப்புப் பகுதியில் வேட்டிக்கு மேல் சிறிய காசிப் பட்டை விரித்துக் கட்டியவாறு நின்று கொண்டிருந்த குஞ்சான் வேளார், 'கியாஸ்' விளக்கின் ஒளியில் அனைவரது கண்களுக்கும் ஒரு முனிவரைப் போல் தோற்றம் அளித்தார்.

மீண்டும் அம்பலக்காரரின் குரல் கனைத்துச் கனன்றது.

சாதுவாக நின்று கொண்டிருந்த குஞ்சான் வேளார், சன்னதம் வந்தவரைப் போல, ''பரிவட்டம் கட்டாமே குதிரையைத் தொட மாட்டேன்'' என அலறினார்.

''ஓகோ! நீ கண் எழுதாட்டா குதிரைகள் மதகடி போய்ச் சேராதோ?'' என்றவர், மேடையின் மேல் ஏறி, குதிரைகளின் தலைகளை மூடியிருந்த துண்டுகளை எடுத்துவிட்டு, மேடையிலிருந்தவாறே, ''தூக்குங்கடா குதிரையை'' என மீசை துடிக்க, கண்கள் சிவக்கக் கோபாவேசமாக ஆணையிட்டார் அம்பலக்காரர்.

கூட்டத்திலிருந்த அனைவரும் திடுக்கிட்டுத் திகைத்து வாய் புதைத்து நின்றனர். குதிரைகளைத் தூக்குபவர்கள் என்ன செய்வதென்று புரியாமல் மேடைக்கு அருகே நெருங்கினர்.

''கண் திறக்காமே குதிரைகளைத் தூக்க விடமாட்டேன்'' எனக் குஞ்சான் வேளார் சொன்ன மறு விநாடியே மேடையிலிருந்து கீழே இறங்கிய அம்பலக்காரர், ''டேய்! குஞ்சான்! என்னடா சொன்னே? குதிரைகளைத் தூக்க விட மாட்டாயா? உன்னைத் தூக்கிக்கிட்டுப் போருப்பலே செய்து போடுவேன். விலகுடா அந்தப் பக்கம்'' எனத் தமது வலது கையால் வேளாரை ஒரு தள்ளுத் தள்ளினார்.


கூட்டத்தினரிடையே போயி விழுந்த வேளார் உடல் வெட வெடக்கக் கலங்கிய கண்களுடன் பூஜகரின் உதவியால் மெல்ல எழுந்து நின்றார்.

''வாத்தியக்காரங்க என்னடா பண்றீக?'' என அம்பலக்காரரின் அதட்டலைக் கேட்டதும், நாயனம், கிடுகிட்டி, உறுமி, தாளம் ஆகியவை ஒருசேர முழங்கத் தொடங்கின. பெண்கள் பன்னுச் சொல்வதை மறந்து குலவை இட்டனர். ஒரு முறை அம்பலக்காரர் குதிரை தூக்குபவர்களைச் சினத்துடன் நோக்கினார். அவர்கள் வேகமாக மேடையின் மேல் ஏறி, மூங்கில்களைக் கொண்டு குதிரைகளை வரிந்து கட்டி, மேடையிலிருந்து அவைகளை மெல்ல இறக்கித் தோளில் தூக்கி வைத்துக் கொண்டனர். அம்பலக்காரர் 'இம்' என்றார். கூட்டம் நகர்ந்தது.

குதிரைகளைத் தூக்கிச் கொண்டு ஊர்வலம் புறப்பட்டபோது, உடல் நடுங்க, மனம் சிலிர்க்க, கண்களில் சுரக்கும் நீர் சன்னங்களின் வழி இறங்க விக்கித்து நின்ற குஞ்சான் வேளாரை ஒரு முறை நோக்கிப் பெரிதாகச் செருமினார் அம்பலக்காரர்.

குதிரை எடுப்புக் கூட்டம் ஊர்வலமாகச் சென்று கிராம எல்லையைக் கடந்து கண்மாய் உள்வாய்க்குள் இறங்கியதும் குளிர்ந்த ஈரக் காற்று வீசத் தொடங்கியது. கீழ் வானத்தின் அடிவாரத்தில் மின்னல் கண்டது. குளிர் காற்றுச் சுழல் காற்றாக மாறி, மேகத் திரள் வட்ட நிலாவை மறைத்து. 'பொட்'டெனச் சிறு துளிகள் விழத் தொடங்கின. கூட்டம் பெரு நடையாகச் சென்று கண்மாய்க் கரை ஐயனார் கோயிலை அடைந்தவுடன், விரைவாகப் படைப்புக்கு ஆயத்தம் செய்யப்பட்டது. படையல் முடிவதற்கு முன்னமேயே 'சடசட' வெனப் பெருமழை பெய்யவே, வேகமாகக் குதிரைகளைத் தூக்கிக் கொண்டு போய் மதகடியின் மேல் வைத்துவிட்டு, ஊரை நோக்கித் தலை தெறிக்க எல்லோரும் ஓடினர்.

அம்பலக்காரரை எதிர்பார்த்திருந்த நாச்சியாரம்மாள் தாழ்வாரத்தில் மழையில்


பொறியைத் தட்டியதுமே...
திவ்யமான
ஒளி பரவுகிறது
அழகு
ஒளிர்ந்து சிரிக்கின்றது
உங்கள் பூஜை அறைக்கு.
உன்னதமானதொரு விளக்கு!
வீட்டினுள்ளே காம்ப்டாலகஸ்
ஒளிரட்டும்...ஓ ..அழகைத்
தனித்தொளிரச் செய்யும்
அதன் பாங்கே சிறப்புத் தான்!
PEJ-4087
காம்ப்டாலக்ஸ், எடுத்துப்பொருத்-
திடக் கூடிய, எத்தேவைக்கும் ஏற்ற
ஸ்பாட்லைட். ஷேடுகளோ, விசேஷ
இணைப்புகளோ தேவையில்லை.
பொறியைத் தட்டுங்கள். வேண்டிய
வெளிச்சம் உடனே பரவட்டும்.
PHILIPS
1879-1979
100 YEARS
ELECTRIC
LIGHT
காம்ப்டாலக்ஸ்
எடுத்துப் பொருத்திடலாம், எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட்
பிலிப்ஸ்

காலையிலே நின்தன்னைக் கண்டுகொண்டேன் சன்மார்க்கச்
சாலையிலே இன்பம் தழைக்கின்றேன் – ஞாலமிசைச்
சாகா வரம்பெற்றேன் தத்துவத்தின் மேல்நடிக்கும்
ஏகா நினக்குஅடிமை ஏற்று

— திருஅருட்பா

நனைந்தவாறு நுழைந்த அவருக்குத் துவட்டிக்கொள்ளத் துண்டை எடுத்துக் கொடுத்தாள். நனைந்துவிட்ட வேட்டி துண்டுகளைக் களைந்துவிட்டு வெறும் கோவணத்தோடு நின்றுகொண்டு, துவட்டியவாறே மனைவியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சொன்னார்: ''அடியே! நாச்சியாரு! எனக்கும் மனசுக்குள்ளே உதைப்புத்தான். கண் தொறக்காமே குதிரைகளைக் கொண்டு போறோமே, ஒருவேளை இந்த வருஷம் மழை கிழை பெய்யலையின்னு கிராமத்திலே நம்ம தலையைப் போட்டு உருட்டிப்பிடுவானுகளே! ஆனா... எந்த வருஷமும் குதிரைகளைக்கொண்டு போயிச் சேர்த்துட்டுத் திரும்பறபோதுதான் மழை வரும். இந்த வருஷமோ... கொண்டுபோறபோதே மழை பிடிச்சுக்கிட்டுது....''

''அடேயப்பா! என்ன மழை! ரெண்டு நாழியா மானம் பொத்துக்கிட்ட மாதிரி, கொட்டு கொட்டுனு கொட்டுதே! விட்ட பாடில்லையே! ராத்திரியே நம்ம கண்மாய் ஒரே பெருக்காய்ப் பெருகிடும் போல இருக்கே! சரி, சரி, வாங்க...இன்னைக்கி உங்களுக்குப் பிடிச்ச நெத்திலிக் கருவாடு பொன் வறுவலாப் பொரிச்சு வச்சிருக்கேன்'' எனக் கூறியவாறே நனைந்து கிடந்த வேட்டி துண்டுகளைப் பிழிந்து கொடிக் கயிற்றில் போட்டுவிட்டு வீட்டினுள் சென்றாள் நாச்சியாரம்மாள்.

விடிந்ததும் விடியாமலும் இருந்த கருக்கலில் காவல்கார சாத்தான் அம்பலக்காரர் வீட்டுக்கு முன் வந்து நின்று கொண்டு, ''ஐயா அம்பலாரய்யா ஐயா அம்பலாரய்யா!'' எனப் பதற்றத்துடன் கூவி அழைத்தான். சாத்தானின் கூவலைச் செவிமடுத்த அம்பலக்காரர், வீட்டின் பட்டகசாலைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து, ''என்னடா சாத்தா? கருக்கல்லே வந்து என்ன சத்தம்?'' என்றார்.

''மோசம் போயிட்டுது.... அம்பலாரய்யா மோசம் போயிட்டுது ....'' எனப் படபடத்தான்.


''என்னடா சொல்றே?''

''ஆமா... அம்பலாரய்யா. ஊரே கூடிக் கண்மாய்க்கரையிலே நிக்குது. ஆனா ஒண்ணும் செய்ய முடியலியே.... ரெண்டு எடத்துலே கரை புட்டுக்கிட்டு, வெள்ளம் சீறி வயலுக்குள்ளே பாயறதைப் பாத்தா...''

''கரை உடைப்பு எடுத்திருச்சா?...'' எனப்பதறிப்போன அம்பலக்காரர், துண்டை எடுக்கக் கூட நினைவில்லாமல், கட்டிய வேட்டியோடு வீட்டை விட்டு இறங்கிக் கண்மாய்க் கரையை நோக்கி ஓடத் தொடங்கினார். காவல்க்கார சாத்தானும் அவரைப் பின்தொடர்ந்து ஓடினான்.

கண்மாய்க்கரையில் கிராமமே திரண்டு நின்றது. மண்வெட்டி, கூடை, கோணிப்பை ஆகியவைகளைக் கொண்டு வந்திருப்பினும் வெகுண்ட வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தும் வகையறியாது, திகைத்து நின்ற கூட்டத்தை அம்பலக்காரர் கண்ணுற்றார். இரவில் குதிரைகளை நிறுத்திய மதகிலும், கொஞ்சம் தள்ளிப் புறமடைக்கு அருகிலும் உடைப்பெடுத்து வெள்ளம் வேகமாக வயலுக்குள் பாய்ந்து கொண்டிருந்தது. மதகடியில் வைத்த குதிரைகளை வெள்ளம் இழுத்துச் சென்றிருக்க வேண்டும். வெள்ளப் பாய்ச்சலின் வேகம் குறைந்த பிறகே, உடைப்புகளை அடைக்க முடியுமெனக் கருதினார் அம்பலக்காரர்.

உடைப்புக்கள் இரண்டிலிருந்தும் வயலுக்குள் சீறிப் பாயும் வெள்ளத்தைச் சிவந்துபோன கண்களுடன் மிகுந்த கவலையோடு பார்த்துக் கொண்டே நின்ற அம்பலக்காரருக்கு ஒரு கணம் அந்த வெள்ளம், குஞ்சான் வேளாரின் கண்களிலிருந்து கன்னங்களில் ஓடிய கண்ணீரைப் போலத் தோற்றமளித்தது. உடனே கண்களை இறுக மூடிக் கொண்டார். எனினும் அம்பலக்காரரின் உடலெங்கும் ஒருமுறை புல்லரித்தது!



இலேசான, சுலபமாகக் கழற்றி இணைக்கக் கூடிய புதுமாதிரி சைக்கிளை இங்கிலாந்து பள்ளி மாணவர் ஜான் ஸைண்டன்தறாம் உருவாக்கியுள்ளார். கண்காட்சியில் இதனைச் சோதித்துப் பார்த்துக் கேள்விக் கணைகள் தொடுக்கிறார் சார்ல்ஸ் இளவரசர். தமது சைக்கிளை மலிவு விலையில் தயாரிக்கலாம் என்றும் எந்த வயதினருக்கும் ஏற்ப சைக்கிளின் உயரத்தைக் கூட்டிக் குறைத்துக் கொள்ளலாம் என்றும் மாணவர் ஸைண்டன்தறாம் கூறுகிறார். '1979ம் ஆண்டின் சிறந்த இளம் பிரிட்டிஷ் இன்ஜினியர்' என்ற பட்டம் கிடைத்தது இவருக்கு.

மூன்றாவது மாப்பிள்ளை

—ஹேமா ஆனந்ததீர்த்தன்—

மகாலிங்கத்தின் கடைசிப் பெண்ணுக்கு— அதாவது மூன்றாவது பெண்ணுக்கு — கல்யாணம் நிச்சயமாகி விட்டது. மாப்பிள்ளை பம்பாயில் பாபா அணுசக்தி நிலையத்தில் ஓர் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தான். கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்.

மகாலிங்கத்துக்கு ரொம்பவும் திருப்தி. தமது மூன்று பெண்களுக்கும் நல்ல நல்ல இடங்களில் வரன்கள் கிடைத்துவிட்டது பற்றி.

முதல் மாப்பிள்ளை டாக்டர். கல்யாணம் ஆவதற்கு முன்பே யு. கே.யில் ஒரு ஹாஸ்பிடலில் வேலைக்கும் இருந்து கொண்டு சொந்தமாகவும் தொழில் நடத்தி வந்தான். எக்கச்சக்கமாக வருமானம். கல்யாணம் செய்து கொள்வதற்காகவே இந்தியாவுக்கு வந்து மகாலிங்கத்தின் மூத்த மகள் ராஜேசுவரியைப் பார்த்து, அவளுடைய அழகில் தேன் குடித்த நரி போல் சொக்கி, சம்பிரதாயங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் பெண் பார்க்கும் நிகழ்ச்சியின்போதே தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டான். அவன் பெற்றோர்கள் பேசுவதற்கே இடம் வைக்காமல் அவனே எல்லாவற்றையும் பேசி விட்டான். பேசிவிட்டான் என்றால் என்ன? வரதட்சிணை வேண்டாம், ஜானவாசம் வேண்டாம், ஊர்கோலம் வேண்டாம் என்று எல்லாம் ஒரே வேண்டாம் பல்லவிதான். எந்த விதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல் 'சிம்பிளா'கக் கல்யாணத்தை நடத்த வேண்டுமென்று நிபந்தனை போட்டான். மகாலிங்கத்துக்குச் செலவு மிச்சம். அவருடைய சம்பந்திகளுக்கு இதில் குறையிருந்தாற்போல் தோன்றியது. ஆனால் மகனை எதிர்த்து அவர்களால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அப்படியெல்லாம் இருந்தும் அந்த அறுபத்தைந்தாம் வருடத்திலேயே கல்யாணத்துக்கு இருபத்தையாயிரம் ரூபாய் வரையில் செலவழிந்தது. பிராவிடண்ட் பண்டிலும், எல். ஐ. ஸி. பாலிசியின் பேரிலும், நண்பர்களிடமும் கடன் வாங்கி ஜாம் ஜாம் என்று கல்யாணத்தை நடத்தி விட்டார்.

கல்யாணம் நடந்த கையோடு மனைவியை அழைத்துக் கொண்டு விமானம் ஏறிவிட்டான் மாப்பிள்ளை பாஸ்கரன்.

இரண்டாவது பெண் மாலதி ராஜேசுவரியை விட எட்டு வயது சின்னவள். ஆகவே ராஜேசுவரியின் கல்யாணம் நடந்து ஒன்பது வருடங்களுக்குப் பிறகுதான் மாலதியின் கல்யாணம் நடந்தது. மாலதிக்கு வந்த வரன் ஐ. ஏ. எஸ். ராஜேசுவரியை விட மாலதி இன்னும் நல்ல அழகி. அப்புறம் ஐ. ஏ. எஸ். வரன் சிந்தை மயங்குவதற்குக் கேட்பானேன்? அதோடு கூட மாப்பிள்ளைப் பையனுக்குப் பெற்றோர் இருக்கவில்லை. அவன் எட்டு வயதுப் பையனாக இருக்கும் போதே இருவரும் ஆறே மாத இடைவெளியில் ஒருவருக்குப் பின் ஒருவராகக் காலமாகிவிட்டார்களாம். பையன் மாமா வீட்டில் வளர்ந்து, படித்து, பெரியவனாகி ஐ.ஏ. எஸ்.ஸும் ஆகிவிட்டான். மாமா மாமி ரொம்ப நல்லவர்கள்.

முதல் பெண்ணின் கல்யாணத்துக்குச் செய்தது போலவே இரண்டாவது பெண்ணின் கல்யாணத்துக்கும் எல்லாவற்றையும் செய்ய நிச்சயித்தார் மகாலிங்கம். ஆனால் ஒன்பது வருடங்களில் விலைவாசிகள் ஏகமாக ஏறிவிட்டதால் இருபத்தையாயிரம் என்பது இப்போது முப்பதாயிரத்துக்கு வந்துவிட்டது. எவ்வளவு முயன்றும் மகாலிங்கத்தால் அவ்வளவு பணத்துக்கு ஏற்பாடு செய்ய முடியவில்லை. ஒரு பத்தாயிரம் ரூபாய் துண்டு விழுந்தது.

''என்ன செய்யறதுன்னு தெரியலியே'' என்று கவலைப்பட்டார் மகாலிங்கம்.

அவர் மனைவி உமா, ''எனக்கு ஒண்ணு தோணறது. நீங்க என்ன சொல்லுவேளோ'' என்று இழுத்தாள்.

''என்ன சொல்லேன்.''



''ராஜேசுவரி ஆத்துக்காரரைக் கேட்டுப் பார்த்தா என்ன?''

''நல்லாயிருக்கு. மாப்பிள்ளை கிட்டயா கையேந்தறது?''

''அவரொண்ணும் தப்பா நினைச்சுக்க மாட்டார்.''

''அவர் நினைச்சுக்காட்டாலும் அவ ரோட அப்பா அம்மா ஏதாவது சொல்லி விட்டாள்னு என்னாலே தாங்க முடியாது.''

''அவாளுக்குத் தெரியாம இருக்கணும்னு நாம கேட்டுண்டா மாப்பிள்ளை அதுக்குத் தக்கபடி இருந்துப்பார். ராஜேசுவரிக்கு எழுதி அவர் மனத்தைத்தெரிஞ்சுக்குவோம்.''

''அப்படியே அவர் கொடுத்தாலும் எப் படித் திருப்பித் தரதாம்?''

''ரிடையர் ஆனதுக்கப்பறம்தான் பிரா விடண்ட் பண்ட், கிராஜுவிடி பணமெல்லாம் வந்ததுக்கப்புறம்தான் கொடுக்க முடியும்னு கண்டிப்பா சொல்லிடணும். அப்புறம் மனஸ் தாபத்துக்கு வழி வெச்சுக்கக் கூடாது.''

''சரி பார்ப்போம். நீ சொல்றே. எனக்கு அது சரின்னு தோணல்லே'' என்றார் மகா லிங்கம்.

கடைசியில் வேறு வழி ஏதும் தோன்றாமல் மாப்பிள்ளை பாஸ்கரனுக்கு எழுதினார் மகா லிங்கம். நம்பிக்கை இல்லாமல்தான் எழுதி னார். ஆனால் அவரே ஆச்சரியத்தில் திகைத்துப் போகும்படி அவர் கடிதம் எழுதிய பதினைந்து நாட்களுக்கெல்லாம் மாப்பிள்ளையிடமிருந்து 600 பவுனுக்கு டிராப்ட் வந்து விட்டது. அதை மாற்றியதில் பத்தாயிரம் ரூபாய்க்குச் சிறிது அதிகமாகவே கிடைத்தது. மாப்பிள்ளைதான் கல்யா ணத்துக்கு யு.கே.யிலிருந்து வர முடியவில்லை.

இரண்டாமவளுக்கும் மூன்றாமவளுக்கும் வயது வித்தியாசம் அதிகமில்லை. மாலதி பிறந்த இரண்டு வருடங்களுக்குள்ளாகவே பானு பிறந்தாள். ஆகவே மாலதியின் கல்யாணம் நடந்த இரண்டு வருடங்களுக் கெல்லாம் பானுவின் கல்யாணத்தையும் நடத்த வேண்டியதாகப் போயிற்று.

இந்த இரண்டு வருடங்களில் விலைவாசி அவ்வளவு அதிகமாக ஏறியிருக்கவில்லை என் றாலும் மாப்பிள்ளை வீட்டாரின் டிமாண்ட் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. முதல் இரண்டு பெண்களுக்குச் செய்ததை விட அதிகமாகச் செய்யத் தான் விரும்பவில்லை என்று மகாலிங்கம் சொல்லிப் பார்த்தார். பிள்ளை வீட்டார் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அதிகக் கண்டிப்புக் காட் டினால் நல்ல வரன் கைநழுவிப் போய்விடுமோ என்கிற பயம் தோன்றியது. அதுவுமல்லா மல் பெண் பார்க்க ராம்ஜி வந்த அன்றைக்கே அவனுடைய அழகில் சொக்கிப்போன பானு அவனைத் தவிர வேறு யாரையும் செய்துகொள்ள மாட்டேன் என்று ஒரே பிடிவாதமாக நின்றாள்.

ஆகவே வேறு வழியின்றி பானு—ராம்ஜி விவாகம் நிச்சயிக்கப்பட்டது. பட்ஜெட் போட்டுப் பார்த்தபோது எட்டாயிரம் போலத் துண்டு விழுந்தது. மகாலிங்கம் திணறத் தொடங்கினார்.

''மாலதி கல்யாணத்துக்குத்தான் பெரிய மாப்பிள்ளை உதவி பண்ணினார். இப்ப யாரைப் போய்க் கேட்கிறது? அவரையே மறுபடியும் கேட்க முடியாது. அவர் கிட்ட வாங்கின பணத்துக்கு நாம வட்டி கூடக் கொடுக்கிறதில்லே!''

''ரெண்டாவது பொண்ணு கல்யாணத் துக்கு முதல் மாப்பிள்ளை உதவினார். மூணா வது பொண்ணு கல்யாணத்துக்கு ரெண் டாவது மாப்பிள்ளை ஹெல்ப் பண்ணட்டும். மாலதி ஆத்துக்காரரையே கேளுங்கோ'' என்றாள் உமா.

''நீ என்ன விளையாடறியா?''

''விளையாடல்லே. நிஜமாத்தான் சொல் றேன். மாலதி என்கிட்டச் சொன்னா: அவ ஆத்துக்காரர் நிறையப் பணம் சேர்த்து வச்சிருக்காராம். பாங்கிலே இருக் கிற பணம் இல்லாமெ ஷேர், யூனிட், இன்ஷூரன்ஸ் இப்படி எல்லாம் வேறே சேர்க்கறாராம். நீங்க ஒரு வார்த்தை கேட் டுப் பாருங்களேன்.''

''நான் மாட்டேன். எனக்குக் கூச் சமா யிருக்கு!''

''சரி, நானே மாலதிக்கு எழுதிக் கேட்கறேன்.''

''என்னவேணா செய்யி.''

உமா மாலதிக்கு எழுதின ஒரே வாரத்தில் மாலதியே கையில் பணத் தோடு வந்து விட்டாள். பானுவின் கல்யாணம் குறைவின்றி விமரிசையாக நடந்து முடிந்து விட்டது.



பானுவின் கல்யாணம் முடிந்த இரண்டு வருடங்களுக்கெல்லாம் மகாலிங்கம் ரிடைய ராகிவிட்டார். பிராவிடெண்ட் பண்ட்,

ரொக்கடி பணமெல்லாம் கைக்கு வந்ததும் இரண்டு மாப்பிள்ளைகளுக்கும் கொடுக்க வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார். வட்டியோடு கொடுக்க வேண்டு மென்றுதான் அவர் நினைத்திருந்தார். ஆனால் மாப்பிள்ளைகளோ அசலே வேண்டாமென்று ஒரே பிடிவாதமாக இருந்தார்கள். அவர் களைச் சம்மதிக்க வைத்துப் பணத்தை வாங் கிக்கொள்ளச் செய்வதற்கே பெரும்பாடாகப் போய்விட்டது. வட்டியைப் பற்றிய பேச் சையே அவரால் எடுக்க முடியவில்லை.

மகாலிங்கத்துக்கும் உமாவுக்கும் மனம் நிறைந்திருந்தது. தங்கள் அதிருஷ்டத் தையும் பாக்கியத்தையும் நினைத்து அவர்கள் பூரிக்காத நாட்களே இல்லை.

''ஆனா ஒன்னு சொல்றேன் உமா. முதல் ரெண்டு மாப்பிள்ளைகள் மாதிரி மூணாவது மாப்பிள்ளை இருக்க மாட்டார். அது நிச் சயம்.''

''வேண்டாமே! நமக்கு இன்னொரு பொண்ணு கல்யாணத்துக்கு இல்லியே? அவரைக் கேட்க வேண்டிய அவசியமும் வரா துன்னு வெச்சுக்குங்க.''

''அப்படி வந்தாலும் அவர் ஹெல்ப் பண் ணுவாருன்னு எனக்குத் தோணலே. ஒரு பேச்சுக்குச் சொல்றேன். முதல் மாப்பிள்ளை அவங்க பேரண்ட்ஸுக்குத் தெரிஞ்சோ தெரி யாமலோ உதவி பண்ணினார். ரெண்டாவது மாப்பிள்ளைக்கு அவர் என்ன செஞ்சாலும்



பாரதியார் வறுமையில் வாடிக் கொண்டிருந்த சமயம். அவரது கறுப்புக் கோட்டு கிழிந்து விட்டது. கிழிந்த இடத்தை, மனைவியின் கறுப்புப் புடவைத் துணியால் ஒட்டுப் போட்டார். ஒட்டுப்பகுதியில் தைக்கப் பட்டிருந்த வெள்ளை நூல் பளிச் சென்று தெரிந்தது. நூலின் மேல் பேனாவின் மையைத் தடவினார். கோட்டைப் போட்டுக் கொண்டார்!

கேக்கறதுக்கு யாருமில்லே. மூணாவது மாப் பிள்ளை அப்படி இல்லையே. அப்பா அம்மா கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டார் போலிருக்கு. நமக்கு ஒரு தேவைன்னு கேட்டோம்னு அவர் கிட்டேந்து ஹெல்ப் கிடைக்கும்னு எனக்குத் தோணலே.''

''உங்களுக்குப் போது போகாட்டா போய் உட்கார்ந்து எதையாவது படியுங்கோ. இது என்னத்துக்கு இப்போ அநாவசியமான பேச்சு?''

''உனக்கேண்டி இவ்வளவு கோபம் பொத் துண்டு வரது? உன் மாப்பிள்ளையை நான் இப்ப என்ன சொல்லிவிட்டேன்?''

''ஆமா. எனக்கு மட்டும்தான் மாப் பிள்ளை. உங்களுக்கு இல்லே. பேச்சைப் பாரு.''

''மகாலிங்கம்!'' என்று கூப்பிட்டபடியே தபால்காரர் ஒரு கவரை வாசலிலிருந்து கம்பிக் கதவு வழியே உள்ளே எறிந்துவிட்டுப் போனார். உமா போய்க் கவரை எடுத்துக் கொண்டு வந்து அவர் கையில் கொடுத்தாள். ''உன் மூன்றாவது மாப்பிள்ளைகிட்டேருந்து தாண்டி வந்திருக்கு. அவனுக்கு நூறாயுசு'' என்று கூறிக் கவரைப் பிரித்தார்.

கடிதத்தைப் படிக்கும்போதே மகா லிங்கத்தின் முகம் மலர்ந்தது.

''என்னவாம்?'' உமா பரபரத்தாள்.

பல்லெல்லாம் வெளியே தெரியும்படியே மகாலிங்கம் படித்துக் கொண்டிருந்தார். ''நீங்களே சந்தோஷப்படறேளே. எனக் கும் சொல்லிவிட்டுச் சந்தோஷப்படக் கூடாதா? பானு குளிக்காம இருக்காளா?''

''இல்லேடி உமா. நான் தப்புக் கணக்குப் போட்டுட்டேண்டி. நம்ம மாப்பிள்ளைகளிலே யாருமே சோடையில்லே. ஒன்னு மாணிக் கம், ஒன்னு முத்து, ஒன்னு வைரம்'' என்றார். அவர் தொண்டை தழுதழுத்தது.

''நான் சொல்லலியா? என்ன எழுதி யிருக்கார்?''

''படிக்கிறேன், கேள்.... பானு சொன் னான். இன்னும் மூணு மாசத்திலே உங்கள் சஷ்டியப்த பூர்த்தி வருவதாக. ஆனால் நீங்கள் அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், வீண் செலவு என்று சொல்கிறீர்களாம். நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். உங்கள் சஷ்டி யப்த பூர்த்தியை விமரிசையாகக் கொண் டாடி நாங்களாம் உங்கள் ஆசீர்வாதத் தைப் பெற வேண்டாமா? அதற்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக லீவு போட்டுவிட்டு நானும் பானுவும் அடுத்த திங்கட் கிழமை புறப்பட்டு வருகிறோம். இந்த அறுபதாம் கல்யாணத்துக்காக நீங் களோ, என் ஷட்டகர்களோ ஒரு பைசா செலவழிக்காமல் எல்லாச் செலவுகளையும் என் பொறுப்பில் விட்டு விட வேண்டு மென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள் கிறேன்...''

மகாலிங்கத்தின் கண்களில் துளிர்த்திருந்த நீர் முத்துக்களைக் கண்டு உமாவின் உள்ள மும் நெகிழ்ந்தது.

கடுகு பதில்கள்!



⌘ இ. முருகவேள், கெங்கவல்லி

கே. ஒரு பள்ளி ஆசிரியருக்குத் தங்கள் அறிவுரை என்ன?

ப: அறிவுரை தருவதைவிட வேண்டுகோள் விடுக்கிறேன். உங்களிடம் கல்வி கற்க வரும் குழந்தைகளை அடிக்காதீர்கள். அடியால் எந்த மாணவனும் கெட்டிக்காரனாக ஆனதில்லை; திருந்தியதும் இல்லை; ஆசிரியர் அடித்தார் என்று வீட்டில் போய்ச் சொல்லி ஆறுதலும் பெற முடியாது அவர்களால். 'நீ தப்பு பண்ணியிருப்பாய்' என்று சொல்லி அங்கும் அடி விழலாம். என் நெஞ்சின் அடியில் அதிர்ச்சியையும் சுழற்சியையும் ஏற்படுத்தும் இரண்டு விஷயங்களில் ஒன்று மாணவனை ஆசிரியர் அடிப்பது. அடிக்காதீர்கள், ப்ளீஸ்!

⌘ வி. எஸ். அனந்தராமன், கும்பகோணம்

கே: ஏர் உழுவது முதல், அரிசியாகக் கடைக்கு வருவது வரை உழைப்பது மாடு. அதற்கு வெறும் வைக்கோலைக் கொடுப்பதைப்பற்றி மாடு என்ன நினைக்கும்?

ப: ''இந்த மனுஷன் ஒரு வேலையும் செய்யவில்லை. அவன் அரிசியைத் தின்னட்டும். நமக்கு ருசியான வைக்கோல் கிடைக்கிறதே!'' என்று குஷிப்பட்டுக் கொள்ளும்.

⌘ ஜி. ஜெயராமன், எரவாஞ்சேரி

கே: கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்' புஸ்தகங்களில் உங்களைக் கவர்ந்தது?

ப: முதல் தொகுதி முதல் தரம்.

⌘ ஆர். சீனிவாசன், திருச்செந்தூர்

கே: உமது வாழ்விலே அனுபவித்த கசப்பான அனுபவம் பற்றி...

ப: தனிப்பட்ட கஷ்டங்களை வெளியே சொல்வது நாகரீகம் அல்ல. அவரவர்க்கு அவரவர் கஷ்டங்கள், கசப்புகள், ஏமாற்றங்கள் இருக்கும்போது, நம்முடையதை வேறு எதற்குச் சொல்ல வேண்டும். உங்களுக்கு எட்டிக்காயாகக் கசக்கும் அனுபவம், மற்றவருக்கு எந்த விதத்தில் பயன் தரும்? இத்தகைய அனுபவங்களால் ஏற்பட்ட பாடங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

⌘ இல. மணிவண்ணன், ராயப்பேட்டை

கே: நீங்கள் படித்து ரசித்த கேள்வி பதில் எது?

ப: துக்ளக்கில் வந்தது. கேள்வி: நீர் என்ன மனிதரா? சோ பதில்: என்னமோ கொஞ்சம் கெட்டிக்காரனாக இருப்பதால் என்னைத் தேவன் என்று நினைத்துக் கொள்வதா?

⌘ என். ரேவதி, சென்னை-17

கே: தங்கள் படைப்புகளில் கமலா பெயர் அடிக்கடி வருவதேன்?

ப: கமலா என்னை ஆட்டிப் படைப்பவர்: (மாவு) ஆட்டி, (இட்லி செய்து) எனக்குப் படைப்பவரும் கூட!

⌘ கோவி. பரஞ்சோதி, காட்பாடி

கே: சரித்திர நாவலுக்கும் சமூக நாவலுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்ன?

ப: நேற்றையக் கதை சமூகக் கதை, முந்தாநாள் கதை: சரித்திரம்.

⌘ மதுசூதன் கண்ணன், தேவகோட்டை

கே: காமிரா நிவாஸ் மேதையா?

ப: நிவாஸ் அசகாய சூரர். காமிராவின் மூலம் ஓவியம் வரைகிறவர், கவிதை எழுதுகிறவர். சமீப காலங்களில் காமிராமேன் பலர் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள் என்றாலும் பல வருடங்களுக்கு முன்பு வின்சென்ட்டிற்குக் கிடைத்த புகழைப் போல இப்போது நிவாஸுக்குக் கிடைத்திருக்கிறது. (ஆமாம். இவ்வளவு கெட்டிக்காரராக இருக்கும் இவர், ராதிகாவை அடிக்கடி புரோஃபைலில் (பக்கவாட்டில்) எடுப்பதைத் தவிர்க்கலாம் அல்லவா? ராதிகாவிற்குத் தலை சற்று நீண்டு இருப்பதுடன் நடுவே சிறிது இறக்கமாகவும் உள்ளதால் பக்கவாட்டுப் போஸ்கள் அவ்வளவு நன்றாக இல்லையே!)

⌘ வி. கிருஷ்ணராவ், நெல்லிக்குப்பம்

கே: எடிசனின் வரலாறு பயன் தரக்கூடியது என்று கூறியது நூற்றுக்கு நூறு உண்மை. உங்களைப் பாராட்டுகிறேன். என் பேரக் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்க விரும்புகிறேன். புத்தகம் எங்கு கிடைக்கும்?

ப: தமிழில் இப்புத்தகம் வெளிவந்திருக்கிறதா என்று தெரியவில்லை. (யாராவது பிரசுரித்திருந்தால் தெரிவிக்கலாம்) ஆங்கிலப் புத்தகமும் இந்தியாவில் வெளியாகவில்லை. எடிசனின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இச்சமயத்தில் யாராவது பிரசுரித்தால் நல்லது.

ரூ. 5 பரிசு பெறுபவர்:

இ. முருகவேள்
57, ஆத்தூர்ப்பாதை,
கெங்கவல்லி 636105

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

உலகிலோர் ஒப்பிலா
மணி யென அவளுக்கு
உணர்த்திடும் அன்புறவே.



everest/79/PP/196-tm

ஆறுதல் தேவையம்மா அடிக்கடி அவளுக்கு.

அவளை சீராட்டி வளர்க்க நீங்கள் எத்தனையும் செய்வீர்கள்: குளிப்பாட்டி, உடை உடுத்தி, உணவூட்டி, உடல் நலம் பேணிக் காப்பதில் நீங்கள் எடுத்துக் கொள்ளும் கவனம்தான் எவ்வளவு?

கருத்துள்ள அதே கவனம் பளிச்சிடுமே நீங்கள் அவளுக்கு தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டிலும். திண்ணம் அதுவே, தீவிர சுகாதார முறையில் கைபடாத் தூய்மையோடு தயாரித்த பிஸ்கட்.

நீங்கள் அவளுக்கு ஊட்டும் உணவிலே உள்ளதைப் போன்ற நிகரான ஊட்டச்சத்து அதிலே: பால், சர்க்கரை, க்ளுகோஸ், செரிப்பதற்கு எளிதாக இழைய அரைத்த கோதுமை.

கண்மணிக்கென்று உங்கள் கரம் தொடும் அந்த பிஸ்கட் கரகரப்பானது, சுவை மிக்கது. கொரித்து, ரசித்து மகிழ்வாளே உங்கள் குழந்தை.

எண்ணிப் பாருங்கள்: 7 உலக விருதுகளைவென்ற இந்தியாவின் அதிநவீன பிஸ்கட் தயாரிப்பாளர்களின் படைப்பை.

பாப்பா படம் போட்ட இந்த வண்ணமய உறையை பார்த்து வாங்குங்கள்.



7, உலக விருதுகளை வென்றது.

பார்லே
க்ளுகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

டி.எம்.எஸ் திருமணம்!



டி. எம். எஸ்.

''சத்யஜித் ரே, ஷியாம் பெனகல், மிருணாள் சென் போன்றவர்கள் எடுக்கும் படங்களைத்தான் நான் விநியோக உரிமை பெற்று வெளியிடுவேன். மற்ற கமர்ஷியல் படங்களை நான் தொடமாட்டேன்.'' என்று ஆணித்தரமாகக் கூறுகிறார் கோமினி கிருஷ்ண மூர்த்தி. சென்னையார் குழுவில் உள்ள இவர், பல வருடங்கள் உதவி டைரக்டராக பணியாற்றி உள்ளார்.

''கலைத்தாகம் உள்ள இதயங்களுக்கு நான் செய்யும் சிறு உதவி இது. இத்தகைய கலைப் படங்களைத் திரையிடுவதில் பல பிரச்னைகள் உள்ளன. ஆனாலும் நான் தளராமல் இந்த வகைப் படங்களையே திரையிட்டு வருகிறேன். கொஞ்சம் கொஞ்சமாக முயன்று அதிக அளவு, மக்களை இம்மாதிரியான படங்களைப் பார்க்க வைத்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இதையே நான் சத்யஜித்ரேயைப் பார்த்தபோதும் கூறினேன். அவர் அதிசயித்தார். நான் சத்யஜித் ரேயை பற்றி ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன். விரைவில் வெளி வரும்'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

• • •

பத்திரிகையாளர்கள் பலர் டைரக்டர்களாகி வருகிறார்கள். சமீபத்தில் அப்படி டைரக்டர் ஆனவர் மதி ஒளி சண்முகம். அவரது படத்தின் பெயர் ''காஷ்மீர் காதலி''. லதாவின் தம்பி ராஜ்குமார் தான் இப்படத்தின் கதாநாயகன். இந்தப் படத்தில் வில்லனாக நடிக்கும் சந்திரகாந்த் ஆர்வமுள்ளவர். ரஜினிகாந்தைப் போலவே இருப்பவராம். ''நாங்கள் காஷ்மீர் சென்றவுடன் ஒரு காட்சியில் மோட்டார் சைக்கிளில் வருவதுபோல் சந்திரகாந்துக்கு ஒரு காட்சி இருப்பதாகச் சொன்னோம். 'எனக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டத் தெரியாதே!' என்றார் சந்திரகாந்த். அத்துடன் நில்லாமல், 'ஒரு மணி நேரம் டைம் கொடுங்கள்' என்று கூறி விட்டுச்சென்றார். நாங்கள் காட்சி எடுக்கும்போது ஜோராக ஓட்டினார். விடாது பயிற்சி செய்து ஒரு மணி நேரத்தில் கற்றுக் கொண்டு வந்து விட்டது எனக்கு வியப்பாகத்தான் இருந்தது'' என்றார் சண்முகம்.

• • •

இருபத்தைந்து ஆண்டுகாலமாக தமிழ் திரைப்படத் துறையில் முன்னணிப் பாடகராக இருக்கும் டி. எம். சௌந்தரராஜன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டிருக்கிறார். இது எப்படி வெளியே வந்தது

✻ மனோரமா மகன் பூபதியுடன்



✻ சத்யஜித்ரே - கோமினி கிருஷ்ணமூர்த்தி



சினி மசாலா "சலன்"



✻ காஷ்மீர் காதலி படத்தில் இந்து, சந்திரகாந்த்

என்று கேட்கிறீர்களா? டி. எம். சௌந்தர ராஜன் இலங்கைக்குக் கச்சேரி நடத்தச் சென்றிருந்தார். இவரது குழுவில் பல வருடங்களாகப் பாடிக்கொண்டு வரும் பாடகி லலிதாவும் சென்றிருக்கிறார். இலங்கையில் இவர்களது மெல்லிசைக் கச்சேரிக்கான விளம்பரங்களில் டி. எம். சௌந்தர ராஜனும் திருமதி லலிதா சௌந்தரராஜனும் பாடுவார்கள் என்று விளம்பர படுத்தியிருக்கிறார்கள். இலங்கை வானொலியிலும் இவ்வாறே அறிவிப்புக்கள். டி. எம். சௌந்தர ராஜன் சென்னைக்கு வந்தவுடன் அவரிடம் இதைப்பற்றிக் கேட்டேன். "ஆமாம், என்னுடன் பாடும் லலிதாவை நான் திருமணம் செய்துகொண்டு விட்டேன்" என்றார் அவர். "எப்பொழுது, எங்கே?" இது என் கேள்வி. சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் திருத்தணியில் தெய்வ சந்நிதானத்தில் திருமணம் நடந்தது என்றார் டி. எம். எஸ். இவரது முதல் மனைவி பெயர் சுமித்ரா. ஆறு குழந்தைகள் பிறந்தன. இரண்டு பேர் இறந்துவிட்டனர். டி. எம். எஸ். மகன் செல்வகுமாரும் நன்றாகப் பாடுகிறார்.

• • •

ஷியாம் பெனகலின் பல படங்களில் நடித்த ஸ்மிதா படேலுக்கு கமர்ஷியல் படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆசை துளிர் விட்டிருக்கிறது. காரணம் அதன் வழியாகத் தான் நிறையப் பணம் கிடைக்கும். யாராவது பணம் வேண்டாமென்று சொல்வார்களா என்ன?" நான் கலைப்படங்களில் நடிப்பதற்கான காரணம் அதனுடன் நான் ஒன்றிப் போவதுதான். கமர்ஷியல் படங்களில் நடிக்கும்போது படமெடுக்கும் நேரம், காலம் இவை எல்லாம் புதிராக இருக்கின்றன. திடீரென்று வருகிறார்கள்; நடிக்க வேண்டுமென்கிறார்கள். அது எப்படி முடியும்?" என்று கேட்கிறார் ஸ்மிதா.

• • •

மனோரமா 350 படங்களில் நடித்திருக்கிறார் என்பது பழைய செய்தி. இப்பொழுது அவருடைய ஆசை எல்லாம் தம்முடைய மகனை ஒரு நல்ல நடிகனாக்கி விடவேண்டும் என்பதுதான்! பூபதியும் தாயின் சொற்படியே நடிப்பதில் அதிக விருப்பம் கொண்டுள்ளார். "நான் எனக்கு மேக்கப் போட்டுக் கொள்வேன். ஆனால் மற்றவருக்கு மேக்கப் போட்டுப் பழக்கமில்லை. பூபதிக்கு நான் தானே மேக்கப் போடவேண்டும். அப்படி ஒருமுறை மேக்கப் போடும்போது 'போம்மா உனக்கு மேக்கப் போடவே தெரியவில்லை' என்றானே பார்க்கலாம்! எனக்கு உள்ளூர சிரிப்புத்தான் வந்தது" என்றார் மனோரமா.

X-RAY

சந்திரசேகர்

'விமரிசனத்தின்று தப்ப வேண்டுமானால் எவன் விமரிசிக்கிறானோ அவனிடமே பொறுப்பை ஒப்படைத்து விடவேண்டும்' என்கிற தீர்க்கதரிசனத்தினாலேயோ என்னவோ ஜனதா கட்சிப் பிறந்ததும் மொரார்ஜி, சரண்சிங், ஜெகஜீவன், வாஜ்பாய், பகுகுணா ஆகியோர் 'சந்திரசேகர்தான் ஜனதா கட்சித் தலைவர் பதவிக்கு ஏற்றவர்' என்று ஒரு மனதாக முடிவு எடுத்து அப்பதவியை சந்திரசேகர் தலையில் கட்டி விட்டனர். புத்திசாலித்தனமான காரியம்.



ஒரு தீவிர இடதுசாரிக்காரரை மிதவாதியாக்கிய பெருமையை இவரும் பெற்றனர்.

அரசு பதவிக்கு ஆசைப்படாத ஒரு ஜனதா தலைவர் உண்டு என்றால் அப்பெருமை 53 வயதான சந்திரசேகரைத் தான் சேரும்.

முன்னாளைய பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினரான இவர் நம் நாட்டில் உண்மையானதோர் சோஷலிச அமைப்பை நிச்சயம் ஏற்படுத்த முடியும் என்று நம்பினார்.

'சோஷலிஸ சமுதாயம் அமைக்கும் முயற்சியில் உதவி தாருங்கள்' என்று நேரு விடுத்த அழைப்பை ஏற்று அசோக் மேதா திட்டக் கமிஷன் தலைவரானபோது அவரை பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, கட்சியிலிருந்து விலக்கியது. இந்நடவடிக்கையை எதிர்த்து பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினின்று விலகினார் சந்திரசேகர். காங்கிரஸில் சேர்ந்தார்.

மோகன் தாரியா, ராம் தன், கிருஷ்ண காந்த் ஆகியோருடன் சேர்ந்து 'இளம் துருக்கியர்' என்ற அடைமொழியுடன் விளங்கினார். வி. வி. கிரியை ஜனாதிபதியாக்கும் இந்திராவின் முயற்சிக்கு வெற்றி தேடித்தந்து காங்கிரஸ் பிளவுக்கு ஓர் உப கருவியாக இருந்தார்.

வங்கிகள் தேசியமயமாக்கப் பட்டபோது 'இதோ சோஷலிசம் வந்துவிட்டது' என்று எகிறிக் குதித்து ஏமாந்தவர்களில் இவரும் ஒருவர்.

'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய்' இந்திராவின் நடவடிக்கைகள் அனைத்துக்கும் அடிப்படை சுயநலம்தான் என்று இவர் புரிந்து கொள்வதற்கும் நெருக்கடிநிலை பிரகடனம் வருவதற்கும் சரியாக இருந்தது; சிறை வைக்கப்பட்டார்.

காந்தி தேசாய் விவகாரம் புள்ளியாய் இருந்த போதே மொரார்ஜியைக் கண்டித்தவர். புள்ளி பெரும் வட்டமான சமயத்தில் கைகள் கட்டப்பட்டுக் கிடக்க மொரார்ஜியைத் தாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்.

ஜனதா பதவியேற்றதும் காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் மாநில சட்டசபைகளைக் கலைப்பது என்பது அரசியல் தர்மத்திற்கு புறம்பானது என்று ஜனதா தலைமை காரியக் கமிட்டியில் வாதிட்ட இவர் சில மாதங்களுக்குள் 'அர்ஸ்' மந்திரிசபை உள்ள கர்நாடக சட்டசபையை கங்கணம் கட்டிக் கொண்டு கலைக்க முன்னின்றது இவரது துரித மனமாற்றத்திற்கு இன்னுமோர் சான்று.


சமீபத்தில் இவரிடம், ''வரப்போகும் தேர்தலில் ஜனதா வெற்றிபெற்று ஆட்சி அமைத்தால் ஜனாதிபதி சஞ்சீவ ரெட்டிமேல் நடவடிக்கை எடுப்பீர்களா?'' என்று கேட்டபோது, ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால், சஞ்சீவரெட்டி ஒரு நாள்கூட ஜனாதிபதியாக இருக்க மாட்டார்'' என்று திட்டவட்டமாகப் பதில் அளித்துள்ளார்

'அத்தைக்கு மீசை முளைத்தால் தானே சித்தப்பா?' என்று சஞ்சீவ ரெட்டி மனைக்குள் சிரித்துக் கொள்கிறாரோ என்னவோ?

— பி. ரங்கநாயகி

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

புதிய திருப்பம்



ஒளி கூட்டும் ஸ்டைல்கள்—
எழில் காட்டும்
புதிய பாணிகள்— உங்கள்
அழகுக் கோலத்தை
வெளிப்படுத்தும்.

மபத்லால் இண்டஸ்ட்ரீஸ் நியூ ஷொராக் மில்ஸ்
மபத்லால் ஃபைன்

சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள்,
சேலைகள், மற்றும் உடுப்புத் துணிகள்

MAFATLAL INDUSTRIES · MAFATLAL FINE

79/MFI/312-tm

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேசிய காசு



MAC.T/43 TAM